# இலங்கை ஊடகவியலாளர்கள் கொலை:

# மயில்வாகனம் நிமலராஜன் வழக்கு

செப்ரெம்பர் 2025



REDRESS

Ending torture, seeking justice for survivors

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# நிறைவேற்றுச் சுருக்கம்

பல ஊடகப் பணியாளர்களை மற்றும் பத்திரிகையாளர்களை கொலை செய்தவர்களை இலங்கை திட்டமிட்ட வகையில் பாதுகாத்து வந்துள்ளது. 2000ஆம் ஆண்டிற்கும் 2010 ஆம் ஆண்டிற்கும் இடையில் இடம்பெற்ற குறைந்தது 44 ஊடகப்பணியாளர்களின் கொலைதொடர்பில் ஒருவர்கூற பெறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படவில்லை. ஒருசில நீண்ட குற்றவில் விசாரணைகள் மட்டுமே நடைபெற்ற. சில வழக்குகளில் நீண்ட குற்றவியல் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் 2000 ஆம் ஆண்டுக்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்ற இந்தக் கொலைகளுக்காக ஒரு நபர் கூட பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப் படவில்லை. ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு போதிய பொறுப்புக்கூறல் இல்லாமை, தமது உயிர்களைப் பணயம் வைக்கும், சுய தணிக்கையை கடைப்பிடிக்கும் அல்லது நாடுகடந்து பணியாற்றும் நாட்டின் எஞ்சியுள்ள செய்தியாளர்களுக்கும் அச்சமூட்டும் செய்தியைக் கொடுக்கின்றது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் அனுபவித்த உளப் பாதிப்பின் அளவும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் பலர் கொலை அச்சுறுத்தல்களுடன் வாழ்வதற்கும், அல்லது தலைமறைவாக வாழ்வதற்கும் அல்லது இடம்பெயர்ந்து வாழ்வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் இவர்களில் ஏனைய பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மிகவும் பெயர் போன தமிழ் ஊடகவியலாளர்களில் ஒருவரான முப்பத்தொன்பது வயதான நிமலராஜன் மயில்வாகனம் பாதுகாப்பு படையினரதும் அரசியல்வாதிகளினதும் நலன்களை அச்சுறுத்தும் வகையில் இலங்கையின் போர் பற்றிய செய்திகளை வெளியிட்டமையால் கொல்லப்பட்டார். நிமலராஜன் மயில்வாகனத்தின் முழுக்குடும்பமுமே நாட்டை விட்டுத் தப்பி கனடாவிற்குச் சென்றது, அத்துடன் அவர்கள் இது வரை சொந்த நாட்டுக்குத் திரும்பவில்லை. ஆனால் ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் மயில்வாகனத்தின் மரணத்தை பத்திரிகையாளர் சங்கத்திலுள்ள அவரது நண்பர்கள் உண்மையோடு நினைவுகூருகின்றனர். இவர் பணியாற்றிய பிபிசி இலண்டனில் ஒரு சந்திப்பு அறைக்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது. ஆனால் அவரது கதையைத் தெரிந்தவர்கள் இப்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார்கள் அல்லது இறந்துவிட்டார்கள் அல்லது அந்த நிறுவனத்தை விட்டுச் சென்று விட்டார்கள். இந்த அறிக்கையானது, வரலாற்று ரீதியான மற்றும் சட்டபூர்வமான பதிவிற்காக ஊடகவியலாளர் நிமலராஜன் கொலைச் சம்பவத்தினைச் சுற்றியுள்ள தொடர்ச்சியான தண்டனை வழங்கப்படாமையை ஆவணமாக்குகிறது. அது பொறுப்பானவர்களை திட்டமிட்ட வகையில் தண்டிக்கத் தவறியமையை சுட்டிக்காட்டுகிறது – இவ்வாறு தண்டிக்கத் தவறியமை ஒருபோதுமே நீதிக்குமுன் நிறுத்தப்படாத சந்தேக நபர்களால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இலக்கு வைக்கப்பட்ட கொலைகள் உட்பட மேலும் மீறல்கள் இடம்பெறுவதற்கு துன்பியல் ரீதியாக வழிவகுத்திருக்கலாம்.

இந்தக் கொலை தொடர்பான பொலிசாரின் விசாரணை அதை எப்படி செய்யக்கூடாது என்பதற்கு சிறந்த உதாரணமாகும். குற்றம் இடம்பெற்ற இடம் ஒருபோதும் பாதுகாக்கப்படவுமில்லை பதிவும் செய்யப்படவுமில்லை, புகைப்படங்கள் எதுவும் எடுக்கப் படவில்லை அல்லது தடயவியல் ஆதாரங்கள் எதுவும் சேகரிக்கப்படவில்லை. பல இராணுவச் சோதனை நிலையங்களால் சூழப்பட்ட ஒரு உயர்பாதுகாப்பு வலையத்தில் இறுக்கமான ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது இந்தக்குற்றம் இடம்பெற்றிருப்பினும் நிமலராஜனின் வீட்டைச் சுற்றி ஒருபோதுமே பாதுகாப்பு வளையம் போடப்படவில்லை. அந்த இரவு கடமையில் இருந்த சில அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்வதற்குப் பல வருடங்கள் எடுத்தன. ஆனால் பலர் ஒரு போதுமே அடையாளங்காணப்படவில்லை அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

தடய அறிவியல் ஆதாரங்கள் சரியான முறையில் கையாளப்படவில்லை. அத்துடன் பகுப்பாய்வு முடிவு வருவதற்குப் பல வருடங்கள் எடுத்தன. நிமலராஜனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் மற்றும் அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் எந்த ஆதாரங்களும் எடுக்கப்படவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக விநோதமான முறையில் அவரது வங்கிக் கணக்கு ஆராயப்பட்டது. பாதுகாப்புப் படைகளின் உதவியுடன் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் சுதந்திரமாக சுற்றித்திரியவும், மேலும் கொலைகளைச் செய்யவும் பின்னர் நாட்டைவிட்டு வெளியேறவும் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் விசாரணை செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறியபோது அதனை மேலும் ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன் ஒருபோதுமே குற்றஞ்சாட்டப்படவில்லை. கவலைதரும்

வகையில், சந்தேகநபர்கள் காயங்களுடனும் அடிகளுடன் வந்ததுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சித்திரவதை செய்யப்பட்டதுடன் பொய்யான ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பமிடவும் நிர்பந்திக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

இதற்கிடையில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா இந்தக் கொலைபற்றி பொலிசாரால் விசாரணை செய்யப்படவில்லை. இந்தக் கட்சியின் உறுப்பினர்கள் இந்தக் கொலையினைச் செய்ததாக சொல்லப்படுகின்றது. பதிலாக 2000 ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட எல்லா அரசாங்கத்தினாலும் திரும்பத்திரும்ப அமைச்சரவை அமைச்சராக்கப்பட்டிருக்கின்றார். மாறாக, தமது மகனைக் கொன்றவர்களுக்கு நீதிகிடைக்க காத்திருந்த வேளையில் நிமலராஜனின் பெற்றோர் வெளிநாட்டிலே இறந்துபோனார்கள்.

இந்த அறிக்கை நிமலராஜன் மற்றும் இத்தசாப்தத்தில் அவருக்குப் பின்னர் கொல்லப்பட்ட குறைந்தது 44 ஊடகப் பணியாளர்களின் கொலை பற்றிக் கவனம் செலுத்துகின்றது. எனினும் இவருக்கு முன்னரும் தென்னிலங்கை உட்பட பல ஊடகப் பணியாளர்கள் கொலைசெய்யப்பட்டிருந்தார்கள். போர் பற்றிய செய்திகளை வெளியிட்டமை தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள இனங்களைச் சேர்ந்த பெருமெண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டு அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் தற்போதும் உயிருடன் உள்ளார்கள். அத்துடன் தம்மை யார், எங்கே பிடித்து வைத்திருந்தார்கள் என அவர்களால் வாக்குமூலம் கொடுக்கமுடியும். எனினும், நீதி ஒருபுறம் இருக்க அவர்களுக்கு இப்படி நடந்தது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. பலர் நாட்டுக்கு வெளியே வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தால் இணைந்து நிதியளிக்கப்பட்டு, சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UATC) கீழ் தயாரிக்கப்பட்டது. இதன் உள்ளடக்கங்களுக்கு ITJP மற்றும் REDRESS ஆகியனவே முழுப் பொறுப்பாகும். மேலும் அவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

**ஐரோப்பிய ஒன்றியத்தால் இணைந்து நிதியளிக்கப்பட்டது.**

# பிபிசி இல் நிமலராஜன்

அது போர் இடம்பெற்ற காலம். கிளர்ச்சியாளர்கள் வன்னியில் நிலங்களைக் கைப்பற்றி நிழல் அரசாங்கத்தினை நிறுவி வந்தார்கள். ஆனால், இலங்கை இராணுவம் தமிழ்ப் புலிகளிடமிருந்து வட பகுதியிலுள்ள நகரம் மற்றும் இதய பூமியான யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றியிருந்தார்கள், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவினது அரசாங்கம் தமிழர் நகரத்தின் மீது கடுமையான தடைகளை விதித்திருந்தது: அடிக்கடி மின்சாரத்தடை போடப்பட்டதுடன், எரிபொருள், மின்கலன்கள் மற்றும் பத்திரிகைகள் என்பன இருக்கவில்லை. அத்துடன் அதே சமூகத்தைச் சேர்ந்தவரே நிமலராஜன் ஆவர். அவரிடம் உயரிய தொழிநுட்ப வசதிகள் எதுவும் இருக்கவில்லை அல்லது போர் வலையங்களில் சர்வதேச ஊடகவிலாளர்களுக்கு இருந்த பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல்கள் எதுவும் இல்லாத போதும் அவர் போரால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் செய்திகளை உலகிற்கு கொண்டு சேர்ப்பவராக மாறினார். என்ன செய்தியாக இருந்தாலும், குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடமான இருந்தாலும், காணாமற் போனவர்களைத் தேடிக் கொண்டிருக்கும் ஒரு குடும்பமாயினும், அல்லது சக்தி வாய்ந்த அரசியல்வாதிகள் வாக்குமோசடியில் ஈடுபட்டாலும், அல்லது தமிழர்கள் தமது சாதாரண வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவதற்கு துன்பப்பட்டுக் கொண்டிருந்தாலும் இராணுவத்தால் நிரம்பியிருந்த யாழ். குடாநாட்டை மிதி வண்டியில் சுற்றி வந்தார். நேரலையில் செய்தி அறிக்கையினை வழங்குவதற்கும் அவரிடம் எந்த உபகரணங்களும் இருக்கவில்லை: அவரது சமூகத்தில் போதியளவு மின்சார வசதிகளோ இணைய வசதிகளோ இருக்கவில்லை. பதிலாக, காதிதத்தில் போனாவைப் பாவித்து இந்தக் கதைகளை ஆர்வத்துடன் பக்கச்சார்பு இல்லாமலும் எழுதினார், பின்னர் அதனை வாசிப்பதற்கு இலண்டனில் இருந்து தொலைபேசி அழைப்பிற்காக காத்துக் கொண்டிருந்தார். திரும்பத் திரும்ப கொலை அச்சுறுத்தல்களைத் துணிவுடன் எதிர்கொண்டு யாழ்ப்பாணத்தின் குரலாகவும், பாதிக்கப்பட்ட சமூகத்தில் இருந்தவாறே போரைப் பற்றி வெளியுலகிற்கு அறிவிப்பதில் முன்னோடியாகவும் இருந்தார். நாங்கள் ஒரு போதுமே அறிந்திராத சம்பவம் பற்றிய இன்னுமொரு அறிக்கை தொடர்பில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கொடூரமான முறையில்க் கொல்லப்பட்டார்.

***சந்தானந்த கீர்த்தி பண்டார – பிபிசி சிங்கள சேவையின் முன்னாள் மூத்த தயாரிப்பாளர்,***

# உள்ளடக்கம்

1. பின்னணி ....................................................................................................06
2. படுகொலை....................................................................................................09
3. விசாரணை ....................................................................................................18
4. பொலிஸ் விசாரணை பற்றிய பகுப்பாய்வு.........................................................32
5. விசாரணைசெய்யத் தவறியமை: விளைவுகள் ...................................................45
6. ஏனைய பத்திரிகையாளர்களதும் ஊடகப் பணியாளர்களதும் கொலை..........50
7. முடிவுகளும் சிபாரிசுகளும்.............................................................................60

# 1. பின்னணி

### 1.1. அறிமுகம்

இலங்கை ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் அவரது வீட்டில் 19 ஒக்ரோபர் 2000 அன்று இனந்தெரியாத ஆயுத தாரிகளால் கொலை செய்யப்பட்டார். அவரது படுகொலையானது இலங்கையின் பல வருடங்களாக இனமுரண்பாடு இடம்பெற்ற வேளையில் அது பற்றிய செய்திகளை வெளியிட்டதன் மோசமான பின்விளைவுகளையும், அரச ஆதரவு வன்முறையையும் அடையாளப்படுத்துவதாக உள்ளது. தமிழ் ஊடகவியலாளர் ஒருவரைக் குறிவைத்து ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட கொலைகளில் ஒன்றான அது ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. அத்துடன் நாட்டினைப் பாதித்துள்ள தண்டனை வழங்கப்படாத சூழலையும் அது வெளிப்படுத்தியுள்ளது.

அவர் கொல்லப்பட்ட மறுநாளில் இருந்து சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நவம்பர் 2021 வரையான காலப்பகுதியில் நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வப் பதிவுகளை விரிவாக ஆய்வு செய்து நிமலராஜனின் படுகொலைக்கு இலங்கையின் நீதி அமைப்பு எவ்வாறு பதிலளித்தது என்பதை இந்த அறிக்கை தீவிரமாக ஆராய்கின்றது. இந்த அமைப்பிற்குள் தனிநபர்கள் சிலர் சிறந்த முறையில் முயற்சிகளை மேற்கொண்டிருப்பினும் விசாரணைச் செயல்முறையானது ஒருபோதுமே நீதி, பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கக்கூடிய நோக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை அல்லது வடிவமைக்கப் படவில்லை. பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக அல்லது வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் கூட, அரசியல் செல்வாக்குள்ளவர்களில் பலர் நாட்டைவிட்டுத் தப்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் அந்தக் கொலைக்காக எவருமே குற்றஞ் சுமத்தப்படவும் இல்லை. குறைந்தது ஒரு சந்தேக நபராவது இந்தக் கொலை தொடர்பில் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டிருக்கும் வேளையில் அந்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் இதுவரை கிடைக்காத இலங்கை அதிகாரிகளது ஒத்துழைப்பிற்காக காத்துக் கொண்டிருக்கிறது. சந்தேக நபர்களில் ஒருவர் இந்த வழக்குத் தொடர்பில் பிரித்தானியாவில் வைத்துக் பின்னர் கைது செய்யப்பட்டார். ஆனால் அந்த விசாரணை இன்னும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காமையால் தொடர்ந்தும் தாமதமடைந்து வருகிறது.

இதன் விளைவாக நிமலராஜனின் குடும்பத்தினர் 25 வருடங்களுக்குப் பின்னரும் உண்மை அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படவும், இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளவும், பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவும் நிச்சயமற்ற நிலைமையில் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். போர் தொடர்பான மீறல்களை விசாரணை செய்து வழக்குத் தொடர்வதற்கு குற்றவியல் நீதிப் பொறிமுறையானது திரும்பத் திரும்பத் தவறியுள்ளது. அவர்களது நீண்ட போராட்டமானது இலங்கையிலுள்ள ஒரு விரிவான வடிவத்தினை வெளிக்காட்டுகிறது. பல வருடங்களாக பல்வேறு விசேட விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால் எவையும் நீதியைப் பெற்றுத்தரவில்லை.

இந்த அறிக்கையானது கொலை இடம்பெற்ற அரசியல் சூழலையும், நிமலராஜனையும் அவரது பணியையும் விபரிப்பதுடன் ஆரம்பிக்கின்றது. பகுதி 2, 19 ஒக்ரோபர் 2000 இல் இடம்பெற்ற அவரது கொலை பற்றி விபரிக்கிறது. அத்துடன் பகுதி 3 அதிகாரபூர்வ விசாரணையினது போக்கினையும் அதன் தோல்விகளையும் ஆராய்கிறது. பகுதி 4 பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய பொருத்தமான சர்வதேச நியமங்களுடன் விசாரணையை மதிப்பீடு செய்வதுடன் அதன் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுகின்றது. பகுதி 5 நிமலராஜன் கொலையை விசாரிக்கத் தவறியதன் தாக்கங்கள் பற்றி மீளாய்வு செய்கிறது, பகுதி 6 ஆனது உள்நாட்டுப் போரின்போது செய்தியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் ஏனைய கொலைகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை வழங்குகிறது. இறுதியாக பகுதி 7 நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தேடலில் இலங்கை அரசாங்கத்தினையும் ஏனைய சம்பந்தப்பட்ட அமைப்புக்களையும் நோக்கி சில முடிவுகளையும் சிபாரிசுகளையும் வழங்குகின்றது.

### 1.2. கொலைக்கான அரசியல் சூழல்

வரலாற்றுப்புகழ்வாய்ந்த தலைநகரமான யாழ்ப்பாணம் அமைந்துள்ள தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் வட கிழக்கில் நீண்ட காலமாக உள்ள

இனங்களுக்கிடையிலான பதற்றங்கள் மூன்று தசாப்த காலமாக இழுபட்டுச் சென்ற முரண்பாட்டிற்கு அடித்தளமாக இருந்துள்ளது. தேசிய ரீதியாக பெரும்பான்மையினர் சிங்களவர் ஆவர். ஏற்றத்தாழ்வு நிலையானது சிறுபான்மைத் தமிழருக்கு எதிரான பல தசாப்த காலமான பாரபட்சமான அரச நடவடிக்கைகள், திட்டமிட்ட ரீதியில் ஒடுக்கப்படுதல் போன்றனவற்றிற்கு வழிவகுத்துள்ளன. இந்த ஏற்றத்தாழ்வு மற்றும் அதன் அரசியல் விளைவுகளும் 1983 இல் உள்நாட்டுப்போர் தொடங்குதவதற்கு மையமாக இருந்து.[1]

டிசம்பர் 1995 இல், இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தை பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றினார்கள். இவ்வாறு இந்த நிலப்பரப்பினைக் கைப்பற்றியிருந்த போதிலும், விடுதலைப் புலிகள் தமது கிளர்ச்சியினை 2009 மே இல் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்படும் வரை தொடர்ந்தமையால் ஆயுதப் போர் பல வருடங்களாகத் தொடர்ந்தது. இந்தக் காலப்பகுதியில், அரச ஆதரவு ஒட்டுக்குழுக்கள் அரச பாதுகாப்புபடைகளுடன் இணைந்து இயங்கின. குறிப்பாக நிமலராஜன் கொல்லப்பட்ட வேளையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இணைந்து இயங்கியது. அறியப்பட்ட வகையில் ஈ.பி.டி.பி. ஆனது தமிழ் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான இலக்கு வைக்கப்பட்ட கொலைகள் உட்பட வன்முறை ரீதியான அரசியல் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் வெளிப்படையாகவே பொறுப்பாக இருந்தது. பொருள் மற்றும் அரசியல் ஆதரவு உட்பட அரசின் ஆதரவுடன் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. தண்டனை இல்லாமல் பாதுகாப்புடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. தேவானந்தா மற்றும் முக்கிய மூத்த நபர்கள் பின்னர் அமைச்சுப் பதவிகள் உட்பட உத்தியோகபூர்வ அரசியல்க் கட்மைப்புக்களில் இணைக்கப்பட்டார்கள்.

பெப்ரவரி 2002 இல் ஈ.பி.டி.பி. போன்ற துணை ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களைதல் உள்ளடங்கிய ஏற்பாடுகளுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. ஆனால் இவை ஒருபோதுமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பினும், மோசமான மனித உரிமைகள் மீறல்களுக்காக ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை விசாரிக்க அல்லது வழக்குத்தொடர தவறியமையே ஒரு மனித உரிமைகள் மீறலாகும். ஈ.பி.டி.பி. போன்ற துணை ஆயுதக்குழுக்கள் அரசு மற்றும் இதனுடைய பாதுகாப்பு படைகளுக்கு தொடர்ந்து இடம்பெற்றுவரும் தண்டனையில் இருந்து விலக்களித்தல் இன்றுவரை தொடர்கிறது. அத்துடன் இது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் மற்றும் இவை மீண்டும் நிகழ்வதைத் தடுக்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் அரசு தனது கடப்பாடுகளை நிலைநிறுத்த தவறியுள்ளமையைக் குறித்துக் காட்டுகிறது.

### 1.3. மயில்வாகனம் நிமலராஜனின் பணி

இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் சுறுசுறுப்பாகச் செயற்பட்ட மயில்வாகனம் நிமலராஜன் பல மொழிகள் பேசக்கூடிய தமிழ் ஊடகவியலாளர் ஆவர். தமிழ்த் தினசரியான *வீரகேசரி* மற்றும் சிங்கள வார இதழான *கரய* மற்றும் *றாவய* இற்கான யாழ்ப்பாணச் செய்தியாளராகவும் இருந்தார், அத்துடன் *தமிழ்நெற்* இணையத்தளத்திற்காகவும் பணியாற்றினார்.[2] அவர் பிபிசி தமிழ்ச் சேவை மற்றும் ஆங்கில சேவைக்கான ஊடகவியலாளராகப் போரால் அழிவடைந்த வடக்கு கிழக்கில் இருந்து பணியாற்றினார். மேலும், புதிய செய்திகளை வெளி உலகிற்கு அறிவிப்பதில் கிட்டத்தட்ட தனியொருவராக பொறுப்பாக இருந்தார் எனவும் குடாநாட்டில் இயங்கிய சில சுயாதீன ஊடகவியலாளர்களில் இவரும் ஒருவர் எனவும் பிரிட்டன் கார்டியன் செய்தித்தாளால் விபரிக்கப்பட்டார்.[3]

### 1.4. இலங்கையில் தேர்தல்கள் : ஒக்ரோபர் 2000

10 ஒக்ரோபர் 2000, தொடர்ந்து இடம்பெற்று வந்த போருக்கு மத்தியில் இலங்கையில் பொதுத்தேர்தல் இடம்பெற்றது. தேர்தலுக்கு முன்னதாக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தமிழ்ப் புலிக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான பாரிய படைநடவடிக்கை ஒன்றினை அறிவித்தார். வடபகுதியில் இருந்த யாழ்.குடாநாட்டில் இருந்த நிமலராஜன் பி.பி.சி தமிழ், சிங்கள மொழிச் சேவைகள் உட்பட பல்வேறு செய்தி நிறுவனங்களுக்குச் செய்தியாளராகப் பணியாற்றினர். யாழ்ப்பாணத்தில் இருந்த சில சுயாதீன செய்தி மூலங்களில் ஒருவராக நிமலராஜன் இருந்ததுடன் முக்கிய அரச ஆதரவு தமிழ் துணை ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வன்முறை, வாக்குமோசடி, அச்சுறுத்தல் போன்றவற்றில் ஈடுபடுவதாக

[1] 1972–2012 வரை சம்பவங்கள் இடம்பெற்ற காலவரிசை மற்றும் சில சம்பவங்களின் விபரத்திற்கு பிரான்சிஸ் ஹரிசனின் ‘இன்னும் எண்ணப்படும் மரணங்கள்: இலங்கையில் மறைக்கப்பட்ட போரில் உயிர் தப்பியவர்கள், போட்டோபெல்லோ புத்தகங்கள் அல்லது பிபிசி இன் இலங்கை பற்றிய விபரம் – கால ஒழுங்கு: https://www.bbc.co.uk/news/world-south-asia-12004081 ஆகியவற்றைப் பார்க்கவும்.

[2] தமிழ் நெற்றைப் பார்க்கவும்: 19, 20 ஒக்ரோபர் 2000, 13 ஒக்ரோபர் 2003 : https://www.tamilnet.com/art.html?catid=13&artid=12703; தமிழ்நெற் பரவலாக வாசிக்கப்படும் ஆங்கில மொழி இணையத்தளம் 1995 இல் தொடக்கி வைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள தமிழர்கள் பற்றியும் இலங்கையின் மோதல் பற்றியும் செய்திகள் வெளியிடுவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது, அத்துடன் அதற்கு முன்னர் செய்தி ஆசிரியராக இருந்தவர் (பின்னர் அவரும் கொல்லப்பட்டார்) நிமலராஜனின் நண்பராக இருந்தார்.

[3] கார்டியன் 23 ஒக்ரோபர் 2000: https://www.theguardian.com/news/2000/oct/23/guardianobituaries2

குற்றஞ்சாட்டி ஈ.பி.டி.பி. இன் செயற்பாடுகள் பற்றி விமர்சித்து செய்தி வெளியிட்டார்.[4] தேர்தலுக்கு முந்திய மாதத்தில் இரண்டு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட தேர்தலுடன் தொடர்புபட்ட தாக்குதல்களில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.[5] வாக்களிப்பிற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கைப் பாதுகாப்பு படைகள் நிமலராஜனால் பெற்றுக் கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனைத்து வேட்பாளர்களதும் படங்களைக் கொண்ட காகித உறையினைக் கைப்பற்றினார்கள்.

'பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அந்தக் காகித உறைபற்றி விசாரிப்பதற்கு அவரது வீட்டுக்குச் சென்றார்கள்' என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அல்லது ஆர். எஸ். எப் பின்னர் பதிவு செய்திருந்தது. தமிழ்ப் புலிகளுக்கு படங்கள் அனுப்புவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்ததாக குற்றஞ் சாட்டப்படுவதைக் கண்ட நிமலராஜன் கொழும்பில் உள்ள ராவய இன் ஆசிரியர் படங்களை கேட்டதாகவும் அதற்காகவே தான் படங்களைப் பெற்றதாகவும் வாதிட்டார்.[6]

ஈ.பி.டி.பி. இனர் புதிய கூட்டணி அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இந்த தேர்தலில் நான்கு ஆசனங்களைப் பெற்றார்கள். 'தாம் பெற்றுக் கொள்வோம் என நம்பியிருந்த யாழ்ப்பாண வாக்குகளில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனமைக்கு நிமலராஜனும் ஒரு விதத்தில் காரணம்' என ஈ.பி.டி.பி. குற்றஞ்சாட்டியதாக நிமலராஜன் *தமிழ்நெற்* இற்கு தெரிவித்தார்.[7] இருந்தும், ஈ.பி.டி.பி. இன் தலைவரான டக்ளஸ் தேவானந்தா வடக்குப் புனர்வாழ்வு மற்றும் வட கிழக்கு விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டார்.[8] அவர் அதனைத் தொடர்ந்து ஒரு செவ்வியிலே 'சில நபர்களின் உயிர்களை ஆபத்திற்குள்ளாக்கும் வகையில் தனது விவகாரங்களை அவர் நடாத்திக் கொண்டிருப்பதாக' நிமலராஜனை எச்சரிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.[9] தேர்தல் தொடர்பான செய்திகள் வெளியிட்டதன் காரணமாக ஈ.பி.டி.பி. இன் 'பெரிய ஆட்களிடமிருந்து' கொலை மிரட்டல்கள் வந்தன என நிமலராஜனின் நண்பர்கள் வெளிப்படையாகவே தெரிவித்தார்கள். அத்துடன் தனக்கு 'ஏதாவது பிரச்சினை' ஏற்பட்டால் அது ஈ.பி.டி.பி. இடம் இருந்து தான் வரும் என அவர் தெரிவித்திருந்தார். தொலைபேசி வழி மிரட்டல்கள் பற்றி நிமலராஜனே உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்தார். ஆனால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை என அவருக்குச் சொல்லப்பட்டது. அவருடைய மனைவியும் அச்சுறுத்தல்களுக்கு ஆளானார்.[10] முதல் நாள் இராணுவத்தினர் தன்னிடம் வந்ததாக 16 ஒக்ரோபரில் இல் நிமலராஜன் *தமிழ்நெற்* இற்கு தெரிவித்தார். அத்துடன் 'பல மிரட்டல்கள் வந்தமையால் தனது பாதுகாப்பு குறித்து கவலையடைந்திருந்ததாகவும்' தெரிவித்தார்.[11] இறப்பதற்கு 'சில மணித்தியாலங்களுக்கு முன்னர்' வேட்பாளர்களின் படங்கள் பற்றி நிமலராஜன் 'மீண்டும் இராணுவத்தினரால் விசாரணை செய்யப்பட்டார்' என தனது சொந்த விசாரணையின் ஆர். எஸ். எப் தெரிவித்திருந்தது.[12]

[4] தமிழ்நெற்: 20 ஒக்ரோபர் 2000: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5513

[5] பிபிசி செய்தி 6 ஒக்ரோபர் 2000: http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/959214.stm

[6] RSF (எல்லைகளற்ற செய்தியாளர்கள் ) டெமோகிள்ஸ் நெட்வேக்குடன் திறந்த கடிதம், 17 ஒக்ரோபர் 2002: https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister

[7] தமிழ்நெற்: 20 ஒக்ரோபர் 2000: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5513

[8] தமிழ்நெற்: 25 ஒக்ரோபர் 2000: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5523

[9] யூலை 2001: https://www.theacademic.org/feature/deva/.Njthde;jh

தேவானந்தா மேலும் தெரிவித்தார்: 'அவரது கொலைக்கு நாங்கள் எந்த வழியிலும் பொறுப்பில்லை'

[10] நிமலராஜனின் கொலை விசாரணையை உள்ளடக்கிய ஒரு விரிவான ஆனால் முழுமையற்ற ஒரு தொகுதி நீதிமன்ற ஆவணங்கள் யாழ் நீதவான் நீதிமன்றத்தினால் 2023 இல் வெளியிடப்பட்டது.இ இதன் பின்னர் ஆஊது2023. கொழும்பு CID இனைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் டி சில்வா ஆல் 30 மே 2001 இல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சி வாக்குமூலங்களின் பொலிசாரின் தொகுப்புக்களைப் பார்க்கவும்.: MCJ2023 pp269-271

[11] *தமிழ்நெற்*: 20 ஒக்ரோபர் 2000: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5513

[12] RSF, 2002: https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister. தமிழ்நெற்றினைப் பார்க்கவும், 27 ஒக் 2000, இதில் நிமலராஜன் கொல்லப்படுவதற்கு முன்னர் கட்சியின் பேராளிகள் அவரிடம் சென்று வந்ததாக சொல்லப்படுவதாக அது தெரிவித்துள்ளது. வட்டாரங்கள் தெரிவித்தன': https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5530

# 2. படுகொலை

17/3 புகையிரத ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் வசித்து வந்தார். 19 ஒக்ரோபர் 2000 மாலை வேளையில், அவர் தனது பெற்றோர், அவரது மனைவி பரிமளா, ஐந்து வயதிற்கும் குறைவான மூன்று பிள்ளைகள் மற்றும் அயல்வீட்டில் வசித்து வந்த 11 வயது மருமகன் பிரசன்னா ஆகியோருடன் தனது வீட்டில் இருந்தார்.[13] திட்டமிடப்பட்ட மின்வெட்டினால் தடைப்பட்ட உள்ளூர் மின்விநியோகம் மீண்டும் வரவில்லை.[14] எனவே நிமலராஜன் தனது படிப்பறையினுள் மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். வெளியே வீட்டின் பிரதான பொது அறையில், அவரது தகப்பனார் அரை இருட்டில் ஓய்வெடுக்கும் கதிரையில் அமர்ந்தபடி இரவு 9.15 இருந்து 9.45 மணிவரை இடம்பெற்ற பிபிசி தமிழோசையின் மாலை நேரச் செய்தி அறிக்கையினைக் கேட்டுக்கொண்டிருந்தார். நிமலராஜனின் மனைவி தனது பிள்ளைகளைக் கட்டிலில் படுக்கவைத்தபடி அவரும் தூங்கினார். அத்துடன் பிரசன்னாவும் தூங்கிக் கொண்டிருந்தார். செய்தி ஒலிபரப்பு முடிவடையும் நேரத்தினை நெருங்கியிருந்த வேளையில்,[15] நிமலராஜன் ஒரு தொலைபேசி அழைப்பை எடுத்தார்.[16] முன்பு உறங்கிக் கொண்டிருந்த அவரது தாயார் லில்லி திரேஸ் இருளினுள் அப்போது தான் குளியலறைக்குச் சென்றிருந்தார். அவர்களது வீட்டுச் சுவர்களுக்கு அப்பால் சுற்றுப் புறச்சூழல் முழுவதும் இறுக்கமான ஊரடங்கு உத்தரவின் கீழ் இருந்தது.

வீட்டின் முன் கதவு சற்றுத் திறந்து இருந்தது. குறைந்த வெளிச்சத்தில் நிமலராஜனின் தகப்பனார் மயில்வாகனம் ஒரு ரீ–சேட்டும், நீண்ட காற்சட்டையும் அணிந்த ஒரு உருவம் உள்ளே நுழைவதைக் கண்டார். 'மகனே யார் நீ'? என்று அவர் கேட்டதுடன் எழுந்து நிற்க முயற்சித்தார். ஆனால் அந்த நபர் ஒரு கையினால் மயில்வாகனத்தின் தலையைப்பிடித்து, கீழே தள்ளி, முழங்காலில் முகத்தை முட்டவைத்து அழுத்திப்பிடித்தவாறு, மற்றைய கையினால் ஒரு கத்தியை எடுத்து சரமாரியாக வெட்டினான். இதனால் அவரது முகத்திலும், தலையிலும், கழுத்திலும், 30 செ.மீ. நீளமாக மோசமான காயங்கள் ஏற்பட்டன. அதேவேளையின் இன்னொரு நபர், தனது மகனுடைய படிப்பறையின் வாசலுக்கு வேகமாகச் செல்லும் சத்தத்தினைக் கேட்டார்.[17] மயில்வாகனம் கத்த தொடங்கினார். இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. பின்னர் மூன்றாவதும் கேட்டது. குளியலறையினை விட்டு வெளியே வந்த அவரது மனைவி துப்பாக்கிச் சூட்டு வெளிச்சத்தினையும் கண்டு விரைவாக ஓடி வந்தார். நிமலராஜனின் மருமகனான பிரசன்னாவும் ஓடிவந்தார். மயில்வாகனம் தனது தலையை அழுத்திப்பிடித்திருந்த கைகள் விலக்கப்பட்டதை உணர்ந்ததுடன் காயங்களை தனது கைகளால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார்: அவரது தலையின் ஒரு பகுதி

[13] நிமலராஜன் கொலை பற்றிய இந்த விபரங்கள் MCJ2023 இனுள் பல்வேறு ஆவணங்களை ஒருங்கிணைக்கின்றது: நிமலராஜனின் தகப்பனாரால் 20 ஒக்ரோபர் 2000 இல் பதில் சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.வி சிறிராஜேஸ்ரனுக்கு வழங்கப்பட்ட: MCJ2023 p243; சம்பவ இட விசாரணை பற்றிய நீதவான் நீதிபதி திரு ETவிக்னராஜாவின் குறிப்புக்கள், 20 ஒக்ரோபர் 2000: MCJ2023 pp52–55; நிமலராஜனின் தகப்பனாரால் வைத்தியசாலையில் வைத்து நீதிபதிக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம், 20 ஒக்ரோபர் 2000: MCJ2023 pp57–59; நிமலராஜனின் மனைவியின் சகோதரரின் நீதிமன்ற வாக்குமூலம், 27 ஒக்ரோபர் 2000: MCJ2023 pp60–64; நிமலராஜனின் தாயாரின் நீதிமன்ற வாக்குமூலம் 31 ஒக்ரோபர் 2000: MCJ2023 pp65–67; யாழ். பொறுப்பு அதிகாரி IGPஆரியவன்சாவினால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட நிமலராஜனின் குடும்ப உறுப்பினர்களின் திததியிடப்படாத வாக்குமூலங்கள் பற்றிய CID இனரின் தொகுப்பு: 22 ஏப்ரல் 2001, MCJ2023 pp264–266; அயலவர்கள் மற்றும் ஏனைய தரப்பினரிடமிருந்து கொழும்பு CID குழுவினரால் எடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் பற்றிய CID இனரின் தொகுப்பு 28 ஏப்ரல் 2001, மற்றும் தற்போது கொழும்பில் வசித்துவரும் நிமலராஜன் குடும்பத்தினரது மேலதிக வாக்குமூலங்கள் பற்றிய CID இன் தொகுப்புகள். இது கொழும்பு CID இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் 30 மே 2001 இல் நீதிமன்றத்திற்கு கூட்டாக சமர்ப்பிக்கப்பட்டது.: MCJ2023 pp268–273. அது மே 2025 இல் நிமலராஜனின் உயிர்தப்பிய குடும்ப உறுப்பினர்களால் ITJP இற்கு வழங்கிய நினைவுகளையும் தனிப்பட்ட அனுபவங்களையும் அடிப்படையாக கொண்டது.

[14] மீண்டும் இந்த விநியோகம் இரவு 9.15 அல்லது 9.30 இற்கு மீண்டும் தொடங்கும் என அயலவர்கள் எதிர்பார்த்தார்கள்: 29 ஏப்ரல் 2002 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஜோர்ச் ராஜரட்ணம் திருபைராஜ், பாலரட்ணம் கணேசாந்தன் மற்றும் திருஞானம் ஜோன் குயின்டஸ் ஆகியோரின் வாக்குமூலங்கள் பற்றிய CID இனரின் தொகுப்பினைப் பார்க்கவும்: MCJ2023 pp295–296; 30 மே 2001 இல் உள்ளூர் மின்சாரசபை அதிகாரியான கந்தையா சிதம்பரநாதனால் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வாக்கு மூலத்தினையும் பார்க்கவும்: MCJ2023 p270.

[15] அடுத்தநாள் வைத்தியசாலையில் வைத்து வழங்கிய நேர்காணலில் நிமலராஜனின் தந்தையார் கொலை இடம்பெற்ற நேரத்தினை பிபிசி செய்தி ஒலிபரப்புடன் இணைத்துக் கூறினார். சில அயலவர்கள் பின்னர் அந்த நேரத்தினை சற்று பிந்தி இரவு 10மணி அல்லது 10.15 எனக் கூறுவார்கள்.

[16] பொலிசாரின் தொகுப்பில் அவருக்கு தொலைபேசி அழைப்பு 'வந்தது' என்றும் தொலைபேசி அழைப்பினை அவர் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கின்றது: MCJ2023 p2.

[17] பார்க்கவும் https://www.bbc.com/sinhala/highlights/story/2004/08/040820_frances. நிமலராஜனின் குடும்ப உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள் பொலிஸ் விசாரணையின் ஒரு பகுதியாகப் பட்டியலிடப்பட்ட போதிலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ அறிக்கை MCJ2023 இல் ஆவணப்படுத்தப்படவில்லை.

கதிரையுடன் செருகப்பட்டுக் கிடந்தது. தாக்குதல் நடாத்திய இருவரும் தப்பிச் செல்லும் போது அவர்கள் தமக்குப் பின்னால் கைக்குண்டு ஒன்றை வீசிவிட்டுச் சென்றார்கள். அது பொது அறையின் நடுவே வெடித்துச் சிதறியது.[18] இந்தக் குண்டு வெடிப்பில் பிரசன்னாவின் கால் முறிந்து தொங்கிக் கொண்டிருந்தது. குண்டுச் சிதறல்கள் மயில்வாகனத்தையும் தாக்கியன. அவரது மனைவி தனது காலிலும் அடி வயிற்றிலும் படுகாயமடைந்ததுடன் சிறிது நேரத்தில் மயக்கமடைந்து விட்டார். குண்டு வெடிப்பால் சீலிங்கின் ஒரு பகுதி கீழே விழுந்ததுடன், கண்ணாடிக் கதவைக்கொண்ட அலுமாரி முற்றிலும் சேதமடைந்தது, அத்துடன் வீட்டின் முன்பகுதியில் இருந்த எல்லா யன்னல்களினதும் கண்ணாடிகளும் உடைந்தன.[19] அத்துடன் வீட்டினது விளக்குகளும் நொருங்கிப் போய் இருட்டினுள் தூசியும் புகையுமாக இருந்தது. நிமலராஜனின் மனைவி பரிமளா பிள்ளைகளின் படுக்கை அறையைவிட்டு வெளியே ஓடி வந்து பார்த்தபோது தனது குடும்ப உறுப்பினர்கள் இரத்தப் போக்குடன் தரையில் கிடப்பதைக் கண்டார்.

அடுத்த வீட்டில் தமது பிள்ளைகளுடன் வசித்த நிமலராஜனின் சகோதரியான பிறேமராணியும் அவரது கணவரான ஜெகதாஸ் போல் இற்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. முதலில் வழமை போல் தமது பாதுகாப்பிற்காக மேசையின் கீழ் பதுங்கிக் கொண்டார்கள். ஆனால் பின்னர் அவர்களுக்கு மயில்வாகனம் அலறும் சத்தம் கேட்டது. அவர்கள் தமது 16 வயது மூத்த மகன் பிறேம்ஜியுடன் ஓடிவந்தபோது கைக்குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டதுடன் நிமலராஜனின் வீட்டின் முன்பகுதி முழுவதுமே குண்டுவெடிப்பால் ஒரு கணம் வெளிச்சமாக இருப்பதைப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் உள்ளே வந்ததும் எல்லாமே இருளாகவும் குழப்பமாகவும் இருந்தது. பிறேமராணி தனது பாதங்கள் தரையில் ஒட்டுவதை உணர்ந்தார். பின்னர் தான் இரத்தின் மீது நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டார். பிறேம்ஜி உதவி கேட்டு கத்திக் கொண்டு வெளியே ஓடினார். ஆனால் அவருக்கு சத்தமே வரவில்லை. அவரைத் தொடர்ந்து அவரது தயாரும் ஏற்கனவே அச்சத்தில் இருந்த அயலவர்களிடம் உதவி கேட்டுப் பெரிதாக கத்திக் கொண்டு ஓடினார்கள். எதிர் வீட்டில் வசித்து வந்த கீழ்நிலை உள்ளூர் அரசாங்க அலுவலரான கிராம சேவகருக்கு அவர் தகவல் கொடுத்தார்.[20] அத்துடன் கிராம சேவகர் இன்னுமொரு அயலவரிடம் சென்று குடும்பத்தினரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு பெட்டியுடன் கூடிய சிறிய உழவு இயந்திரத்தினை (லாண்ட் மாஸ்டர்) தருவதற்கு சம்மதிக்க வைத்தார். அதேவேளையில் அவரது கணவர் ஒரு மின்சூள் ஒன்றினையும் எடுத்துக் கொண்டு இந்தச் சம்பவம் பற்றி அறிவிப்பதற்கு அருகில் இருந்த இராணுவக் காவல் நிலையத்திற்கு விரைந்து சென்றார். அவர் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட இராணுவத்தினருடன் திரும்பிய அதேவேளையில் மின்சாரமும் வந்தது: உள்ளூர் மின்சார சபை அதிகாரியின் படி அந்த இரவு 10.05 இற்கே மின்சாரம் வந்துவிட்டது. நிமலராஜன் படிப்பறை வாசலில் தலைப் பகுதி வாசலில் இருக்க தரையில் குப்புறக்கிடந்தார். அந்த அறையில் இருந்து இரத்த வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. அவரது குடும்ப உறுப்பினர்கள் அவர் இப்போது இறந்து விட்டார் என்பதை உணர்ந்து கொண்டார்கள். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு இராணுவம் ஒரு ரக் வண்டியை வழங்கும் என இராணுவீரர்கள் தெரிவித்தார்கள்.

பொது அறையினுள் ஒரு கதிரைக்கு கீழ் கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பினையும் ஒரு துப்பாக்கி ரவை வெற்றுக்கோதினையும் இராணுவத்தினர் கண்டெடுத்தார்கள். அயலவர்கள் வீட்டுக்கு வந்து சேர ஆரம்பித்தார்கள். காயமடைந்த குடும்ப உறுப்பினர்களின் காயங்களுக்கு சிலர் கட்டுப்போட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். எந்த இராணுவ வாகனமும் அங்கு வரவில்லை, இதற்கிடையில் நோயாளர் காவு வண்டியினையும் அங்கு வரவழைப்பது சாத்தியமற்றதாக இருந்தது.

குறிப்பிட்ட குழப்பத்திற்கு பின்னர், நண்பர்களும் உறவினர்களும் நிமலராஜனின் உடலை சிறிய உழவு இயந்திரத்தின் பெட்டிக்கு கொண்டு சென்றார்கள். அத்துடன் படுகாயமடைந்த மூன்று குடும்ப உறுப்பினர்களுக்கும் எழுந்து கொள்வதற்கும் உழவு இயந்திரத்திற்குள் ஏறுவதற்கும் உதவி வழங்கப்பட்டது. அவரது சகோதரியான பிறேமராணியும் அவர்களுடன் இணைந்து கொண்டார். தனது மகன் பிரசன்னாவை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்தார். அவருடைய கணவரும் ஏறிக் கொண்டார். இரவு நேரத்தில் செல்லும் போது பிடிபட்டால் ஏற்படும் எல்லா ஆபத்துக்களுடன் ஊரடங்குச் சட்டத்தினை மீறுவதையிட்டும் சாரதி அச்சமடைந்தார். அத்துடன் தங்களுடன் தனது மோட்டார்

18 கைக்குண்டினை எறியும் போது தாக்குதல் நடாத்தியவர்கள் எங்கு நிலையெடுத்திருந்தார்கள் என்பது பற்றி MCJ2023 இல் வழங்கப்பட்ட விபரங்கள் சரியாக குறிப்பிடத் தவறியுள்ளது. ஆனால் எறியும்போது பறந்த அதனுடைய பாதுகாப்பு நெம்பு உள்ளே கதிரைக்கு கீழ் காணப்பட்டது.: 30 மே 2002 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பக்கத்து வீட்டுக்காரர் சிசில் செல்வராஜா டினேசின் தொகுக்கப்பட்ட வாக்குமூலத்தினைப் பார்க்கவும்.: MCJ2023 p268.

19 நிமலராஜன் தனது படிப்பறையின் யன்னல் ஊடாக சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற ஒரு விடாப்பிடியான கதையை செய்தி நிருபர்கள் பின்னர் உருவாக்கினார்கள். எவ்வாறாயினும், வெளியே அவதானிக்கப்படாத மூன்றாவது தாக்குதலாளி ஒருவர் இருந்திருந்தால்க் கூட அவரது துப்பாக்கிச் சூட்டுக்காயங்களின் கோணங்கள் இதனை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்குகின்றன.

20 கிராமசேவகர் என்ற தமிழ்ப் பதவிநிலையானது சிங்களச் சொல்லான கிராம நிலதாரி என 1993 இல் உத்தியோகபூர்வமாக மாற்றப்பட்டது. ஆனால் தமிழ் பேசுபவர்கள் தொடர்ந்தும் பழைய பெயரையே பயன்படுத்துகிறார்கள்.

சைக்கிளில் வருமாறு கிராம சேவகரைக் கேட்டுக் கொண்டார். காயமடையாத நிமலராஜனின் மருமகனான பிறேம்ஜியும் கிராம சேவகரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்றார். ஆரம்பத்தில் இந்த சிறிய வாகனத் தொடரணியுடன் அயலவர்களும் இலாந்தர் விளக்குகளையும் பிடித்தபடி நடந்து சென்றார்கள். ஆனால் பின்னர் வாகனங்களை இருட்டில் பயணிக்கவிட்டு விட்டு விரைவில் திரும்பிச் சென்றுவிட்டனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் வந்த இரண்டு இராணுவத்தினர் அவர்களை அழைத்துச் செல்வதற்கு முன்வந்திருந்த போதிலும் அவர்கள் தமது மனதை உடனடியாகவே மாற்றிக் கொண்டார்கள். அதற்குப் பதிலாக மிகவும் நேரடி வழியான வைத்தியசாலை வீதியிலுள்ள பெரிய வீதித்தடையினைக் அவர்கள் கடந்து செல்வதினை உறுதிப்படுத்தக் கூடியதாக இவர்கள் வருவது பற்றி பல்வேறு சோதனை நிலையங்களுக்கும் முன்கூட்டியே தொலை தொடர்பு சாதனம் மூலம் அறிவிப்பதற்கு முன்வந்தார்கள். இருப்பினும், அவர்கள் வீதித் தடையினை வந்தடைந்த போது வீதி மூடப்பட்டிருப்பதாகவும் அவர்களை நீண்ட சுற்று வழியால் செல்ல வேண்டும் எனவும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. உழவு இயந்திரப் பெட்டியில் இருந்த குடும்பத்தினர் காயமடைந்த மூவரினதும் உயிர்கள் சிறிது சிறிதாக போய் கொண்டிருப்பதையிட்டு அச்சமடைந்தார்கள். பொதுமக்கள் எவருமே இல்லாத வெறிச்சோடிய இருண்ட வீதிகள் வழியான யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர்கள் ஊர்ந்து சென்றார்கள். ஒரு கிலோ மீற்றரை விட சற்று அதிகமான பிரயாணத்திற்கு அவர்களுக்கு ஒரு மணித்தியாலம் எடுத்தது.[21] நிமலராஜனின் உடலினை பிணவறையில் ஒப்படைத்து விட்டு காயமடைந்த குடும்ப உறுப்பினர்களையும் உரிய நோயாளர் பகுதிகளில் அனுமதித்துவிட்டு ஊடரங்குச் சட்டம் காலையில் தளர்த்தப்படும் வரை வீதிகளின் ஊடாக திரும்பிச் செல்வதற்கு அச்சப்பட்டு அந்தக் குழுவில் எஞ்சியவர்கள் இரவினை அங்கேயே கழித்தார்கள்.

21 https://www.bbc.com/sinhala/highlights/story/2004/08/040820_frances பார்க்கவும்

# தாக்குதல்


பி.ப.9:45 இற்கு சற்று முன்னதாக மின்துண்டிப்பு நீட்டிக்கப்பட்ட நேரத்தில் தாக்குதல் இடம் பெறுகின்றது.
தன் மூன்று பெண் குழந்தைகளுடன் தூங்கிக் கொண்டிருந்த பரிமளா நிமலராஜன் (மனைவி)
கடுமையான ஊரடங்கு உத்தரவின் கீழ் சுற்றுப்புறம்
அருகிலுள்ள பல சோதனைச் சாவடிகளில் கடமையிலிருந்த படையினருக்கு கையெறி குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டது


லில்லி திரேசா மயில்வாகனம் (தாய்), 59, துப்பாக்கிச்சூடுகள் கேட்டு ஓடிவருகின்றார். கையெறிகுண்டு வெடிக்கின்றது: அடிவயிற்றிலும், கால்களிலும் கடுமையான காயங்கள் ஏற்பட, மயக்கமடைந்து விழுகின்றார்.
மயில்வாகனம் நிமலராஜன், 39, மூன்று சன்னங்கள் அவரது உடலைத் துளைக்கின்றன. கடைசிச்சன்னம் தலைலைத் துளைத்துச்செல்கின்றது: உடனடியாகவே இறந்துபோகின்றார்.
பிரசன்னா ஜெகதாஸ், 11, (மருமகன்), சூட்டுச்சத்தம் கேட்டு, முன் அறையியிலிருந்து வெளியே ஓடுகின்றான், கையெறிகுண்டு வெடிக்கின்றது: ஒரு கால் முறிவடைந்ததுடன், உடலில் கடுமையான காயங்கள் ஏற்படுகின்றன.
கணபதிப்பிள்ளை மயில்வாகனம் (தந்தை), 65, கதிரையில் இருந்த நிலையில் தாக்கப் படுகின்றார். கழுத்திலும், தலையிலும் ஆழமான கத்திவெட்டுக்காயம் ஏற்படுகின்றது: பின்னர் கையெறிகுண்டு வெடிக்கும்போதும், சிதறுதுண்டுகளால் மேலும்பல காயங்கள் ஏற்படுகின்றன.
இரு தாக்குதல்தாரர்கள் உள்ளேவந்து தாக்குதலை நடாத்திவிட்டு ஓரிரு நிமிடங்களிலேயே வெளியேறிச்சென்றார்கள்

# 3. விசாரணை

### 3.1. இலங்கையில் ஒரு கொலை தொடர்பான விசாரணையில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள்

இலங்கையின் நீதி முறைக்கிணங்க, நீதாவான் ஒருவரே குற்றம் இடம்பெற்ற புவியல் பகுதியில் குற்றவியல் பொலிசாரால் நடாத்தப்பட்ட விசாரணையை முனைப்புடன் வழிநடத்தி விசாரணையை மேற்பார்வை செய்வார். இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி சந்தேகத்திற்குரிய குற்றமானது குற்றமுள்ள கொலை போல இருப்பின் நீதவானும் பொலிசாரும் குற்றம் இடம்பெற்ற இடத்திற்கு தனிப்பட்ட ரீதியில் சமூகமளிக்க வேண்டும்.[22] சாட்சிகளை அழைத்து விசாரணை செய்தல் தேடுதல் மற்றும் கைது உத்தரவுகளை வழங்குதல் மற்றும் தேவையான ஏனைய கட்டளைகளை வழங்குதல் ஆகியன நீதவானின் பணியாகும். இது பௌதீக ஆதாரங்களை ஆய்வுக்கு அனுப்புதல், ஒட்டுமொத்தமாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதையும் விசாரணை சட்டபூர்வமாகவும் கவனமாகவும் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதையும் உள்ளடக்குகின்றது.[23] நிமலராஜனின் வழக்கில், இந்த வழக்கினை மேற்பார்வை செய்தவர் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றின் நீதிபதியான E.T. விக்னராஜா ஆகும்.

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இன்னுமொரு விதியானது 'பாதிக்கப்பட்ட தரப்பு' நீதிமன்றத்தில் சட்டத்தரணியால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கான உரிமையை வழங்குகின்றது.[24] இதனடிப்படையில் யூலை 2002 இலிருந்து நிமலராஜன், அவரது குடும்பத்தினரது நலன்களைப் பிரதிநித்துவம் செய்யும் வழக்கறிஞர்கள் பல விசாரணைகளில் கலந்து கொண்டதுடன் விசாரணைகள் ஒரு உருப்படியான முடிவை நோக்கிக் கொண்டு செல்ல உதவிசெய்ய முயன்றார்கள். வழக்கறிஞர்களில் ஒருவரின் கூற்றுப்படி, குற்றவியல் வழக்குகளில் நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்டவர்களது வழக்கறிஞர்களினது வகிபாகத்தினை மிகவும் சிறிய அளவானதாகவே பார்க்கும் போக்கினைக் கொண்டுள்ளன. உதாரணமாக, நீதிமன்றத்தின்முன் ஆஜராகும் சந்தேக நபர்களையோ அல்லது மற்றையவர்களையோ குறுக்கு விசாரணை செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் எல்லா ஆதாரங்களையும் பார்ப்பதற்கான அனுமதி வழங்கப்படாமல் இந்த மாதிரியான வழக்குகளில் அடிக்கடி அவர்களுக்கு முட்டுக்கட்டை போடப்படுகின்றது.[25] எவ்வாறாயினும், நிமலராஜன் வழக்கில் அவருக்கான பிரதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர்கள் குறிப்பிட்ட சாட்சிகளை அழைத்தல், அல்லது உரிய தகவல்களை வழங்கக் கூடியவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளுதல், அல்லது சந்தேக நபர்கள் தப்பிச் செல்வதனை தடுப்பதற்கான வினைத்திறனான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற விசாரணைக்கான நடவடிக்கைகளைப் பொலிசார் எடுக்க வேண்டும் என பல தடவைகள் தெரிவித்திருந்தார்கள். அத்துடன் நீதிபதி விக்னராஜா சிபாரிசு செய்யப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிட்டத்தட்ட எப்பொழுதுமே பொலிசாருக்கு கட்டளையிட்டார். எவ்வாறாயினும் இது பெரும்பாலும் பயனற்றதாகவே இருந்தது. நிமலராஜன் விசாரணையின் போது நீதிபதி விக்னராஜா தனது கட்டளைகளை நடைமுறைப்படுத்த அல்லது கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய நியமங்களை பொலிசார் பின்பற்றவில்லை என பல தடவைகள் சுட்டிக்காட்டினார்.

குற்றவியல் விசாரணை இலங்கையில் முழுமையடையும் போது நீதவான் சந்தேக நபர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இருப்பதாக நம்பவில்லை எனில் அவர்களை விடுதலை செய்கிறார் அல்லது அவர்களை விசாரணை செய்யத் தீர்மானிக்கின்றார். கடுமையான வழக்குகளில், நீதாவான் விசாரணை பற்றிய பதிவுகளையும் ஆதாரங்களையும் உயர் நீதிமன்றம் மற்றும் குற்றச் சுமத்துவது தொடர்பான முடிவுகளுக்குப் பொறுப்பாக உள்ள சட்டமா அதிபருக்கு அனுப்பும்

[22] குற்றவியல் நடைமுறைச் சட்ட விதி, பிரிவு 143.

[23] இலங்கையின் 1979 குற்றவியல் நடைமுறைச் சட்ட விதியில் குறிப்பாக 9, 124, 136 ஆம் பிரிவுகளில் நீதவானின் பங்கு பற்றி விபரிக்கப்படுகிறது.

[24] 1979 குற்றவியல் நடைமுறைச் சட்ட விதி, பிரிவு 260.

[25] வக்கீல் KL ரட்ணவேல் உடனான செவ்வி, 14 பெப்ரவரி 2025.

போது இந்த விசாரணை உயர் நீதிமன்றத்தில் இடம்பெறும்.[26] நிமலராஜன் கொலையினை அடுத்து வந்த நாட்கள், மாதங்கள் மற்றும் வருடங்களில், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் கொலைச் சந்தேக நபர்கள் அடையாளங் காணப்பட வேண்டும் எனவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் கிளர்ந்தெழுந்து கணிசமான பொது அழுத்தத்தினைக் கொடுத்தார்கள்.[27] ஆனால் பல வருட விசாரணைகளுக்கு பின்னரும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னரும், நிமலராஜன் கொலை தொடர்பில் எவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்படவேண்டும் எனப் பரிந்துரை செய்யப்படவில்லை.

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்ட விதியானது 'ஒவ்வொரு விசாரணையும் தேவையற்ற தாமதங்கள் எதுவுமின்றி நிறைவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டுச் சொல்கின்றது'. விசாரணைகள் முடிவடையும் வரை ஒவ்வொரு 15 நாட்களும் அதன் முன்னேற்றம் பற்றி பொறுப்பான பொலிஸ் அதிகாரி நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிப்பது அவசியமாகும்.[28] மேலும், எந்த சந்தேக நபர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்படும் போது அவர்களது தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்படுவதை நீதிமன்றம் ஒவ்வொரு 15 நாட்களும் மீளாய்வு செய்ய வேண்டும்.[29] நீதவானின் முடிவுகள், பிரேதப் பரிசோதனை, தடயவியல் அறிக்கைகள், ஏனைய அறிக்கைகளுடன் கோவையிடப்பட்ட இந்த வழமையான அறிக்கைகள் விசாரணையின் உத்தியோகபூர்வ பதிவுகளை உருவாக்குவதுடன் அதன் முன்னேற்றத்தையும் காட்டுகின்றன. 2023 இல் ITJP மற்றும் Redress ஆகியன யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இருந்து இந்த வழக்கின் பதிவுகளின் பிரதியைப் பெற்றுக் கொண்டன. விசாரணையிலுள்ள குறைபாடுகள் அல்லது சில முக்கிய ஆவணங்கள் இல்லாமல் இருப்பதனால் இந்த ஆவணங்களில் முக்கிய இடைவெளிகள் காணப்படினும்[30] மூன்று மொழிகளிலும் கலந்து எழுதப்பட்டுள்ள 434 பக்கங்களைக் கொண்ட தொகுப்பு ஆவணத்திலுள்ள ஆதாரங்களிலிருந்து அதிகம் அனுமானித்துக் கொள்ளமுடிகிறது. விசாரணைகளில் நிமலராஜனின் நலனைப் பிரதிநிதித்துவம் செய்த வழக்கறிஞர்களில் ஒருவருடனான நேர்காணல் சில இடைவெளிகளை நிரப்புவதற்கு உதவியதுடன் இந்த நீதிமன்ற ஆவணங்களுக்குப் பின்னாலுள்ள சம்பவங்களையும் நன்றாகப் புரிந்து கொள்ள இடமளித்தது.

## 3.2. இரவு இடம்பெற்ற கொலைக்கு இராணுவம் மற்றும் பொலிசாரின் பதில்

நிமலராஜன் இறந்த நேரத்தில் அவர் வசித்து வந்த பாதுகாப்பு வலயம் 9 மணிக்கு ஊரடங்குச் சட்டத்தின் கீழ் இருந்ததுடன்[31] இலங்கை இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் இருந்தது.[32] கொலைக்குப் பின்னர் அவரது மைத்துனர் அன்ரன் ஜெகதாஸ் போல் நேரடியாகச் சென்று இவரது வீட்டுக்கு அருகில் இருந்த காவல் நிலையத்தில் இரண்டாவது விஜயபாகு இலகு காலாற்படைப் பிரிவின் உறுப்பினர்களே இருந்தார்கள்.[33] அது இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் விரைவாக நடந்து செல்லும் தூரத்திலேயே இருந்தது. அருகில் இருந்த மற்றைய காவல் நிலைகளில் இருந்த இராணுவத்தினர் ஒரு குண்டு வெடிக்கும் சத்தத்தினைத் தாம் கேட்டதாக பின்னர் கூறியிருந்தனர்: எனவே தாக்குதல் குறித்து அனைவருமே உசார் அடைந்திருந்தனர்.[34] அப்படியிருந்தும், நிமலராஜனின் வீட்டினை வந்தடைவதற்கு 10 பேரைக் கொண்ட பாதுகாப்பு படையைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு 15–20 நிமிடங்கள் எடுத்தது. யாழ்ப்பாண பொலிஸ் அலுவலகரின் படி, யாழ் – கண்டி வீதியில் கிட்டத்தட்ட 200 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த பிரதான வை எம் சி ஏ காவல் நிலையத்தில் இருந்த நான்கு இராணுவ வீரர்களின் முதல் நடவடிக்கையாக அவர்கள் அறிவுறுத்தல்கள் கேட்டு 2 கிலோ மீற்றர்கள் தூரத்தில் மணிக்கூட்டு கோபுர

[26] குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின், பிரிவுகள் 153–154 மற்றும் 159.

[27] 25 யூன் 2003 இல் வட மாகாண உயர்நீதி மன்றம், வவுனியா நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பில், அரச சட்டத்தரணி பாதிக்கப்பட்டவர் ஒரு ஊடகவியலாளர் என்பதால் 'இந்தக் கொலையில் தொடர்புபட்டவர்கள் சட்டத்தில் இருந்து தப்பக்கூடாது என்பதில் மனித உரிமைகள் ஆர்வலர்கள் கரிசனையாக இருப்பதாக' குறிப்பிடுகிறார் என்பதை உதாரணமாகப் பார்க்கவும் : MCJ2023 p340.

[28] Ibid, பிரிவு 120(1).

[29] 1979 குற்றவியல் நடைமுறைச் சட்ட விதி, பிரிவு115(2).

[30] 23 யூலை 2019 சந்தேகநபர் 1 இன் வாக்குமூலம் பதிவுகளில் MCJ2023 p47, கிடைக்ககூடியதாக இல்லை என சட்டமா அதிபரின் வேண்டுகோளிற்குப் பதிலளிக்கையில் நீதிமன்றக் குறிப்புகளைப் பார்க்கவும்.

[31] *தமிழ்நெற்*: 19 ஒக்ரோபர் 2000: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5512

[32] ஐ.நா. மனித உரிமைகள் சபை, வலிந்து காணாமற்பட்டவர்களுக்கான பணிக்குழு (A/HRC/WGEID/119/1), 2 டிசம்பர் 2019, p34: இலங்கையில் காணாமற்போன 36 சம்பவங்களின் குறிப்புகள்: 'றமணன் சிவநாதன் அல்லாரை மீசாலையிலுள்ள (பதினைந்து மைல்கள் யாழ்ப்பாணத்திற்கு கிழக்காக ஒரு மரக்கறித் தோட்டத்திலிருந்து கைது செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது'. https://documents.un.org/doc/undoc/gen/g19/334/74/pdf/g1933474.pdf இனைப் பார்க்கவும்.

யாழ் பாதுகாப்பு படைகளின் தலைமையகம் அந்த நேரத்தில் மேஜர் ஜெனரல் அன்ரன் ED விஜேந்திரா RSP USP ndc psc இன் கீழ் இருந்தது. 2000.08.03 - 2001.07.02 அவர் இன்னமும் உயிருடன் உள்ளார். (https://alt.army.lk/ces/content/major-general-anton-wijendra-retd-rwp-rsp-vsv-usp-ndc-psc-msc-graced-guest-speaker-diners%E2%80%99) அத்துடன் விசாரணை செய்யமுடியும்.

51 படைப் பிரிவு GBW ஜெயசுந்தரா RWP RSP இன் கட்டளையின் கீழ் இருந்தது. https://alt.army.lk/sfhqj/51-division, ஓய்வு பெற்றுவிட்டார். ஆனால் 2021இலும் உயிருடன் இருந்தார். (https://www.defence.lk/Article/view_article/4113); VIR படைப்பிரிவு (https://alt.army.lk/vir/former-colonel-of-the-regiment)

[33] 23 ஏப்ரல் 2001 இல் யாழ் குற்றப் பிரிவு அதிகாரி ஆரியவன்ச நீதிபதி விக்னராஜாவினால் விசாரிக்கப்படல் : MCJ2023 pp86–87. இந்த இராணுவப் பிரிவின் கட்டளை அதிகாரியாக W.M.D. Gunasena; இருந்தார், பொறுப்பு அதிகாரியாக 2ஆம் லெப்டினன்ட். W K Adihetti இருந்தார்: MCJ2023 p282.

https://alt.army.lk/vir/2vir-1 O/2588 Maj WMD Gunasena VIR படம்: https://alt.army.lk/vir/3vir-1

[34] 27 ஓகஸ்ட் 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இராணுவத்தினருடனான் நேர்காணல்கள் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 p282.

வீதியில் ஞானம்ஸ் விடுதியில் அமைந்திருந்த படையணித் தலைமையகத்தினை தொடர்பு கொண்டார்கள். பின்னர் அவர்கள் சம்பவ இடத்திற்குச் செல்வதற்கு முன்னர் மேலதிக படையினர் வரும்வரை காத்திருந்தார்கள்.

கொலை இடம்பெற்று குறிப்பிட்ட நிமிடங்களுக்குப் பின்னர் நிமலராஜனின் குடும்பத்தினர் முன்னணித் தமிழ் பத்திரியையான உதயனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கொலை தொடர்பாக பத்திரிகைக்குத் தெரிவித்ததுடன் உதவியும் கோரியிருந்தார்கள்.[35] கடமையில் இருந்த உதவி செய்தி ஆசிரியரால் பொலிசாரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. பதிலாக ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற தமிழ் அரசியல் கட்சியின் அமைப்பாளர் ஒருவரைத் தொலைபேசியில் அழைத்தார். அத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பிரதிநிதியொருவர் இரவு 10.15 மணிக்கு பொலிசாரை தொலைபேசியில் அழைத்து இந்தக் குற்றச்செயல் பற்றி தெரிவித்தார். ஆரம்பத்தில் இதற்குப் பொலிசார் எவ்வாறு செயலாற்றினார்கள் என்பது தெளிவானதாக இல்லை, ஆயினும் அவர்களது விசாரணையை மேற்பார்வை செய்யும் நீதிபதி E.T.விக்னராஜா அந்த இரவு அல்லது அதற்குப் பின்னர் உயிர் தப்பியிருந்த நிமலராஜனின் குடும்ப உறுப்பினர்களுக்கு எந்த வகையான பாதுகாப்பினையும் பொலிசார் வழங்கத் தவறிவிட்டார்கள் என தனது கடுமையான அதிருப்தியினை பின்னர் வெளிக்காட்டினார்.[36]

### 3.3. அடுத்து வந்த நாட்களும் வாரங்களும்

நிமலராஜனின் கொலைக்கு மறுதினம், இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா ஒரு விரிவான விசாரணையை நடாத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் குறிப்பிடுவது போல 'இந்த விசாரணையைத் தடுக்க வேண்டும் என்பதையே அரசியல் ரீதியான அமைப்பு விரும்பும் அல்லது அதற்கு கட்டளையிடும் என்ற இராணுத்தினருக்கும் பொலிசாருக்குமான சமிக்கையாகவே முரணான வகையிலே பார்க்கப்பட்டது'.[37] கொலைக்குப் பின்னர் நிமலராஜனின் குடும்பத்தினர் வெளிப்படையாகப் பேசத் தயங்கினர். அவரது மனைவியின் சகோதரரான அன்ரன் ஜெகதாஸ் போல் அன்றைய இரவு இராணுவத்தினரின் பதில் நடவடிக்கை 'சுமூகமானதாக' இருந்ததாக விபரித்தார்.[38] சில நாட்களுக்குப் பின்னர் நீதவான் நீதிமன்றத்தில் வைத்து நிமலராஜனுக்கு எதிரிகள் யாராவது இருந்தார்களா எனக் கேட்கப்பட்டபோது 'எனது மகன் வழமையாக இது பற்றி எதுவுமே சொல்வதில்லை' என அவரது தாயார் தெரிவித்தார். ஆகையால் அவருக்கு ஏதாவது எதிரிகள் இருந்தார்களா என எனக்குத் தெரியாது'. தன்னால் எவரையுமே சந்தேகிக்க முடியவில்லை' என நிமலராஜனின் சகோதரி தெரிவித்திருந்ததாக பொலிசாரால் தெரிவிக்கப்பட்டது. குறைந்த வெளிச்சத்தில் தாக்குதல் நடாத்தியவர்களின் உடையினை மட்டுமே பார்த்ததாகவும் மேலும் அவரது குடும்பத்தினரது பாதுகாப்பினைப் பொறுத்தவரை அவர்கள் 'அச்சுறுத்தல்கள் எதையும்' எதிர்நோக்கவில்லை என அவரது தந்தையார் தெரிவித்ததுடன் அவர் 'தமக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கேட்கவில்லை' என பொலிசார் தெரிவித்தனர்.[39] விசாரணையின் முதல் ஆறு மாதங்களில் நிமலராஜனின் உயிருக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அவரது குடும்பத்தினரிடம் அல்லது அவர்களது நண்பர்களிடம் பொலிசார் எந்தவொரு வாக்குமூலத்தையும் பெற்றுக் கொண்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றப் பதிவுகளில் காணப்படவில்லை.[40]

இந்த வழக்கிற்கு யாழ். பொலிசார் ஐந்து பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.[41] கொலைக்குப் பின்னர் அதிகாலையில் நிமலராஜனின் மனைவியின் சகோதரர் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்குத் திரும்பியபோது பக்கத்து வீட்டில் பொலிசாரைக் கண்டார். முதல்நாள் இரவு இராணுவத்தால் கண்டெடுக்கப்பட்ட 9 மி.மீ. தோட்டா மற்றும் கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பினையும் தற்போது பொறுப்பெடுத்துள்ளார்கள். அத்துடன் மேலும் இரண்டு தோட்டாக்களை அல்லது தோட்டாவின் சிதறல் துண்டுகளையும் கண்டுபிடித்தார்கள்.[42] நிமலராஜனின் படிப்பறையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கி தோட்டாவின் ரவைக்கோதும் மூன்றாவது துப்பாக்கி தோட்டாவும் ஏற்கனவே நிமலராஜனின் மூத்த மருமகனான பிறேம்ஜியிடம்

35 27 ஓகஸ்ட் 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட உதயன் துணை ஆசிரியரான ஞானசுந்தரம் குகநாதனின் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 p281. (கொலை இடம்பெற்று கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பின்னர் கதைத்தார். தொலைபேசி அழைப்பினைச் செய்தவர் நிமலராஜனின் தாயார் என்பது போல் சாட்சிக்கு நினைவுள்ளது, இருந்தாலும் அவர் காயப்பட்டிருந்ததைப் பார்க்கும் போது அது அவருடைய சகோதரியாகவோ அல்லது மனைவியாகவே இருப்பதற்கான கூடிய சாத்தியம் உள்ளது.) ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் துல்லியமான ஈடுபாடு 15 செப்ரெம்பர் 2002 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பித்தலில் தற்செயலாக குறிப்பிடப்பட்டுள்ளது: MCJ2023 p374.

36 27 ஒக்ரோபர் 2000 இல் நீதிபதி விக்னராஜா நீதிமன்றத்தில் கதைத்தல்: MCJ2023 p63.

37 https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister

38 19-20 ஒக்ரோபர் 2000 இல் இரவோடு இரவாக எழுதப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வாக்குமூலம: MCJ2023 p252.

39 31 ஒக்ரோபர் 2000 இல் நீதிபதி விக்னராஜாவின் முன் லில்லி திரேஸ் மயில்வாகனம்: MCJ2023 p67; 22 ஏப்ரல் 2001 இல் யாழ் குற்றப் பிரிவு அதிகாரி ஆரியவன்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த பிறேமராணி ஜெகதாஜ் இன் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 p266; 30 மே 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணபதிப்பிள்ளை மயில்வாகனத்தின் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பு:MCJ2023 p272; 31 ஒக்ரோபர் 2000 இல் எழுதப்பட்ட குறிப்பினை யாழ் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கணபதிப்பிள்ளை மயில்வாகனம் பொலிஸ் பாதுகாப்பினை மறுத்ததாக நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட பதிவு: MCJ2023 p240.

40 ஆடிக்குறிப்பு 9 இனை மேலே பார்க்கவும்

41 23 ஏப்ரல் 2001 இல் யாழ் குற்றப் பிரிவு அதிகாரி ஆரியவன்ச நீதிபதி விக்னராஜாவால் விசாரிக்கப்படல்: MCJ2023 p86.

42 '20 ஒக்ரோபர் 2000 இல் நீதிபதி விக்னராஜாவால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணைக் குறிப்புகள்: MCJ2023 p54.

கொடுக்கப்பட்டிருந்ததாக அயலவர் ஒருவர் பின்னர் தெரிவித்தார்.[43] நீதவான், நீதிபதி விக்னராஜா சம்பவ இடத்தினை ஆராய்வதற்காக வந்தார். அத்துடன் படிப்பறையின் யன்னலுக்கு கீழும், நிமலராஜன் கதவடியில் விழுந்துகிடந்த இடத்திற்கும் யன்னலுக்கும் இடையிலும் கடுமையான இரத்தக்கறைகள் இருப்பதை அவதானித்தார். அவர் பின்னர் வைத்தியசாலைக்குச் சென்று அங்கு மரண விசாரணைக்குரிய அனுமதியை வழங்கினார்.[44] மரண விசாரணையை நடாத்திய பதில் நீதித்துறை மருத்துவ அதிகாரி, நிமலராஜன் தலையில் ஏற்பட்ட 'துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால்' இறந்திருந்தார் என தனது சுருக்கத்தில் தெரிவித்திருந்தார்.[45] குறிப்பாக நிமலராஜன் மூன்று தடவைகள் சுடப்பட்டார். ஒரு தோட்டா அவரது வலது மேல்க் கையினைத் துளைத்து ஒன்பது சென்ரி மீற்றர்கள் மேலே தோள்மூட்டுக்கு சற்றுக் கீழாக வெளியேறியது. இரண்டாவது அவரது வலது கன்னத்திற்கு மேலிருந்து பாய்ந்து கடுமையான காயத்தினை ஏற்படுத்திப் பின்னர் அவரது கழுத்தினுள் பிரிந்து சென்றது. ஒரு பகுதி அவரது கழுத்தின் முன்பகுதியிலிருந்து வெளியேறியதுடன் மற்றைய பகுதி அவரது வலது சுவாசப் பையில் பெரிய காயத்தினை ஏற்படுத்தியது. மூன்றாவது கழுத்தின் பின் பக்கத்தில் வலது பக்கமாகத் துளைத்து அவரது மூளையைத் துளைத்துக் கொண்டு மண்டை ஓட்டில் பல உடைப்புக்களை ஏற்படுத்தியவாறு அவரது நெற்றியின் இடது மேல் பக்கத்தால் வெளியேறியது.[46] கணிசமான அளவு இரத்தக்கறை அவரின் முன் பகுதி மற்றும் கால்களில் காணப்பட்டதுடன் அவரது மூக்குத் துவாரத்திலிருந்தும் இரத்தப் பெருக்கு காணப்பட்டது. 'இறந்த நேரம்' என்பதற்கு அருகில் 'உடனடி' என மருத்துவ அதிகாரி கிறுக்கி எழுதியிருந்தார். இறந்தவர் சாதாரண உடல் நலத்துடன் இருந்ததாகவும் பச்சை மற்றும் வெள்ளை நிற பற்றிக் சாரம் அணிந்திருந்ததாகவும் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

கொலைக்கு இரண்டு நாட்களுக்குப் பின்னர் நிமலராஜனின் மரணச் சடங்கில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட துக்கம் அனுசரிப்பவர்கள் ஒன்று கூடினார்கள். அத்துடன் யாழ்ப்பாணம் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. நான்கு நாட்களுக்குப் பின்னர் 600 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் அவரது கொலையைக் கண்டித்து கொழும்பில் போராட்டம் நடாத்தினார்கள். அவரது கொலை 'அரச ஆதரவு ஆயுதக் குழுவினர்' எனக் கூறப்படுபவர்களால் நடாத்தப்பட்டதாக *தமிழ்நெற்* செய்தி வெளியிட்டிருந்தது.[47]

இந்த தாக்குதல் இடம்பெற்று கிட்டத்தட்ட இரண்டு வாரங்களின் பின்னர், நிமலராஜனின் மருமகன் பிரசன்னா இன்னும் வைத்தியசாலையில் உடல்நலம் தேறிக் கொண்டிருந்தார். அத்துடன் நிமலராஜனின் பெற்றோர் அந்த நேரத்தில் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு அனுப்பட்டிருந்தாலும் 31 ஒக்டோபரில் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது அவரது தயாரால் நிற்க முடியவில்லை.[48] அதே நாளன்று, தாக்குதல் பற்றி இராணுவத்திற்கு உடனடியாக தெரியப்படுத்தியும் தாக்குதல் மேற்கொண்டவர்களைப் பிடிப்பதற்கு இராணுவம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பதை கிராம சேவகரிடமிருந்து நீதவான் விசாரித்து அறிந்து கொண்டார். அந்த அன்று இரவு ஊடரங்குச் சட்டத்தினை அமுல்ப்படுத்திய இராணுவத்தினர் அந்த இடத்தினைச் சுற்றி வளைக்கவும் இல்லை. எந்தவித தேடுதல்களை நடாத்தவும் இல்லை. 'அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை'.[49]

01 நவம்பர் 2000 இல் வெளியிடப்பட்ட நீதிமன்ற ஆவணப் பதிவில் சந்தேக நபர்களைப் பொலிசார் கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் இரண்டு சந்தேக நபர்கள் பற்றிய முதல் குறிப்பும் இடம்பெறுகின்றது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் அந்த மாதம் முழுவதும் விரல்ரேகை அடையாள ஆதாரங்களை ஒப்பிட்டுப்பார்ப்பதிலுள்ள தாமதங்கள் பற்றிப் பொலிசார் கூறியதுடன் வழமைக்கு மாறான முறையில் எந்தவித விளக்கமும் கொடுக்கப்படாமல் நிமலராஜனின் வங்கிக் கணக்குப் பதிவுகளைப் பார்ப்பதற்கான அனுமதியைக் கோரினார்கள். அதிர்ச்சிதரும் வகையில் கொலை இடம்பெற்று ஒரு மாதத்திற்கும் மேலான பின்னர், நவம்பர் இறுதியில், இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கித் தோட்டாவின் கோதையும் கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பையும் காட்டியதுடன் அவற்றைக் ஆய்வுக்கு அனுப்புவதற்கான அனுமதியை நீதிபதி விக்னராஜாவிடம் பொலிசார் கேட்டார்கள்.

[43] 30 மே 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சிசில் செல்வராஜா டினேசின் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 p268. இந்த வாக்குமூலம் தொடரப்பபட்டமைக்கான எந்தப் பதிவும் இல்லை.

[44] 20 ஒக்ரோபர் 2000 இல் நீதிபதி விக்னராஜாவால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணைக் குறிப்புகள்: MCJ2023 pp52-56.

[45] முழுமையான பிரேதப் பரிசோதனைக்கு MCJ2023 pp241-253. இனைப் பார்க்கவும்.

[46] மேலே கொடுக்கப்பட்டுள்ள வரிசையில் மூன்று குண்டுகள் சுடப்பட்டன என்பதை மறைமுகமாக குறிப்பிடுவதை தவிர, MCJ2023-ல் பிரேத பரிசோதனை கண்டுபிடிப்புகளின் எந்த பகுப்பாய்வும் வழங்கப்படவில்லை. இருப்பினும் துப்பாக்கிச்சூடுகள் நடாத்தப்பட்ட கோணங்கள் முக்கிய துப்பினை வெளிப்படுத்துகின்றன.

[47] *தமிழ்நெற்*: 21 மற்றும் 25 ஒக்ரோபர் 2000. : https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5515, https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5523 இனைப் பார்க்கவும்

[48] தாயாரை அமர அனுமதிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நீதிபதி விக்னராஜாவின் அவதானிப்பினைப் பார்க்கவும்: MCJ2023 p65.

[49] 31 ஒக்ரோபர் 2000 வைரமுத்து சந்திரராஜாவினால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட வாக்குமூலம்: MCJ2023 p71.

## 3.4. 2001: சிறிய முன்னேற்றம்

ஜனவரி 2001 இல் பௌதீகப் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கான வேண்டுகோளை மீண்டும் முன்வைத்தார்கள். சான்றுப் பொருள் பி1 கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பு இது சீனத் தயாரிப்பு எனவும் சான்றுப் பொருள் பி2 கைத்துப்பாக்கி அல்லது சிறிய இயந்திர துப்பாக்கிக்குரிய தானாக ரவை ஏற்றும் 9மி.மீ துப்பாக்கித் தோட்டா எனவும் அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தார்கள்.[50] மார்ச்சில் நிமலராஜனின் சுவாசப் பையினைத் துளைத்த தோட்டாவின் சிதறல் துண்டு போன்ற ஒரு பொருள் ஆதாரம் இறந்த உடலில் இருந்து எடுக்கப்பட்டதா என்பது பற்றிய மரண விசாரணை உறுதிப்படுத்தல் சட்டமா அதிபருக்கு தேவை என்பதால் மேலதிக தாமதங்கள் இடம்பெறுவதாகப் பொலிசார் தெரிவித்தார்கள். விரல் ரேகை அடையாளத்துடன் கைவிடப்பட்ட துவிச்சக்கர வண்டியொன்று நிமலராஜனின் வீட்டுக்கு அருகில் கொலை இடம்பெற்ற பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிப்படையாக முதல் முறையாக அவர்கள் தெரிவித்ததுடன் அதனை விற்பனை செய்தவர் மற்றும் வாங்கியவர் பற்றிய விபரங்கள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார்கள். பொலிசார் நீதிமன்றத்தின் அதிகாரத்தினை கடந்து சட்டமா அதிபருக்கு நேரடியாக அறிவிப்பதை நீதிமன்றம் ‘ஏற்றுக்கொள்ளாது’ என நீதவான் பதிலளித்தார். கொலைக்கு அடுத்த நாள் காலையில் கண்டுபிடிக்கப்பட்ட மேலதிக தோட்டாச் சிதறல்கள் பி3 என்ன? ஏன் இன்னமும் பௌதீகச் சான்றுகள் பற்றிய முழுமையான விபரங்கள் இல்லை எனவும் ‘இந்த வழக்கில் ஏன் பொலிசாரால் முன்னேற்றத்தை அடையமுடியாமல் இருக்கிறது’ என்பதை விளக்கி ஒரு அறிக்கையினை 04 ஏப்ரல் அளவில் வழங்குமாறு நீதவான் கேட்டுக் கொண்டார்.[51]

கொலை இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர், 5561592 என்ற தொடர் இலக்கத்தினைக் கொண்ட ‘லுமாலா’ துவிச்சக்கர வண்டியைப் பற்றி விசாரணை நடாத்தி வந்ததாக பொலிசார் நீதி மன்றத்திற்கு தெரிவித்தார்கள்.[52] இது கொலை இடம்பெற்று அடுத்தநாள் வீட்டில் இருந்து தெற்கு நோக்கி கிட்டத்தட்ட 500 மீற்றர்கள் தொலைவில் புகையிரதப் பாதைக்கு அடுத்துள்ள ஒரு பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளூர்வாசிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.[53] அத்துடன் அந்த துவிச்சக்கர வண்டியில் கைரேகை அடையாளமும் காணப்பட்டன.[54] அதன் பின்னர் புதிய தகவலை வழங்குகையில் அதனுடைய சொந்தக்காரர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் இந்தக் கொலை வழக்கு தொடர்பில் ‘இது வரை எந்தத் தொடர்பும் வெளியாகவில்லை’ எனவும் பொலிசார் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்கள்.[55] அயலவர்களிடமிருந்தும் வீதிச் சோதனை நிலையங்களில் காவல் கடமையில் இருந்த பொலிசார் மற்றும் இராணுவத்தினரிடமிருந்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இதுவரை சம்பவத்துடன் தொடர்புபட்ட எந்த ஆதாரங்களும் வெளியாகவில்லை என பொலிசார் நீதிமன்றத்திற்கு ஒரு எழுத்துமூலமாக அறிவித்தார்கள்.[56] ஊரடங்குச் சட்டம் இருந்த வேளையில் இந்தப் பகுதியில் இறுக்கமான பாதுகாப்பு இருந்த போதிலும் குறைந்தது இரண்டு குறுக்கு வழிகளினூடகச் சென்று தாக்குதல்தாரிகள் அருகிலுள்ள காவல் நிலைகளை தவிர்த்து தப்பிச் சென்றிருக்க முடியும் என நேரடி விசாரணையின் போது ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இதன் மூலம் ஒருவர் காவல்துறை தலைமையகத்தை அல்லது 512 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்திற்கு அருகில் எங்காவது ஒரு இடத்தினை சென்றடைந்திருக்கலாம் என்ற கருத்தையும் கூட அவர் ஏற்றுக் கொண்டார். நீதவான் கைதுகளை மேற்கொள்ளுமாறு மீண்டும் கோரிக்கை விடுத்தார்.[57]

### ஒரு புதிய விசாரணைக் குழு

16 ஏப்ரல் 2001, கொழும்பு சிஐடி பிரிவு மற்றும் கொலைப் பிரிவின் முன்னணி விசாரணையாளரான றஞ்சித் டி சில்வா தலைமையிலான கொழும்பு பொலிஸ் அதிகாரிகள் குழுவினை இந்த வழக்கினைப் பொறுப்பு எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் கட்டளையிட்டார். அவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கு முன்னர் நிமலராஜனின் உறவினர்களை மீண்டும் விசாரித்தார்கள். அவரது முழுக்குடும்பமும் இந்த நேரத்தில் தமது பாதுகாப்பிற்காக கொழும்புக்குச் சென்றிருந்தார்கள். அத்துடன் இலங்கையில் அவர்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பற்ற சூழல் இருந்தமையால் கொழும்பிலிருந்து நாட்டைவிட்டுச் செல்வதற்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.[58]

[50] அரச பகுப்பாய்வாளர் MAJ மென்டிஸ் இன் அறிக்கை, 29 ஜனவரி 2001: MCJ2023 p259.

[51] 27 மார்ச் 2001 இல் நீதிமன்றத்தில் யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் விமலசேனா நீதிபதி விக்னராஜாவால் விசாரிக்கப்படல்: MCJ2023 pp81-82.

[52] அநேகமான சம்பவம் பற்றிய விபரிப்புகளில் சரியான தொடர் இலக்கம்

[53] இன்ஸ்பெக்டர் டி சில்வா 30 மே 2001 இல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த ரட்ணம் தயாபரனின் வாக்குமூலத்ததினை உதாரணமாகப் பார்க்கவும்: MCJ2023 pp 269-70. பி.கு பொலிசாருக்கு அந்த துவிச்சக்கர வண்டியை ‘ஏற்றுவதற்கு’ தான் உதவி செய்ததாக சாட்சியத்தின் நேர்மையைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு குறிப்பும் இல்லாமல் ஒரு உள்ளூர்வாசி தெரிவித்தார்: 30 மே 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த நவரத்தினம் பரமேஸ்வரனின் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பினைப் பாரக்கவும்: MCJ2023 p270.

[54] 04 ஏப்ரல் 2001 இல் நீதிமன்றத்திற்கான யாழ் குற்றப் பிரிவு அதிகாரியான விதரணவின் சமர்ப்பிப்பு: MCJ2023 p262.

[55] 23 ஏப்ரல் 2001 இல் நீதிமன்றத்திற்கான யாழ் குற்றப் பிரிவு அதிகாரியான ஆரியவன்சவின் சமர்ப்பிப்பு: MCJ2023 p84.

[56] 22 ஏப்ரல் 2001 இல் நீதிமன்றத்திற்கான யாழ் குற்றப் பிரிவு அதிகாரியான ஆரியவன்சவின் சமர்ப்பிப்பு: MCJ2023 p266.

[57] 23 ஏப்ரல் 2001 இல் நீதிமன்றில் நீதிபதி விக்னராஜாவால் யாழ் குற்றப் பிரிவு அதிகாரியான ஆரியவன்ச விசாரிக்கப்படல்: MCJ2023 pp85-88.

[58] 30 மே 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதி மன்றத்திற்கு இவர்களது புதிய வாக்குமூலங்கள், CID இனரின் ஒரு தொகுப்பாக சமர்ப்பிக்கப்பட்டது: MCJ2023 p271-273.

மே மாதத்தில், 'தாம் கடமை செய்த பகுதிகளில் இருந்து வேறு பகுதிகளுக்கு இப்போது சென்றிருப்பதால்' கொலை இடம்பெற்ற இரவு பல்வேறு காவல் நிலைகளில் கடமையில் இருந்த இராணுவத்தினரை தன்னால் விசாரிக்க முடியாமல் போயிருந்ததாக டி சில்வா நீதவானிடம் தெரிவித்தார். இராணுவத்தினரால் நிச்சயம் அவர்களை அடையாளங்கண்டு அவர்கள் அனைவரும் இருக்கும் இடத்தினைக் கண்டுபிடிக்கமுடியும் எனப் பதிலளித்ததுடன், 'அவர்களுக்குத் தெரியாமல்' 'எவரும்' அந்தப் பகுதிக்குள் நுழைந்திருக்க முடியாது எனத் தனது நம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்தினார். ஒரு மாத காலத்திற்குள் இந்த இராணுவத்தினரிடமிருந்து முழுமையான வாக்குமூலத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் டி சில்வாவிற்கு உத்தரவிட்டார். கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பான பி1 மற்றும் பாவித்த தோட்டாவின் கோது ஆகியன மேலதிக விரிவான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என டி சில்வா கேட்டுக் கொண்டார். துவிச்சக்கர வண்டியினை பொலிசார் ஏற்கனவே பரிசோதனைக்காக அனுப்பியிருந்தாகவும், விரல் ரேகைப் பகுப்பாய்வு இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.[59]

விசாரணைகளின் சுருக்கங்களை டி சில்வா சமர்ப்பித்தார்.[60] ஒப்பீட்ளவில் கொழும்பில் பாதுகாப்பாக இருந்த நிமலராஜனின் குடும்ப உறுப்பினர்கள் நிமலராஜன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவரும் அவரது மனைவிக்கும் கிடைத்த அச்சுறுத்தல்கள் பற்றி இறுதியாக விபரிக்ககூடியதாக இருந்ததை இவை வெளிக்காட்டின. யாழ்ப்பாணத்தில் வேறாக நடாத்தப்பட்ட விசாரணைகளில், தனக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் பற்றி அவர் எவ்வாறு தெரிவித்திருந்தார் என நிமலராஜனின் நண்பர்கள் தெரிவித்தார்கள். டி சில்வா கண்டுபிடித்த வீடியோக்கடை உரிமையாளர், கைவிடப்பட்ட துவிச்சக்கர வண்டி பின்னர் கண்டு பிடிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் கொலை இடம்பெற்ற இரவு 8 மணிக்கு துவிச்சக்கர வண்டியில் கறுப்பு நீளக்காற்சட்டையும் ரீசேட்டும் அணிந்த இருவரைக் கண்டதாக விபரித்தார். இருட்டில் அவர்களை இரவு ரோந்துப் பணியில் இருந்த சிங்கள இராணுவத்தினர் என நம்பிவிட்டார்.[61] இன்னுமொரு நேர்காணலில், 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில், குறுகிய காலம் இருந்த அரசியல் கட்சியான PDA[62] இனைச் சேர்ந்த வன்னியசிங்கம் குணசீலன், தனது அமைப்பு ஒரு லுமாலா துவிச்சக்கர வண்டியை[63] வாங்கியதாகவும் அது கட்சியின் பணியாளரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் அல்லது ஜெகன் என இ அழைக்கப்படும் கிருபாவால் பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். ஜெகன் PDA இனைவிட்டு வெளியேறியபோது துவிச்சக்கரவண்டியையும் எடுத்துச் சென்றிருந்தார். அத்துடன் அதற்கு சில நாட்களுக்குப் பின்னர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடன் ஜெகன் திரிவதை குணசீலன் பார்த்திருந்தார்'. துவிச்சக்கரவண்டி கண்டு பிடிக்கப்பட்டது செய்திகளில் வெளிவந்த போது ஜெகன் பற்றி பொலிசாருக்கு குணசீலன் அறிவித்தார். ஜெகன் அந்த துவிச்சக்கர வண்டியினை விஸ்ணு என்றழைக்கப்படும் இன்னுமொருவருக்கு கொடுத்திருந்ததாக குணசீலன் தெரிவித்திருந்தார். இன்னுமொரு செவ்வியில் ஈ.பி.டி.பி. இன் அமைப்பாளர் ஒருவர் ஜெகன் பற்றியோ அல்லது அந்த துவிச்சக்கர வண்டி பற்றியோ எதுவும் தெரியாது என மறுத்தார். ஆனால் டி சில்வாவின் விசாரணையின் போது தான் ஈ.பி.டி.யின் உறுப்பினராக இருந்ததாக ஒத்துக் கொண்டிருந்தாலும் PDAஇன் துவிச்சக்கர வண்டியை எடுத்ததையோ அல்லது விஸ்ணு என்ற ஒருவரை தனக்கு தெரியும் என்பதையோ மறுத்திருந்தார். பதிலாக, பெப்ரவரியில் இரண்டு PDA உறுப்பினர்களால் தாக்கப்பட்ட பின்னர் நிமலராஜன் கொலை இடம்பெற்ற இடத்திற்கு அருகில் அந்த துவிச்சக்கர வண்டியை போட்டதாக 'பொலிசாருக்கு வாக்குமூலம் வழங்க தான் உடன்பட்டிருந்ததாக' அவர் தெரிவித்தார்.[64] அவரைத் தாக்கியவர்களில் ஒருவர் குணசீலன் ஆகும். 'அவர்களது அச்சுறுத்தல் பற்றிய பயம் காரணமாக', 'தான் அந்த துவிச்சக்கர வண்டியினை விஸ்ணு என்ற நபருக்கு கொடுத்திருந்ததாக பொலிசாரிடம் கூறியதாக ஜெகன் தெரிவித்தார். அத்துடன் அந்த வாக்குமூலம் பொய்யானது' எனவும் கூறுகிறார்.[65]

யூன் பிற்பகுதியில், ஒரு அரச பகுப்பாய்வாளரிடமிருந்து நீதிமன்றம் அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொண்டது. அதில் அவர் பி1 ஆன கைக்குண்டின் பாதுகாப்பு நெம்பு சீனாவினுடையது

[59] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, அத்துடன் 30 மே 2001 இல் இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவை நீதிபதி விக்னராஜா விசாரித்தல்: MCJ2023 pp91–92.

[60] 30 மே 2001 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாக்குமூலங்கள் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 pp268 .

[61] 'துணை ஆயதக்குழுவினைச் சேர்ந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இரவில் நடமாடித் திரிவதற்கான விசேட அனுமதியைக் கொண்டிருந்தார்கள் எனவும் ஈ.பி.டி.பி. யினரும் பாதுகாப்பு படைகளும் அந்த நேரத்தில் ஒன்றாக இணைந்து பணியாற்றினார்கள் எனவும் எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் என்ற அமைப்பு பின்னர் சுட்டிக்காட்டியது': https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister

[62] PDA என்பது ஒரு போதுமே வெற்றி பெறாத ஒரு சிறிய அரசியல்க் கட்சி அல்லது பிரிவு (MCJ2023 p281 PDAஇனை 'மக்கள் ஜனநாயகக் கூட்டணி என விபரிக்கின்றது).

[63] 27 ஓகஸ்ட் 2001 மற்றும் 11 யூன் 2002 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த யாழ்ப்பாணப்பிரிவு PDA கட்சியின் அமைப்பாளர் நாகலிங்கம் ராஜேந்திரம் ராஜேஸ்வரன் இன் வாக்குமூலங்கள் பற்றிய CID இன் தொகுப்பினை பார்க்கவும்: MCJ2023 pp281, 305.

[64] அப்படியானால், யாழ்ப்பாணப் பொலிசார் அந்த நேரத்தில் நீதிமன்றத்திற்கு இது பற்றி எந்த விபரமும் கொடுத்ததாக தெரியவில்லை.

[65] அவரது மனைவி ஜெகதீஸ்வரன் தவமணியின் வெளிப்படையான உறுதிப்படுத்தலுக்காக, 27 ஓகஸ்ட் 2001, இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அவரது வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பினைப் பார்க்கவும் :2001MCJ2023 p282. PDA உடனடிப் பதிலுக்காக, இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த சண்முகரட்ணம் ஜெயமோகன் என்றழைக்கப்படும் நிசாந்தனுடைய வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பினைப் பார்க்கவும்:2001: MCJ2023 p287.

என்ற முன்னைய கண்டுபிடிப்பு பற்றி புதிய தகவலை வழங்கினார். உண்மையில் எஸ்.எவ் ஜி –87 ரகம் சிங்கப்பூரின் தயாரிப்பு என தற்போது அவர் கூறுகிறார்.[66] யூலை மாதத்தில், கொலை இடம்பெற்ற இரவில் கடமையிலிருந்த பத்து இராணுவத்தினரின் பெயர்களுடன் ஒரு அறிக்கையினை டி சில்வா தயாரித்திருந்தார், 'அவர்களது வாக்குமூலங்களின் படி சந்தேகத்திற்குரிய அந்த இரவில் எவரும் அவர்களது சோதனை நிலையங்களைக் கடந்து செல்லவில்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.[67] அவர்களது முழுமையான வாக்குமூலங்களுடன், தொடர்புபட்ட காவல் நிலையங்களில் கடமையில் இருந்த எல்லா இராணுவ வீரர்களினதும் பெயர்களை வழங்குமாறு நீதவான் மீண்டும் கோரிக்கைவிடுத்தார். டி சில்வாவின் கீழ்பணியாற்றும் ஒரு சப் இன்ஸ்பெக்டரினால் ஜெகன் அல்லது குணசீலனிடமிருந்து கைரேகை எடுக்கப்பட்டதா என்பதைக் கூறமுடியவில்லை. இந்த வழக்கிலுள்ள அனைத்துச் சந்தேக நபர்களிடமிருந்து கைரேகை எடுக்கப்பட வேண்டும் என நீதவான் உத்தரவிட்டார். கைவிடப்பட்ட லுமாலா துவிச்சக்கர வண்டி பற்றிய தகவலினைக் கேட்டு அதன் படத்தினை ஒளிபரப்புச் செய்வதற்கான அனுமதியை டி சில்வாவின் குழு கேட்டது.[68] ஓகஸ்டில், துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் நிமலராஜனின் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினரின் பெயர்களை டி சில்வா வழங்கினார். அவரது கூற்றுப்படி, இந்த விசாரணைக்கு வழங்குவதற்கு அவர்களிடம் புதிதாக எதுவும் இல்லை. அந்தப் பகுதியில் அந்த இரவு கடமையில் இருந்த இன்னமும் விசாரணை செய்யப்படாத 22 இராணுவத்தினரின் இன்னுமொரு பட்டியலை அவர் கொடுத்தார். அத்துடன் 'இந்த விசாரணையின் முன்னேற்றம் பற்றி அறிவிப்பதற்கு தயவு செய்து நீண்ட கால அவகாசம் வழங்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.[69]

ஒக்டோபரில், கொலை இடம்பெற்ற அடுத்த நாள் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள் அல்லது தோட்டாவின் சிதறல்களான பி3 இனை பகுப்பாய்வு செய்வதன் அவசியத்தை டி சில்வா எழுப்பினார். அவை பி2 உடன் தொடர்புபட்டதா? அத்துடன் அவை 'ஒரு மனித உயிரைக் கொல்வதற்கு பயன்படுத்தப்படுமா?' அடுத்த மாதம் அந்தப் பகுப்பாய்வு வழங்கப்பட வேண்டும் என நீதவான் கோரிக்கை விடுத்தார்.[70] 12 நவம்பரில், தகவல் கிடைத்ததையடுத்து சொல்லப்பட்ட குற்றத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு சந்தேக நபர்களிடமிருந்து வாக்குமூலங்களை CID யினர் பெற்றிருப்பதாக டி சில்வா நீதிமன்றத்திற்கான அறிக்கையில் ஒரு சிறிய குறிப்பினைச் சேர்த்திருந்தார். செபஸ்ரியான் றமேஸ் என்றழைக்கப்படும் நெப்போலியன் மற்றும் டேவிட் மைக்கல் கொலின் என்றழைக்கப்படும் முரளி ஆகியோர் சந்தேகத்திற்குரிய நபர்கள் ஆவர். இருவரும் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மறுத்திருந்தார்கள். எனவே டி சில்வா அவர்களைச் செல்ல அனுமதித்திருந்தார். யாழ்.குடாநாட்டிற்கு மேற்கு கரைக்கு அப்பாலுள்ள தீவான ஊர்காவற்துறைக்கான ஈ.பி.டி.பி. இன் இராணுவப் பிரிவிற்கு நெப்போலியன் பொறுப்பாக இருந்ததுடன் அவரது பெயர் பரவலாக அந்த நேரத்தில் பத்திரிகையாளர்களால் சந்தேக நபர் எனவும் 'தாக்குதல்தாரி' எனவும் குறிப்பிடப்பட்ட போதிலும் இந்த வழக்குடன் அவர்களுக்குள்ள தொடர்பு வெளிப்படையாக விபரிக்கப்படவில்லை.[71] மேலும் இரண்டு சந்தேக நபர்களை தேடிக்கண்டு பிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். நெப்போலியன் மற்றும் முரளி ஆகியோரை விடுதலை செய்ததன் மூலம் டி சில்வா எவ்வாறு குற்றவியல் நடைமுறை விதியை மீறியுள்ளார் என்பதை விளக்கி நீதவான் பதிலளித்தார். நவம்பர் 27 இல் 2001 முடிவை நெருங்கிய வேளையில் அவர்கள் இருவரையும் முன்னிலைப்படுத்துமாறு டி சில்வா இற்கு உத்தரவிட்டதுடன் அவர் தவறும் பட்சத்தில் 'நீதித்துறை சேவைகளுக்கு' அறிவிக்கப் போவதாகவும் நீதவான் அச்சுறுத்தினார்.[72]

### 3.5. 2002: மீள நடாத்தப்பட்ட விசாரணை

தனது சொந்த ஆய்வின் பின்னர் 'ஒக்ரோபர் 2000 இலிருந்து ஜனவரி 2002 வரை பொலிசாரின் வேலை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளால் தடுக்கப்பட்டதை தான் உறுதிப்படுத்தமுடியும் என எல்லைகளாற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்தது. ஆனால் தேர்தல் இடம்பெற்ற 09 டிசம்பர் 2001 இல் ஒரு ஆட்சிமாற்றத்தின் பின்னர் 'முன்னைய

[66] M.A.J மென்டிஸ் பற்றிய அரசாங்கப் பகுப்பாய்வு அறிக்கை, 25 மே 2001: MCJ2023 pp276.

[67] CID இனைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் லின்டனின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு [தெளிவில்லை] யூலை 2001: MCJ2023 p278.

[68] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 16 யூலை 2001: MCJ2023 pp95-97.

[69] இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 27 ஓகஸ்ட் 2001: MCJ2023 p282-283. ஆந்த இரவு யார் கடமையில் நின்றார்கள் என பிபிசி இராணுவத்தினைக் கேட்ட போது 'தாம் அந்த பதிவுகளைத் தொலைத்து விட்டோம் என்று அவர்கள் கூறினார்கள்'. இந்தக் கேள்வியினை (இது பதில் இல்லை) உள்ளூர் பத்திரிகையாளர்கள் கேட்பதற்கு மிகவும் பயந்தார்கள், அதுவே அடுத்தநாள் உதயன் செய்தித்தாளில் தலையங்கமானது. https://www.bbc.com/sinhala/highlights/story/2004/08/040820_frances ,இனைப் பார்க்கவும்.

[70] நீதிமன்றத்தில் வாதப் பரிமாற்றங்கள், 3 ஒக்ரோபர் 2001: MCJ2023 pp100-102, 284-285.

[71] பிரான்சிஸ் ஹரிசன், பிபிசி செய்தியாளர், கொழும்பு 2000-2004.

*தமிழ்நெற்*: 7 நவம் 2001: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=6443

[72] 12 நவம்பர் 2001, 27 நவம்பர் 2001 and 26 நவம்பர் 2001 இலிருந்து நீதிமன்றக் குறிப்புகள்: MCJ 2023 pp287, 289, 104. நிமலராஜனின் கொலையைக் குறிக்கும் முகமாக பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு (CP), 'எமது மதிப்பிற்குரிய சகஊழியரின் படுகொலை பற்றி தீவிரமாக அதிகாரிகள் விசாரிக்கத் தவறியமை குறித்து இந்த அமைப்பு மிகுந்த கவலை அடைந்துள்ளது' என இலங்கை ஜனாதிபதிக்கு எழுதியது: https://cpj.org/2001/10/on-anniversary-of-journalists-murder-cpj-demands-a/

அரசாங்கத்தின் கீழ் இடைநிறுத்தப்பட்ட விசாரணையைப் பொலிசார் மீண்டும் மேற்கொண்டார்கள்' என்பதையும் அது குறித்துக்காட்டியது.[73] 2002 பெப்ரவரியில் இந்த வழக்கினை வேகப்படுத்துமாறு CID இனரை சட்டமா அதிபர் அறிவுறுத்தியிருந்ததாக *தமிழ்நெற்* இதேபோல் செய்தி வெளியிட்டது..[74]

15 மார்ச் 2002 இல் சந்தேக நபரான ஜெகனை புதிய விசாரணணைக்காக கொண்டு வரும் தனது முயற்சியில் விரக்தியடைந்துள்ளதாக டி சில்வா நீதிமன்றத்திற்கு அறிவித்தார். ஜெகன் ஊர்காவத்துறையில் ஈ.பி.டி.பி. முகாமில் இருந்தார் 'அதனால் அவரைக் கொண்டு வர முடியவில்லை அத்துடன் ஈ.பி.டி.பி. இனரால் அவர் விடுதலை செய்யப்படவில்லை'. ஜெகனை விசாரணைக்கு 'தவறாமல்' முன்னிலைப்படுத்துமாறு ஈ.பி.டி.பி. இன் தலைவர் டக்லஸ் தேவானந்தாவிற்கு உத்தரவிடுமாறு யாழ்ப்பாண நீதிமன்றத்தினை டி சில்வா கேட்டுக் கொண்டார்.[75] ஜெகன் புதிய விசாரணைகளுக்காக 02 ஏப்ரல் இல் கொழும்பில் முன்னிலைப்படுத்தப்பட்டார். 'நெருப்பு மற்றும் மழுங்கிய ஆயுதத்தினால் ஏற்பட்ட 6 மாதங்களுக்கு மேலான காலப்பகுதியைக் கொண்ட பழைய காயத்தழும்புகளை' அவர் காட்டியுள்ளதை அங்கு நடத்தப்பட்ட 'ஒரு சட்ட மருத்துவப் பரிசோதனை' கண்டுபிடித்துள்ளது. படத்தில் காட்டப்பட்ட லுமாலா துவிச்சக்கர வண்டி அவர் பயன்படுத்திய அதே துவிச்சக்கர வண்டியினுடையது என்பதனை ஜெகன் மறுத்திருந்தாலும் சில நாட்களின் பின்னர் பிறிதொரு நேர்காணலில் அவரது மனைவி இது உண்மையில் அவரது துவிச்சக்கர வண்டி என தெரிவித்தார். சட்டமா அதிபரின் ஆலோசனையை தான் நாடுவதாக டி சில்வா தெரிவித்தார்.[76]

மே 2002 இல், நிமலராஜன் வசித்த பிரதேசத்தில் கடமையில் இருந்த பாதுகாப்பு படையினர் எண்ணிக்கை பற்றி பாதிக்கப்பட்டவரை பிரிதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர்கள் பேசியதுடன் 'பாதுகாப்பு படையினருக்கு தெரியாமல் எவரும் அந்த இடத்திற்குள் வருவது சாத்தியமற்றது' என மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தினார்கள். பொலிசாரும் இராணுவத்தினரும் கொலை இடம்பெற்ற இரவு காவல் கடமையில் இருந்துள்ளார்கள்[77] எனவும் இந்த அதிகாரிகளிடமிருந்து எந்த வாக்குமூலங்களும் கோரப்படவில்லை அல்லது எடுக்கப்படவில்லை என வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார். இந்த பொலிஸ் அதிகாரிகளும் அடையாளங்காணப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும் என நீதவான் இப்பொழுது உத்தரவிட்டுள்ளார்.[78] தமிழ்நெற்றின் படி, 'பிரதான சந்தேக நபர்' என அது அழைத்தவரும் இரண்டாவது மிக அண்மையில் இடம்பெற்ற கொலையிலும் இரண்டு மோசமான தாக்குதல்களில் தொடர்புபட்டு இருந்தவர் என அது கூறிய நெப்போலியனைப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அவர் 'நாட்டைவிட்டுச் தப்பிச் சென்று விட்டதாக' பொலிசார் அறிவித்ததுடன் அவரைக் கைது செய்வதற்கு அனைத்துலகப் பொலிஸ் அமைப்பின் (Interpol) உதவி நாடப்படும்' [79] என நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்கள். அடுத்து வந்த அறிக்கையில் நெப்போலியன் 'யாழ்ப்பாணத்தில் இலங்கைக் கடற்படையினருடன் நெருக்கமாகச் செயற்பட்டதுடன்' 'இலங்கை ஆயுதப்படைகளின் சில சக்திவாய்ந்த பிரிவுகளின் உதவியுடன்' அவர் நாட்டைவிட்டு சென்றிருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக *தமிழ்நெற்* குற்றஞ்சாட்டியது.[80]

05 யூனில், தனது உறுப்பினர்கள் குறித்த முழுமையான ஆவணத்தினையும் அதனிடமுள்ள ஆயுதங்கள் பற்றிய முழு விபரங்களையும் சமர்ப்பிக்க உத்தரவிடுமாறும் ஜெகன், 273 ஸ்ரான்லி றோட்டிலுள்ள ஈ.பி.டி.பி. இன் செயலகத்தில் ஈ.பி.டி.பி. யின் துவிச்சக்கர வண்டிகள் உட்பட வாகனங்களுக்கு பொறுப்பாக இருந்த 'விஸ்வன்' மற்றும் விசு என்றழைக்கப்படும் ஈ.பி.டி.பி. யின் அமைப்பாளர் பசுபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன் ஆகியோரை முன்னிலைப்படுத்த உத்தரவிடுமாறு டி சில்வா நீதிமன்றத்தினைக் கேட்டுக் கொண்டார்.[81] ஈ.பி.டி.பி. தனது ஆறு உறுப்பினர்களை டி சில்வாவிடம் அனுப்பியது, ஆனால் மேலும் 13 பேரை கண்டுபிடிக்க அவருக்கு உதவி செய்யத்தவறியது.[82] அதனுடைய 'முறையான' ஆயுதப் பட்டியலையும் அது வழங்கவில்லை.[83] எவ்வாறாயினும் அது போதியளவு இணங்கி நடந்து

[73] https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister. (ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ரணில் விக்கிரமசிங்கவால் பிரதமராக்கப்பட்டார்)

[74] *தமிழ்நெற்:* 10 பெப் 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=6692

[75] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 15 மார்ச் 2002: MCJ2023 pp106-107, 293.

[76] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 29 ஏப்ரல் 2002: MCJ2023 p296. இந்த ஆவணத்தில், ஜெகனின் சட்டபூர்வ மனைவி என விபரிக்கப்படுபவர் பொன்னசாமி மேரி சுபா எனப் பெயரிடப்படுகிறார். (அடிக்குறிப்பு 65 வெளிப்படையான வேறு மனைவியைக் கொண்டுள்ளது.)

[77] கடந்து செல்லும் போது காவற்கடமையிலுள்ள பொலிசாரின் பிரசன்னம் உண்மையில் அவதானிக்கப்பட்டிருந்ததாக 23 ஏப்ரல் 2001 யாழ் பொலிசார் தமது சமர்ப்பிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

[78] நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 5 யூலை 2002: MCJ2023 p129.

[79] தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் பொலிசாரின் கூறியதை நிராகரித்ததாகச் சொல்லப்பட்டது'.தமிழ்நெற்றைப் பார்க்கவும்: 7 யூன் 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7037

[80] *தமிழ்நெற்:* 11 நவம்பர் 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7799

[81] MCJ2023 pp108-109. இனைப் பார்க்கவும்

[82] 19 பெயர்களுக்கு MCJ2023 p303 இனைப் பார்க்கவும்

[83] இன்ஸ்பெக்டர் டி சில்வா மற்றும் உதவி இன்ஸ்பெக்டர் எம்.ஆர் தயாரத்னாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 07 யூன் 2002: MCJ2023 p111.

கொண்டமையானது டி சில்வா அதே மாதம் கொலையுடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் பேரில் ஜெகன் மற்றும் விஸ்வன் ஆகியோரை கைது செய்வதில் வெற்றிகாண உதவியது. இருவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள்.[84] ஜெகன் நீதவானுக்கு தனிப்பட்ட ரீதியில் தானாக முன்வந்து வாக்குமூலம் ஒன்றினை வழங்கினார். அது நீதிமன்றப் பதிவுகளில் காணப்படவில்லை.[85] விஸ்வன் தொடர்புபட்ட துவிச்சக்கர வண்டி அவரது பொறுப்பில் இருந்ததை அல்லது கொலை இடம்பெற்ற நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. இன் வாகனங்களுக்குப் பொறுப்பாக இருந்ததை அல்லது கொலை இடம்பெற்ற போது அவர் யாழ்ப்பாணத்தில் இருந்ததை நீதிமன்றத்தில் மறுத்தார். 'எனக்கு 'இந்தச் சம்பவத்துடன் தொடர்பில்லை'. அந்த நேரத்தில் பொறுப்பாக இருந்தவர் காணாமற்போய்விட்டார் என அவர் தெரிவித்தார்.[86]

04 யூலை 2002 இல், *தமிழ்நெற்றின்* [87] படி பொன்னையா தர்மலிங்கம் என்ற ஒரு முன்னாள் ஈ.பி.டி.பி. போராளியான ஒரு புதிய சாட்சி. வெளிப்படையாகவே பொலிசாருடன் கதைப்பதற்கு அச்சப்பட்டு தனிப்பட்ட ரீதியில் நீதவானுக்கு தானாக முன்வந்து வாக்குமூலத்தினை வழங்கினார்.[88] ஒக்ரோபர் 2000 ஆண்டின் பிற்பகுதியில் நிமலராஜனின் கொலைக்குப் பின்னர், ஈ.பி.டி.பி. உறுப்பினரான சலீம் என்பவரும் ஒன்றாக மது அருந்தினர். அப்போது நிமலராஜன் கொலையின் அச்சத்தின் காரணமாக முரளி ஈ.பி.டி.பி. யினை விட்டுச் சென்றுச் விட்டதாக அவர் தெரிவித்தார். கொலை இடம்பெற்ற இரவு 'முரளி, பாசா (பாட்சா) மற்றும் சத்தியா ஆகியோர் இரவு 7 மணியளவில் 2 துவிச்சக்கர வண்டிகளில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தினை விட்டுச் சென்றதாக' சலீம் மேலும் கூறினார். டி சில்வா இனால் மேற்கொள்ளப்பட்ட அடுத்த விசாரணையில் நிமலராஜனின் கொலை இடம்பெற்ற இரவு ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் வாசல்க் கதவில் கடமையில் இருந்த சலீம், தான் கடமையை முடித்து இரவு 10 மணிக்குச் சென்றதாகவும் ஆனால் அடுத்த நாள் காலை 5.30 மணிக்கு பாசா மற்றும் முரளி ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் பின்பக்கத்தில் படுத்திருந்ததாகவும் அவர் மேலும் விபரித்தார்.[89] 5 யூலையில், டக்ளஸ் தேவானந்தாவின் வதிவிடமாக இருந்த கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகத்தில் ஒரு சந்தேக நபர் தங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்தமையால் தேடுதல் உத்தரவொன்றினை வழங்குமாறு டி சில்வா நீதிமன்றத்தினைக் கேட்டுக் கொண்டார். இந்தப் வழக்குப் பதிவுகளில் சந்தேக நபர் 'இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஒரு நபராக மாத்திரமே விபரிக்கப்படுகிறார்'. பிடியாணை வழங்கப்பட்டதாயினும் 'குறித்த இடத்தில் சந்தேகநபர் இருக்கவில்லை' என்பதால் கைது எதுவும் இடம்பெறவில்லை.[90] டி சில்வா அடுத்து வந்த இரண்டு வருட காலப் பகுதியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சலீமை மீண்டும் விசாரிக்க முயற்சித்த போது சலீமும் தலைமறைவாகியிருப்பதைக் கண்டு பிடித்தார்.[91] ஆனால் 20 யூலை இல் டி சில்வா திருகோணமலையில் டேவிட் மைக்கல் கொலின் என்றழைக்கப்படும் முரளியைக் கைது செய்ததுடன் அவரைக் கொழும்பு கொண்டு சென்றார். அங்கிருந்து 30 யூலையில் அவர் யாழ். சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். சில நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனக்கு உயிராபத்துள்ளது என்பதன் அடிப்படையில் மீண்டும் தன்னைக் கொழும்புக்கு மாற்றுமாறு முரளி கேட்டுக் கொண்டார்.[92] தான் கைது செய்யப்பட்டதன் பின்னர் கடுமையாக அடிக்கப்பட்டதாகவும், தான் சுயநினைவு இல்லாமல் இருந்தவேளையில் அவரால் வாசிக்கமுடியாத மொழியில் இருந்த ஒரு வாக்குமூலத்திற்கு அவரது கையெழுத்து சேர்க்கப்பட்டதாகவும் கூறினார். யாழ். சிறை அதிகாரிகள் அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான ஒழுங்கினைச் செய்ய வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.[93]

ஓகஸ்ட் 7 இல் முரளியினால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் டி சில்வா காராளசிங்கம் சிந்துபரன் என்றழைக்கப்படும் பாட்சாவை கைது செய்ததாக பொலிசார் அறிவித்ததாக கூறப்பட்டது. [94] இவர் முரளியைப் போல் கொலை இடம்பெற்ற இரவு ஈ.பி.டி.பி.யின் யாழ் அலுவலகத்தை விட்டு துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டுச் சென்றார் என்று நம்பப்பட்டது.

84 இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 11 யூன் 2002: MCJ2023 pp305-306; 21 யூன் 2002, இல் விஸ்வன் மற்றும் ஜெகனின் கைது பற்றிய உதவி இன்ஸ்பெக்டரின் அறிக்கை, M.P.C. C. டி சில்வா இன் அறிக்கை அத்துடன் விஸ்வன் 21 யூன் 2002 இல் நீதிமன்றத்தில் ஆஜரானார்: MCJ2023 pp310, 120.

85 நீதிமன்ற வழக்கு விசாரணையைப் பார்க்கவும் 12 யூன் 2002: MCJ2023 pp117-119.

86 பழனிச்சாமி விஸ்வநாதனின் நீதிமன்றத்திற்கான வாக்குமூலம், 21 யூன் 2002: MCJ2023 p121.

87 *தமிழ்நெற்*: 4 யூலை 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7154

88 MCJ2023 pp124-126. இனைப் பார்க்கவும்

89 இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் நீதிமன்றத்திற்கு 7 ஓகஸ்ட் 2002 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஹமீத் சுல்தான் முகமட் றில்வன் என்றழைக்கப்படும் சலீமின் வாக்குமூலம் பற்றிய CID இன் தொகுப்பு: MCJ2023 p360.

90 இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு 5 யூலை 2002: MCJ2023 pp127-129; மேலதிக அறிக்கை 19 யூலை 2002 இல் சமர்ப்பிக்கப்பட்டது:: MCJ2023 p132.

91 இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு,11 நவம்பர் 2002, 10 டிசெம்பர் 2002, 30 ஒக்ரோபர் 2003, 23 மார்ச் 2004 மற்றும் 27 ஏப்ரல் 2004: MCJ2023 pp383, 385, 409, 420, 424.

92 02 ஓகஸ்ட் 2002 இல் சந்தேகநபர் மற்றும் அவரது வக்கீல், திரு பொன் வெற்றிவேல், நீதிபதி விக்னராஜா முன்பு இடம்பெற்ற வழக்கு விசாரணை: MCJ2023 pp140-144.

93 இந்த மருத்துவ அறிக்கை நீதிமன்றப் பதிவுகளில் காணப்படவில்லை..

94 *தமிழ்நெற்றைப் பார்க்கவும்*: 7 ஓகஸ்ட் 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7254

பாட்சா யாழ்ப்பாணத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.[95] டி சில்வா யாழ்ப்பாணத்தின் இரண்டு ஈ.பி.டி.பி. அலுவலகங்களில் தேடுதல் மேற்கொள்வதற்கான உத்தரவின் அடிப்படையில் செயற்பட்டு அவற்றில் ஒன்றில் இருந்து சீனாவில் தயாரிக்கப்பட்ட ஒரு கைத்துப்பாக்கியையும் ஆறு தோட்டாக்களையும் ஒரு ஈ.பி.டி.பி. உறுப்பினரிடமிருந்து கைப்பற்றினார்கள். அவர் இவற்றை 1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்பு படைகளுக்கான தளபதி தனக்கு வழங்கியிருந்ததாக கூறினார்.[96] ஆறு வாரங்களின் பின்னர் நிமலராஜனின் படிப்பறையில் கண்டெடுக்கப்பட்ட தோட்டாவின் சிதறல்கள் பிӡ தொடர்பில் இந்த ஈ.பி.டி.பி. இன் கைத்துப்பாக்கியினை பகுப்பாய்வு செய்வதற்கான வேண்டுகோளை டி சில்வா விடுத்தார்.[97]

20 ஓகஸ்டில், முன்னேற்றம் பற்றிய நீதவானின் கோரிக்கைக்கு பதிலளிக்கையில், கொலை இடம்பெற்ற இரவு றக்கா வீதியில் இருந்த காவல் நிலையத்தில் கடமையில் இருந்த பொலிசார் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அத்துடன் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அறிவித்தார்.[98] மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கான வழக்கறிஞர் ஆகியோர் முடிவில்லாத விசாரணைத் தாமதங்களின் அநீதி பற்றி நீதிமன்றத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டார்கள். தடுப்புக்காவலில் தற்போதுள்ள நான்கு சந்தேகநபர்கள் 'ஒரு மனித உரிமைகள் மீறலினால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாக' எதிர்த்தரப்பு வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.[99] 'ஒரு செய்தியாளரின் கொலை ஒரு மனித உரிமைகள் மீறலாகும். அத்துடன் இது ஒரு துன்பியல் சம்பவம்' எனவும் இந்தச் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவே 'இந்த விசாரணை ஒரு முட்டுக்கட்டைநிலையை அடைந்துள்ளது' என்பது அவதானிக்கப்படுகிறது என பாதிக்கப்பட்டவரினுடைய வழக்கறிஞர் பதிலளித்தார். இப்பொழுது கூட 'பல்வேறு சர்வதேச அமைப்புகளின் அழுத்தம் காரணமாக' உண்மையில் விசாரணை இடம்பெறுகின்றது.[100]

3 செம்ரெம்பர் 2022, சந்தேக நபர்களை குற்றவாளிகளெனத் தீர்மானிப்பதற்கு 'ஒரு துளி ஆதாரம்' கூட இல்லை என எதிர்தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 'இந்தக் கொலைச் சம்பவத்தினை பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசியற்கட்சிகளும் சொந்த இலாபத்தினை தேடியுள்ளார்கள் என பயமில்லாமல் கூற விரும்புகின்றேன்'.[101] அதேசமயம், பல்வேறு முக்கியமான தோட்டாவின் பாகங்களை இன்னும் பௌதீகப் பகுப்பாய்வு உட்படுத்துவது அவசியம் என டி சில்வா உடனடியாகச் சுட்டிக்காட்டினார்.[102] 16 செப்ரெம்பரில் காசுப் பிணையின் அடிப்படையில், முரளி மற்றும் ஈ.பி.டி.பி. இன் வாகனப் பொறுப்பாளர் எனச் சொல்லப்பட்ட விஸ்வன் ஆகியோருக்கு வவுனியாவிலுள்ள மாகாண உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது.[103] இன்னுமொரு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிணை வழங்குவது குற்றவியல் சட்ட விதிமுறைக்கு முரணானது என பாதிக்கப்பட்டவருக்கான வழக்கறிஞர்களில் ஒருவர் ஆட்சேபித்தார்.[104] அவர்கள் மீது எந்தவித கட்டுப்பாடுகளும் போடப்படாமல் இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் ஆட்சேபித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இன்னுமொரு சந்தேக நபர் ஒருவருடமாகத் தலைமறைவாக உள்ளார் என்று அவர் கூறியதுடன் 'நெப்போலியன் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்று விட்டார்' எனவும் அவர் மேலும் தெரிவித்தார். பிணையில் வெளியிலுள்ள இந்த இருவரும் தப்பிச் செல்வார்கள் என எதிர்பார்க்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் 'நீதி நிர்வாகத்திலுள்ள நம்பிக்கையை மக்கள் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது' என கூறினார். அவர்களது கடவுச்சீட்டுக்களை பறிமுதல் செய்யுமாறும் அவர்கள் ஒவ்வொரு வாரமும் பொலிசாரிடம் சென்று கையெழுத்திடச் செய்ய வேண்டும் எனவும் அவர் நீதிமன்றத்தினைக் கேட்டுக் கொண்டார்.[105] யாழ்ப்பாண நீதவான் இதில் தலையிட்டு இரண்டு வாரத்திற்கு ஒருமுறையான சோதனையையும் விதித்த போது குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டவாளர்கள் நீதிபதி தனது அதிகாரத்தினை மீறிவிட்டார் என வாதிட்டார்கள். இதனையடுத்து சந்தேகநபர்கள் மாதத்திற்கு ஒரு

[95] இன்ஸ்பெக்டர் சில்வாவினது கைது அறிக்கை 2 ஓகஸ்ட் 2002: MCJ2023 pp320; பாட்ச்சா நீதிமன்றத்தின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டார், 07 ஓகஸ்ட் 2002: MCJ2023 p360.

[96] 13 ஓகஸ்ட் 2002 இல் எதிர்த்தரப்பு வழக்கறிஞரான திரு பொன் வெற்றிவேலின் ஒரு சமர்ப்பிப்பில் தேடுதல் அவதானிக்கப்பட்டது: MCJ2023 p148. 20 ஓகஸ்ட் 2002 இல் இன்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்ற சமர்ப்பிப்பில் முடிவுகள் விபரிக்கப்பட்டன:: MCJ2023 p363.

[97] 21 ஒக்ரோபர் 2002 இல் இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு: MCJ2023 p378. 1999 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பாதுகாப்புபடைகளிலுக்கு இருவர் பொறுப்பாக இருந்தார்கள்: Brig LCR Gunawardana RSP USP ndu IG, 1998.11.09 - 1999.11.12, and Maj Gen PSP Munasinghe RWP RSP USP, 1999.11.12 - 1999.12.26. See: https://alt.army.lk/sfhqj/past-commanders

[98] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 20 ஓகஸ்ட் 2002: MCJ2023 p363.

[99] சுந்தேகநபர்களின் வழக்கறிஞர் திரு வெற்றிவேலின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பணம் 20 ஓகஸ்ட் 2002: MCJ2023 p152.

[100] பாதிக்கப்பட்டவர்களுக்கான வழக்கறிஞர் திரு KS ரட்ணவேல் இன் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 20 ஓகஸ்ட் 2002: MCJ2023 p153.

[101] சுந்தேக நபர்களுக்கான வழக்கறிஞர் திரு வெற்றிவேலுவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு 3 செப்ரெம்பர் 2002: MCJ2023 p154.

[102] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு,17 செப்ரெம்பர் 2002: MCJ2023 p158.ஒக்ரோபரில், எல்லைகளற்ற செய்தியாளர்கள் இலங்கையின் ஜனாதிபதிக்கு எழுதிய தனது கடித்தில் இலங்கைப் பொலிசாருக்கும் நீதி அதிகாரிகளுக்கும் சர்வதேச நிபுணர்களை உதவியை வழங்க குறிப்பாக இராசாயன மற்றும் நீதித்துறைசார் அடையாளங்காணல்களுக்கான நிபுணர்களை வழங்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்கள்.: https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister.

[103] நீதி மன்ற குறிப்புக்களைப் பார்க்கவும்: MCJ2023 pp20, அத்துடன் வவுனியா உயர் நீதி மன்ற நீதிபதியின் உத்தரவு, 15 ஓகஸ்ட் 2002: MCJ2023 p352.

[104] *தமிழ்நெற்*: 11 செப்ரெம்பர் 2002: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7458

[105] பாதிக்கப்பட்டவர்களுக்கான வழக்கறிஞர் திரு றெமிடியசின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு 17 ஓகஸ்ட் 2002: MCJ2023 pp161–163.

தடவை கையொப்பமிட வேண்டும் என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.[106]

11 நவம்பரில், 23 பெப்ரவரி அதே ஆண்டு காலப் பகுதியில் அரசாங்கத்திற்கும் LTTE இனருக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்திற்குப்[107] பின்னர் ஈ.பி.டி.பி. இனரிடம் இருந்த கூடுதலான ஆயுதங்கள் கொழும்பிலுள்ள இராணுவத்தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக டி சில்வா யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தெரிவித்தார். இராணுத்தளபதி 'உடனடியாக' ஈ.பி.டி.பி. இனர் கையளித்த 9 மிமீ துப்பாக்கிகளைக் கையளிக்க வேண்டும் என நீதவான் உத்தரவிட்டார்.[108]

ஒரு மாதத்தின் பின்னர், டிசம்பர் 2002 இல் ஆயுதங்கள் பற்றிய விசாரணையில் அறிவிப்பதற்கு டி சில்வாவிடம் எதுவும் இருக்கவில்லை. குறிப்பாக 'இந்த வழக்குடன் தொடர்பு பட்டு இராணுவம் மற்றும் பொலிஸ் மீதுள்ள சர்வதேச களங்கத்தினை நீக்குவதற்கு' உதவுவதற்கு முன்னேற்றத்தினை மேற்கொள்வதற்கு மேலும் ஒரு மாத காலத்தினை நீதவான் கொடுத்தார்.[109] 'சம்பவ இடத்தினைச் சூழவுள்ள இராணுவக் காவல்நிலையங்களில் இருந்தவர்களுக்கு தெரியாமல் இரவுநேர ஊரடங்கு வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றிருக்க முடியாது' என அவர் மீண்டும் தனது நம்பிக்கையைச் சுட்டிக்காட்டினார். ஒன்றரை வருடத்திற்கும் முன்னர் கொலை இடம்பெற்ற இரவு கடமையில் இருந்த அனைத்து பாதுகாப்பு படையினரிடமிருந்தும் எடுக்குறு தான் உத்தரவிட்டிருந்த எல்லா வாக்குமூலங்களும் இன்னமும் எடுக்கப்படவிலலை என்பதை அவதானித்த அவர் சொல்லப்பட்ட உத்தரவு பொலிசாரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதும் அதன் விளைவாக வழக்கில் முன்னேற்றங்காண முடியவில்லை என்பதும் இதனால் தெளிவாக உள்ளது' என அவர் அப்பட்டமாக கூறினார்.[110]

### 3.6. 2003: முன்னேற்ற மாயை

2003 ஜனவரி நடுப்பகுதியில் முன்னர் ஈ.பி.டி.பி. வசம் இருந்து 2002 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஐந்து 9மிமீ கைத்துப்பாக்கிகள் – சான்றுப் பொருட்கள் பி5 — பி9 தொடர்பில் ஆணையிடும் அதிகாரத்தினை யார் கொண்டுள்ளார்கள் என்பது குறித்து நிர்வாக ரீதியிலான தாமதங்கள் எழுந்தன– அவற்றினை இப்பொழுது விசாரணைக்காக அரசாங்கப் பகுப்பாய்வாளர்களிடம் அனுப்ப வேண்டும்.[111] பெப்ரவரியில் இந்த விடயம் மீண்டும் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது குறிப்பிட்ட இந்த ஆயுதங்களுக்குரியவர்கள் ஈ.பி.டி.பி. இல் யார் என்பதை டி சில்வா கண்டுபிடிக்கவில்லை என்பது தெளிவாகியது.[112] ஆயினும், 19 ஒக்ரோபர் 2000 அன்றிரவு றக்கா வீதியிலுள்ள காவல் நிலையத்தில் கடமையிலிருந்த நான்கு பொலிசாரில் இருவரை அவரால் விசாரணை செய்ய முடிந்தது, 'கொலை இடம்பெற்ற நேரத்தில்' வெடிப்புச் சத்தத்தினைக் கேட்டதாகவும் ஆனால் 'ஊரடங்கு வேளையில் இடம்பெற்றமையால்' எவரையும் பார்க்கவில்லை என அவர்கள் தெரிவித்தார்கள்.[113] மார்ச் 2003 இல், உண்மையில் முன்பு நாட்டைவிட்டு வெளியேறினாரோ இல்லையோ, நாரந்தனைப் படுகொலை வழக்கில் பிதான சந்தேகநபரான நெப்போலியன் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முற்படுப்படுத்தப்பட்டார். இந்த வழக்கில் 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது எதிர்தரப்பு அரசியற் செயற்பாட்டாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல்களுக்குப் பின்னால் ஈ.பி.டி.பி. துணை ஆயுதக்குழுப் போராளிகள் இருப்பதாக நம்பப்பட்டது.[114] இரண்டாவது வழக்கில் நெப்போலியன் பிணையைப் பெற்றுக் கொண்ட போதும் நவம்பர் 2001 வழங்கப்பட்ட பிடியாணையின் அடிப்படையில் அவரை நிமலராஜன் கொலையில் ஒரு சந்தேக நபராக மீண்டும் கைது செய்யுமாறு நிமலராஜனுக்கான வழக்கறிஞர் திரு றெமடியஸ் பொலிசாரைக் கேட்டுக் கொண்டார். எல்லாவற்றையும் விட, இங்கே அவர் 'நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்'. ஆனால் பொலிசார் செயற்படத் தவறிவிட்டார்கள். இந்த அப்பட்டமான தவறிற்கு எழுத்து மூலமாக விளக்கத்தினை தர வேண்டும் என நீதவான் உத்தரவிட்டார், அத்துடன் கைது உத்தரவினை நிறைவேற்றுமாறு மீண்டும் உத்தரவிட்டார்.[115]

---

106 நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 11 நவம்பர் 2002: MCJ2023 p166; எதிர்த்தரப்பிற்கான வழக்கிஞர் திரு சிறிசிவாயாவின் வவுனியா உயர் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு,4 யூலை 2003: MCJ2023 p353; வவுனியா உயர்நீதிமன்ற நீதிபதி பிணைக்குரிய நிபந்தனைகளை மாற்றினார், 23 யூலை 2003: MCJ2023 p357

107 https://peacemaker.un.org/sites/default/files/document/files/2024/05/lk020222ceasefireagreementgovernment-liberationtigerstamileelam.pdf இனைப் பார்க்கவும்

108 இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான அறிக்கை, 11 நவம்பர் 2002: MCJ2023 p383; நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 11 நவம்பர் 2002: MCJ2023 p164.

109 MCJ2023 pp174, 178. இனைப் பார்க்கவும்

110 MCJ2023 p177.

111 சட்டமா அதிபரிடம் இருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பிலுள்ள நீதவானால் தான் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கூறி இன்ஸ்பெக்டர் டி சில்வா நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தார்,14 ஜனவரி 2003.: MCJ2023 pp179, 387.

112 25 பெப்ரவரி 2003 இல் நீதிபதி விக்னராஜாவின் உத்தரவில் இருந்து வெளிப்படை, பதிலைக் கண்டுபிடிக்குமாறு டி சில்வாவைக் கேட்ட நீதிபதி: MCJ2023 p188.

113 பொலிஸ் றிசேவ் கான்ஸ்டபிள் மகிந்த தர்மபிரிய வீரசிங்க மற்றும் றிசேவ் கான்ஸ்டபிள் ஜெயவீர ஆர்க்கிசிலேச் ஞானரத்னே ஜெயவீர ஆகியோரின் வாக்குமூலம் பற்றிய CID இனரின் தொகுப்பு,, இன்ஸ்பெக்டர் டி சில்வாவினால் ஒரு அறிக்கை 25 பெப்ரவரி 2003: MCJ2023 p389.

114 இது நாரந்தனைக் கொலை வழக்கு, தமிழ்நெற்றைப் பார்க்கவும்:27 மார்ச் 2003: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=8616

115 நீதிமன்ற வழக்கு விசாரணை , 27 மார்ச் 2003: MCJ2023 pp190-192.

ஏப்ரல் 2003 இல் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்களிடமிருந்து புதிய பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. பி3, ஒரு தோட்டாவும் இரண்டு சிதறு துண்டுகளும் 9மிமீ கைத்துப்பாக்கியின் வெடிபொருளுக்கு 'சமனானவை', ஆனால் மேற்கொண்டு எதையும் உய்த்தறிய முடியாதபடி அவை சிதைந்து உருக்குலைந்து போயிருந்தன. இந்த வழக்கிலுள்ள ஆறு கைத்துப்பாக்கிகளினதும் சோதனைச் சூடானது சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இரவு இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்ட தோட்டா அல்லது கோதான பி2 பொருந்த வில்லை என்பதைக் காட்டியது. யாழ்ப்பாணத்தில் டி சில்வா கைப்பற்றியிருந்த கைத்துப்பாக்கி அல்லது கொழும்பில் இருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து கைத்துப்பாக்கிகளும் எப்போது இறுதியாகச் சுடப்பட்டன என்பதையும் தீர்மானிக்க முடியவில்லை.[116] இந்த ஐந்து கைத்துப்பாக்கிகளையும் யார், எப்பொழுது வைத்திருந்ததார்கள் என்ற ஒழுங்குமுறை (Chain of custody) பற்றிக் கேட்ட போது நீதிமன்றின் முன் ஆஜரான சார்ஜன்ட் மேஜர் 'இதற்குச் சாட்சிகள் எதுவும் இல்லை' என்பதால் இதற்கு எவராலும் பதில் வழங்கமுடியாதென 'உயரதிகாரிகளால்' அவருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்.[117] மே இல் பி5–பி9 வரையான கைத்துப்பாக்கிகள் அனைத்தும் இலங்கை இராணுவத்தினரால் ஈ.பி.டி.பி. இனருக்கு வழங்கப்பட்டிருந்ததை டி சில்வா உறுதிப்படுத்தினார்.

ஏப்ரல் இல் நிமலராஜன் கொலையுடன் நெப்போலியன் சம்பந்தப்பட்டிருந்தமையைக் குறிக்கும் எந்த ஆதாரங்களும் இதுவரை விசாரணைகளில் கிடைக்கவில்லை எனவும் 'போதுமான ஆதாரங்கள் இல்லாமையால்' அவர் காவலில் வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்து டி சில்வா ஒரு எழுத்து மூலமான சமர்ப்பிப்பு ஒன்றினை நீதிமன்றத்திற்கு வழங்கினார்.[118] 30 மே இல் புதிய தகவல்களை வழங்குகையில், நெப்போலியனை யாழ்ப்பாண நீதிமன்றத்தின் முன் தான் நிறுத்த வேண்டும் என பாதிக்கப்பட்டவரின் சட்டவாளர் வேண்டுகோள் விடுத்த பின்னர் தான் சட்ட மா அதிபருடன் கலந்தாலோசித்ததாகவும் அவர் 'போதிய ஆதாரங்கள்' இருந்தாலே ஒழிய அவ்வாறு செய்ய வேண்டாம் என ஆலோசனை கூறியதாகவும் தெரிவித்தார். அத்துடன் இந்த விசாரணையில் இதுவரையில் இது தொடர்பில் நெப்போலியனுக்கு எதிராக 'எந்த ஆதாரங்களும்' கிடைக்கவில்லை என அவர் திரும்பத் திரும்ப தெரிவித்தார். யூனில் போதிய ஆதாரங்கள் இல்லாத இந்தச் சூழ்நிலையில், நிமலராஜன் வழக்குத் தொடர்பில் மனுதாரரை (நெப்போலியன்) கைது செய்வதற்கோ அல்லது தடுத்துவைப்பதற்கோ எந்த உத்தரவுகளும் போடப்படமாட்டாது உச்ச நீதிமன்றம் என தீர்ப்பளித்தது.[119]

அதே மாதம், யூன் 2003 இல், முரளியை மீண்டும் கைது செய்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. மருத்துவச் சான்றிதழினைப் பெற்றுக் கொண்டதை தொடர்ந்து கிட்டத்தட்ட உடனடியாகவே மீண்டும் அது நிறுத்தப்பட்டது.[120] அதே நேரம், எதிர்த்தரப்பு வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சந்தேக நபரை வைத்திருப்பது 1997 ஆம் ஆண்டு பிணைச் சட்டத்தின் வதிமுறைகளை மீறும் செயலாகும் என்பதன் அடிப்படையில் ஜெகன் மற்றும் பாட்சாவிற்கான பிணைக்காக வாதிட்டார்கள். 30 யூனில் பிணைக்கான ஒரு உத்தரவு வழங்கப்பட்டதுடன் அவர்கள் இருவரும் யூலையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.[121] பிணை தொடர்பில் எந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உண்டு என்ற சட்ட சர்ச்சைக்குப் பின்னர் நீதவானின் பிணை விதிமுறைகளை உச்ச நீதி மன்றம் குறைத்தது. மீண்டும் ஒருமுறை, சந்தேக நபர்கள் மாதத்திற்கு ஒரு முறை மாத்திரம் பொலிசாரிடம் சென்று கையொப்பமிடுவது அவசியமானது.[122] ஒரு வருடத்திற்கு முன்னர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட 19 பெயர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியலில் முதலாவது பெயராக உள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினரான 'மில்ரன்' பற்றிய விடயத்தினை டி சில்வா எழுப்பினார். இந்த விசாரணை ஆரம்பித்த நாளிலிருந்தே மில்ரன் ஈ.பி.டி.பி. கட்சியினை கைவிட்டுச் சென்று விட்டார் என ஈ.பி.டி.பி. இன் யாழ் மாவட்டச் செயலாளர் டி சில்வாவிற்கு அறிவித்தார். ஆகையால் அவரை விசாரிக்க முடியவில்லை. 'நான் மீண்டும் விசாரணை செய்வது அவசியமானதாகும்' [123]எனக் கூறி இதனைத் தொடர்வதற்கு மேலதிக கால அவகாசத்தினை டி சில்வா கேட்டுக் கொண்டார்.

[116]உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் P.G. மடவெல மற்றும் மூத்த அரசாங்கப் பகுப்பாய்வபளர் W.D.P.S. குணதிலக ஆகியோரின் அறிக்கை 23 ஏப்ரல் 2003: MCJ2023 pp323–327.

[117] சார்ஜன்ட் மேஜர் பியசேனா நீதிபதி விக்னராஜாவால் விசாரிக்கப்பட்டார், 25 ஏப்ரல் 2003: MCJ2023 p193.

[118] இன்ஸ்பெக்டர் டி சில்வா, 25 ஏப்ரல் 2003: MCJ2023 p394.

[119] இன்ஸ்பெக்டர் டி சில்வா, 30 மே 2003: MCJ2023 p397. இன்னுமொரு கொலைக்குற்றச்சாட்டில் பிணையில் விடுவிக்கப்பட்டதும், நெப்போலியனின் சட்டத்தரணிகள் நிமலராஜன் வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு அல்லது தடுத்துவைக்கப்படுவதற்கு உள்ள சாத்தியக்கூறுகளுக்கு எதிராக மேற்கொண்ட மனுவிற்கு உச்ச நீதிமன்றத்தின் பதிலைப் பார்க்கவும். நிமலராஜன் கொலையில் மனுதாரர் உடந்தையாக இருப்பதை வெளிப்படுத்தும் எந்த ஆதாரங்களும் இதுவரை இல்லை என CID தனக்கு அறிவுறுத்தியதாக வழக்கறிஞர் CID இனை மேற்கோளகாட்டி கூறுகிறார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு யாழ் நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்ப்பட்டது: 16 யூன் 2003: MCJ2023 pp329–332.

[120] நீதிமன்றக் குறிப்புக்கள், 27 யூன் 2003: MCJ2023 p30.

[121] வவுனியா உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வாநந்தின் உத்தரவு, 25 யூன் 2003: MCJ2023 pp342; நீதிமன்றக் குறிப்புகள், 27 யூன் 2003: MCJ2023 p30.

[122] வவுனியா உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வாநந்தின் உத்தரவு,23 யூலை 2003: MCJ2023 p358.

[123] இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு,25 யூலை 2003: MCJ2023 p202.

செப்ரெம்பர் 2003 இல் பாலச்சந்திரன் உதயபவான் என்றழைக்கப்படும் அற்புதன் என்ற ஒரு புதிய பெயர் பதிவுகளில் வந்தது. ஏன் என்ற காரணம் வழங்கப்படாவிட்டாலும் 23ஆம் திகதி இவர் நிமலராஜன் கொலையில் இறுதியாகப் பெயர் இடப்பட்ட சந்தேகநபர் ஆனார். இவர் முதலில் திருகோணமலையில் 5 செப்ரெம்பரில் தடுத்து வைக்கப்பட்டார். அத்துடன் அவரைக் கைது செய்த அதிகாரிகளான 'இரகசியப் பொலிஸ்' இனைச் சேர்ந்த உறுப்பினர்களால் அவரது பிறப்பு உறுப்பு நெருப்பினால் சுடப்பட்டது உட்பட சித்திரவதைகள் செய்யப்பட்டிருப்பதாக பின்னர் அவரது சட்டவாளர் கூறினார்.[124] திருகோணமலையில் இருந்து அவர் கொழும்பிலுள்ள மகசீன் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 'போக்குவரத்து ஒழுங்குமுறைச் சிக்கல்களினால்' அவரை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதில் அடுத்து வந்த தாமதங்கள் அவரது குறிப்பிடப்பட்ட காயங்கள் குணமடைதற்குரிய கொஞ்ச நேரத்தினை வழங்கியது. இதனால் யாழ்ப்பாண நீதவான் கொழும்பில் ஒரு சட்ட மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.[125] 03 ஒக்ரோபரில் கொழும்பு அதிகாரிகள் மழுங்கிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஏற்பட்ட காயங்களுக்கான ஆதாரங்களை மட்டுமே கண்டுபிடித்தார்கள். அத்துடன் இவற்றை 'கடுமையானவை இல்லை' எனப் பெயரிட்டனர்.[126] எதிர்த்தரப்பு வழக்கறிஞர்களில் ஒருவர் இந்த வழக்கினை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அளவுக்கு அதிகமான நேரம் எடுப்பதற்கு எதிராகப் பேசினார். அத்துடன் செய்தித்தாளான *உதயன்* 'மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவர்கள் அத்துடன் ஏதாவது செய்யத் தொடங்குவார்கள்' என்பதையும் குறிப்பிட்டார். சந்தேகநபர்கள் தாமதங்கள் குறித்து கோபமடைந்தால் அவர்கள் 'சட்டமா அதிபரை தொடர்பு கொள்ள வேண்டும்' என நீதவான் ஆலோசனை தெரிவித்தார்.[127]

17 ஒக்ரோபரில், யாழ்ப்பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஒரு ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும் போது 'நிமலராஜனைக் கொலை செய்தவர்கள் சுதந்திரமாக நடமாடித்திரிவதை நாங்கள் இன்று காணலாம்' எனத் தெரிவித்தார். அவரது மோசமான கொலை தொடர்பான விசாரணை எந்த முன்னேற்றமும் இல்லாமல் நீண்ட காலம் எடுத்துக் கொண்டுள்ளது.[128] அதே நாளன்று அற்புதன் யாழ்ப்பாணச் சிறைச்சாலையை வந்து சேர்ந்தார்.[129] அந்த மாத முடிவில் நீதிமன்றத்தில் அவருக்காகச் பேசிய வழக்கறிஞர் கொலை இடம்பெற்ற நேரத்தில் அற்புதன் ஒரு ஈ.பி.டி.பி. உறுப்பினாக இருந்ததாகச் சொல்லப்படுவதை ஏற்றுக் கொண்டார். ஆனால் 'சொல்லப்பட்ட சம்பவத்துடன் அவருக்கு எந்த தொடர்பும் இல்லை' எனத் தெரிவித்தார். அற்புதன் 'தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகும் ஒரு நபர்' உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளால் திருகோணமலையில் பிடித்துச் செல்லப்பட்டிருந்தார். அவருடன் சிங்களத்தில் கதைத்தார்கள். அதனை அவரால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. அத்துடன் அவரைத் தாக்கி அவர் புரிந்து கொள்ளாத மொழியில் உள்ள ஒரு ஆவணத்தில் அவரைக் கையொப்பமிடச் செய்தார்கள். ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான மில்ரன் மற்றும் சலீம் ஆகியோர் தற்போது விசாரிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் இரண்டு சந்தேக நபர்கள் இன்னும் தேடப்பட்டுவருவதாகவும் டி சில்வாவிற்கு அடுத்தாக உள்ள அதிகாரி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.[130]

### 3.7. 2004: மெதுவடைந்து நிறுத்ததிற்கு வரும் விசாரணை

2004 ஆம் ஆண்டளவில், டி சில்வா வழக்கமான முறையில் எழுதப்பட்ட புதிய தகவல்களை நீதி மன்றத்தில் ஒப்படைத்தார் அதில் அவர் தான் காணாமற்போன சந்தேகநபர்களை இன்னமும் தேடிக் கொண்டிருப்பதாகவும் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக காத்துக் கொண்டிருப்பதாகவும் திரும்பத் திரும்ப தெரிவித்திருந்தார்: 'தயவுசெய்து இந்த வழக்கின் முன்னேற்றம் பற்றி அறிவிப்பதற்கு நீண்ட கால அவகாசம் கொடுக்கப்படலாம்.'[131] மார்ச்சில், பிணை விதிமுறைகளுக்கு ஏற்ப நடக்கத்தவறிய ஜெகனுக்கு ஒரு புதிய பிடியாணையை நீதிபதி வழங்கினார். இதனைத் தொடர்ந்து ஜெகன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இவர் 'கிருபா' என்ற பெயரின் கீழ் இன்னுமொரு குற்றத்திற்காக வேண்டப்பட்டவர் என்பதைப் பொலிசார் உணர்ந்து கொண்டனர். *தமிழ்நெற்* அறிவித்தது போல் 'ஊர்காவற்துறைப் பகுதியில் தலைமறைவாக இருந்த போது கொலைச் சந்தேகநபர் கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயத்தில் இருந்து தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு பாடசாலை மாணவி

---

124 எதிர்த் தரப்பு வழக்கறிஞர் திருமதி லிங்கா துரைராஜாவின் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 23 செப்ரெம்பர் 2003: MCJ2023 pp206-207. அந்த நேரத்தில் தமிழ் பேசுபவர்களால் 'இரகசியப் பொலிஸ்' என்ற சொற்பதம் பரவலாகப் பாவிக்கப்பட்டது, ஆனால் அது பொலிசாரின் உத்தியோகப் இல்லை.

125 நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 23 செப்ரெம்பர் 2003: MCJ2023 p209.

126 கொழும்பு நீதித்துறை மருத்துவ அலுவலகத்தினைச் சேர்ந்த பாலச்சந்திரன் உதயபவன் உடைய அறிக்கை யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது, 25 நவம்பர் 2003: MCJ2023 pp410-411.

127 எதிர்தரப்பு வழக்கறிஞர் வெற்றிவேலினுடைய நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, அத்துடன் நீதிபதி விக்னராஜாவின் பதில், 23 செப்மெம்பர் 2003: MCJ2023 pp208, 211.

128 *தமிழ்நெற்*: 17 ஒக்ரோபர் 2003: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=10152

129 நீதிமன்றக் குறிப்புகள்: MCJ2023 p35.

130 நீதிமன்றின் முன் எதிர்தரப்பு வழக்கறிஞர் திருமதி லிங்கா மற்றும் இன்ஸ்பெக்டர் டி சில்வா, நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்பு, 30 ஒக்ரோபர் 2003: MCJ2023 pp 223-224 மற்றும் 215.

131 உதாரணமாக ஏப்ரல் 2004: MCJ2023 p424.

மீது பாலியல் ரீதியிலான தாக்குதலை மேற்கொண்டார் என குற்றஞ்சாட்டப்படுகிறது’.[132]

ஏப்ரலுக்குப் பின்னர் டி சில்வா வழக்கமாக நீதிமன்றத்திற்கு புதிய தகவல்களை வழங்குவது கூட முடிவுக்கு வந்தது, அத்துடன் 17 மே 2004 இல் ஐந்தாவது சந்தேக நபர், அற்புதன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.[133] 19 ஓகஸ்ட் 2004 அன்றைய வழக்கில், சந்தேக நபர்களுக்கு எதிராக பதிவு செய்யப்படக்கூடிய எந்தவொரு குற்றச்சாட்டுக்கள் குறித்தும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கு தான் காத்துக் கொண்டிருப்பதாக டி சில்வா அறிவித்தார். யாழ் நீதவான், நீதிபதி விக்னராஜா முதல் தடவையாக மேலதிக விசாரணைக்கான திகதியைக் குறிக்கத் தவறினார். அத்துடன் அவர் தனது நீதிமன்றத்திற்கான நிகழ்ச்சி நிரல் பட்டியல் தாளில் இருந்து நீக்கி இருந்ததாக *தமிழ்நெற்* அறிவித்தது.[134]

### 3.8. 2020கள்

கொழும்பு CID இன் விசேட பிரிவின் பொலிஸ் தலைமைப் பரிசோதகரான லலிதா திசாநாயக்கவினால் யாழ் நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தின் படி சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க 05 யூலை 2020 இல் நிமலராஜனின் வழக்கு ‘ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது’ அல்லது உத்தியோகபூர்வமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ‘மேலதிக அறிவுறுத்தல்கள் மற்றும் எதிர்கால ஆலோசனை’ கேட்டு 10 வருடங்களுக்கு முன்னர் முன்னாள் சட்டமா அதிபரிடம் CID இனர் சமர்ப்பித்திருந்த ஒரு முறையான விண்ணப்பத்திற்கான முதல் உத்தியோக பூர்வமான பதிலாக இது இருந்துள்ளது போல் தெரிகிறது. 27 ஏப்பிரல் 2021இல், பிணையில் விடுதலை செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களுக்கும் எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படவில்லை, எனவே அவர்கள் பிணையில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ளார்கள் என சட்டமா அதிபர் தீர்ப்பளித்தார். 16 நவம்பர் 2021 இல், ‘யாழ்ப்பாணத்தில் பெயர்போன செய்தியாளரான மயில்வாகனம் நிமலராஜன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாக இலங்கைப் பொலிசார் சுருக்கமாக கூறிய விடயத்தில் தொடர்புபட்ட சந்தேகநபர்களை இந்த வழக்கில் இருந்து விடுவிப்பது சம்பந்தமாக அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான அறிவிப்பினை வழங்குவதற்கான’ அறிவுறுத்தல்களை யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்ற நீதவான் பெற்றுக் கொண்டார்.[135]

[132] *தமிழ்நெற்*: 31 மார்ச் 2004: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=11629. 05 மார்ச் 2012 இல் 13 வயது பாடசாலை மாணவி பாலியல் வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டது பற்றி அதன் அறிக்கையைப் பார்க்கவும் ஜெகன் பின்னர் இதற்காக குற்றவாளி எனக் காணப்பட்டார்.

[133] நீதிமன்றக் குறிப்புகள்: MCJ2023 p43.

[134] *தமிழ்நெற்*: 20 ஓகஸ்ட் 2004: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=12703

[135] நகர்வு ஆவணம் , 16 நவம்பர் 2021: MCJ2023 p425; ‘மேலதிக அறிக்கை’, இலங்கைப் பொலிஸ், 21 நவம்பர் 2016: MCJ2023 p430.

# 4. பொலிஸ் விசாரணை பற்றிய பகுப்பாய்வு

### 4.1. சர்வதேச சட்டத்தின் கீழ் விசாரணை செய்து வழக்குத் தொடர்ந்து தண்டிப்பதற்கான கடமை

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், 'இனத்தின் வாழ்வை அச்சுறுத்தும் ஆயுதமுரண்பாடு மற்றும் ஏனைய பொது அவசர நிலைகளைக் கொண்ட நிலைமைகளில் கூட எந்த இழிவுபடுத்தலும் அனுமதிக்கப்படாத அதி உச்ச உரிமையாக' வாழ்வுக்கான உரிமை கருதப்படுகின்றது.[136] உதாரணமாக, முக்கிய சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளில் ஒன்றான, 1966 ஆம் ஆண்டு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை (ICCPR) பிரிவு 6.1 இல் வழங்குகின்றது:

***ஒவ்வொரு மனித உயிருக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு. இந்த உரிமை சட்டத்தினால் பாதுகாக்கப்படும். எவருடைய உயிரையும் தன்னிச்சையாகப் பறிக்ககூடாது.***

**இலங்கை 1980 இலிருந்து ICCPR இல் ஒரு தரப்பாக இருந்துள்ளது.**

வாழ்வதற்கான உரிமை என்பது அரசுகள் மீறல்களை விசாரணை செய்து, வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்குவதற்கான கடமையை அவசியமாக கொண்டுள்ளன என்பதை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் நீண்ட காலமாகவே வைத்திருக்கின்றன. வாழ்க்கையைப் பாதுகாக்கும் கடமையின் இந்த முக்கிய பகுதியானது உடன்படிக்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் ( சரத்து 2.1) அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேர்த்தியான பரிகாரத்தினை வழங்கும் (சரத்து 2.3) கடமையை உறுதிப்படுத்தும் மற்றும் மதிக்கும் கடமையைக் கொண்டுள்ளது.[137]

இலங்கை அரசாங்கத்திற்கும் LTTE இனருக்கும் இடையிலான பகைமை ஒரு உள்ளக ஆயுத மோதலாகக் ('சர்வதேசமற்ற') கருதப்படுவதாலும் இலங்கையானது 1949 இன் நான்கு ஜெனீவா உடன்படிக்கைகளின் ஒரு தரப்பாக இருப்பதாலும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் பொருந்தும்.[138] பகைமைகளில் சம்பந்தப்படாத நபர்களின் கொலை தடைசெய்யப்படுகின்றது[139] அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் படி: 'தமது நாட்டவர்களால் அல்லது ஆயுதப்படைகளால் அல்லது தமது நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்களை அரசுகள் விசாரிக்க வேண்டும், அத்துடன் பொருத்தமானால் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்'.[140]

நீதிக்குப் புறம்பான கொலைகள், விசாரணையின்றி கொல்லப்படுதல், தன்னிச்சையான கொலைகள் ஆகியன வாழ்வதற்கான உரிமை தொடர்பான மிக மோசமான மீறல்கள் ஆகும். ஐநா மனித உரிமைகள் அமைப்புக்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதை மனித உரிமைப் பாதுகாவலர்கள் அல்லது அதிருப்தியாளர்கள் ஆகியோருடன் சேர்த்து குறிப்பாக கரிசனைகுரிய விடயமாக விசேட கவனம் செலுத்தியுள்ளது.[141] இவ்வாறான குற்றங்களுக்கு குறிப்பாக தண்டனை யில் இருந்து விலக்களிக்கும் விகிதம் மிகவும் உயர்வாக இருப்பதை அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதுடன் ஊடகவியலாளர்களுக்கு எதிரான மோசமான குற்றங்களுக்கு அரசுகள் வழக்குத் தொடர்ந்து தண்டணை வழங்கத் தவறுதல் குற்றவாளிகளுக்கு தைரியத்தைக் கொடுப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கான நீதியை

[136] ஐநா மனித உரிமைகள் சபையின் பொதுக்கருத்து இல 36, CCPR/C/GC/36, 3 செப்ரெம்பர்2019, பத்தி 2: https://documents.un.org/doc/undoc/gen/g19/261/15/pdf/g1926115.pdf

[137] Ibid, பத்தி 27.

[138] உதாரணமாக ஐநா மனித உரிமைகள் சபையின் இலங்கை பற்றிய விசாரணைக்கான மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் செயல் திட்ட வரம்புகளைப் பார்க்கவும், https://www.ohchr.org/en/hr-bodies/hrc/oisl இல் கிடைக்ககூடியதாக உள்ளது.

[139] IV போர் காலத்தில் பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பான ஜெனிவாவின் உடன்படிக்கை, 1949, பிரிவு 3

[140] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வழக்கமான சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் 161 விதிகளைக் கொண்ட தரவுத்தளமானது அலகு 01 இல் ICRC இன் வழக்கமான சர்வதேச மனிதாபிமானச் சட்டவிதி 158 போர்க்குற்றங்களுக்கு வழக்குத் தொடரல் பற்றி குறித்துக்காட்டுகிறது. இது: https://ihl-databases.icrc.org/en/customary-ihl/v1/rule158 இல் கிடைக்ககூடியதாக உள்ளது.

[141] பார்க்கவும் A/HRC/41/36: மனித உரிமைப் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் முக்கிய அதிருப்தியாளர்களை அரசு வேண்டுமென்றே கொல்வதைத்தடுத்தல், அவற்றுக்குப் பொறுப்புக் கூறல் அவை பற்றி விசாரித்தல்– சட்டத்திற்குப் புறம்பான, எழுந்தமானமான அல்லது தன்னிச்சையான கொலைகள் பற்றிய விசேட அறிக்கையாளரின் அறிக்கை, 04 ஒக்ரோபர் 2019.

மறுப்பதுடன் ஏனைய ஊடகவியலாளர்களையும் அதிக ஆபத்துள்ள செய்திகளை வெளியிடுவதில் இருந்து அவர்களைத் தடுக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார்கள்.[142] ஐநாவின் சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் கூறியது போல் 'ஊடகவியலாளர்களைக் கொலை செய்து அவர்களை மௌனிக்கச் செய்வது செய்தித் தணிக்கையின் மிக மோசமான வடிவமாகும்'.[143]

ஐநா பொதுச் சபையின் 2005 ஆம் ஆண்டு தீர்மானமானத்தில்[144] ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிகாரம் மற்றும் இழப்பீடகளுக்கான உரிமை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் **பாரிய மனித உரிமை மீறல்களினால்** பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது நேரடிக் குடும்ப உறுப்பினர்கள்[145] கொண்டுள்ள உரிமைகளை குறிப்பிட்டுள்ளது:

உரிய சட்ட அமைப்புகளின் கீழ் வழங்கப்பட்டபடி, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினை மதிப்பளிப்பதை உறுதிப்படுத்தும் கடப்பாடனது, குறிப்பாக பின்வரும் கடமைகளை உள்ளடக்குகின்றது.

a. மீறல்களைத் தடுப்பதற்கு பொருத்தமான சட்ட, நிர்வாக மற்றும் ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்
b. மீறல்கள் சிறந்த முறையில், உடனடியாக, முழுமையான பாரபட்சமற்ற முறையில் விசாரிக்கப்படுவதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டத்திற்கிணங்க அதற்குப் பொறுப்பானவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
c. பாதிக்கப்பட்டவர்கள் என கூறுபவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான சமமான மற்றும் வினைத்திறனான வழியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
d. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு உள்ளிட்ட பயனுள்ள நிவாரணத்தினை வழங்குதல்.

விசாரணை செய்து வழக்குத் தொடரும் பொறுப்பு பற்றி பல்வேறு முன்னுதாரண வழக்குகளிலும் மற்றும் உடன்படிக்கை அமைப்புகளின் முடிவுகளிலும் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளன: பொது மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் ஐநா மனித குழு அரசுகளின் கடமையை பின்வருமாறு சுருக்கமாக தந்துள்ளது: சர்வதேச மனித உரிமைகள் நியமங்களை திருப்திப்படுத்தும் வகையில் ஒரு விசாரணை எப்போதும் சுயாதீனமானதாகவும், பக்கச் சார்பற்றதாகவும், உடனடியானதாகவும், முழுமையானதாகவும், வினைத்திறனுள்ளதாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.[146] இதனைவிட, ஒரு விசாரணை சங்கிலித் தொடர்க் கட்டளை வரைச் சென்று வாழ்கைக்கான உரிமைகள் தொடர்பில் அவர்களுக்கு கீழ் உள்ளவர்கள் புரிந்த மீறல்களுக்கு உயர் அதிகாரிகள் கொண்டுள்ள சட்டபூர்வமான பொறுப்பு குறித்தும் ஆராய வேண்டும்.[147]

பெரும்பாலும் சட்டத்திற்குப் புறம்மான இறப்புக் குறித்த விசாரணை பற்றிய மின்னசோட்டா நெறிமுறையினை சர்வதேச மற்றும் தேசிய நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் ஒரு சட்டபூர்வ நியமமாக பரவலாக பாவிக்கின்றன, அத்துடன் சட்டத்திற்குப் புறம்பான மரணத்தை விசாரிக்கையில் பின்பற்றப்பட வேண்டிய விரிவான கோட்பாடுகளை விளக்குகின்றது.[148] 'அரசினுடைய செயலால் அல்லது தவறினால் அல்லது அரசினுடைய அங்கம், அல்லது முகவர்கள் இல்லாவிடில் அரசே காரணமாக இருக்கலாம் அல்லது அரச முகவர்களால் அல்லது துணை ஆயுதக்குழுக்கள் அல்லது அரசாங்கத்தின் கட்டளையின் கீழ் அல்லது ஒப்புதலுடன் இயங்கும் தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட மரணங்கள் உட்பட வாழ்வுக்கான உரிமையை மதிக்கும் தனது கடமையை அரசு மீறி, மரணம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் இவை பிரதானமாகப் பொருந்தும்.[149] இந்தக் கோட்பாடுகள் இதில் சம்மந்தப்பட்ட அனைவரும் பின்பற்ற வேண்டிய தொழில்முறை ரீதியான மற்றும் நன்நெறி சார்ந்த தரநிலைகள் பற்றிய விரிவான வழிகாட்டியையும், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக குற்றம் நடந்த இடத்தின் ஆதாரங்களை, சாட்சியின் விசாரணை, மற்றும் ஏனைய பலதரப்பட்ட ஆதாரங்களை சேகரித்தல், ஆய்வுக்குட்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்வது தொடர்பிலான நடைமுறைப் படிமுறைகளையும் வழங்குகின்றது.

142 கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்துவது பற்றிய விசேட அறிக்கையாளரின் அறிக்கை, ஐநா மனித உரிமைகள் சபை, ஆவணம் A/HRC/50/29, 20 ஏப்ரல் 2022, பத்தி 29.

143 Ibid.

144 மோசமான மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்கள் மற்றும் இழப்பீடுகளுக்கான உரிமைகள் பற்றிய ஐநாவின் அடிப்படைக் கொள்கைகள் பற்றிய வழிகாட்டிகள் (இனிமேல், இழப்பீடுகள் மீதான கொள்கைகள், ஐநா பொதுச் சபைச் தீர்மானம் 60/147 of 16 டிசம்பர் 2005, பிரிவு 3.

145 பிரிவு 8, இழப்பீடுகள் மீதான கொள்கைகள்.

146 பொதுக் கருத்து இல. 36, உபபத்தி, பத்தி 28.

147 Ibid, பத்தி 27; ஐ நா மனித உரிமைகள் சபை, சட்டத்திற்குப் புறம்பான, எழுந்தமானமான அல்லது தன்னிச்சையான கொலைகள் பற்றிய விசேட அறிக்கையாளரின் அறிக்கை, 1 ஏப்ரல் 2014, A/HRC/26/36, பத்தி 81.

148 சட்டத்திற்குப் புறம்பான எழுந்தமானமான மற்றும் தன்னிச்சையான கொலைகள் பற்றிய விசாரணைகள் மற்றும் வினைத்திறனான தடுப்பு பற்றிய மீளாய்வு செய்யப்பட்ட ஐ.நாவின் கையேடு,2017: https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/MinnesotaProtocol.pdf

149 மின்னசோட்டா நெறிமுறை, p.1.

இவ்வாறன மீறல்கள் இடம்பெறாமல் தடுத்தல் மற்றும் தண்டிப்பதற்கான அரசாங்கத்தின் பொறுப்பு அதன் சொந்த அதிகாரிகளுக்கும் அப்பால் கடந்து செல்கிறது. அரசாங்கம் இல்லாத குழுக்களால் புரியப்பட்ட மீறல்களில் அரசே வெவ்வேறு வழிகளில் உடந்தையாக இருக்கலாம். இவ்வாறான நடத்தையினை தடுக்க, விசாரிக்க மற்றும் பதிலளிக்க உரிய முறையில் செயற்படத்தவறிவிட்டதாகக் நிரூபிக்கப்பட்டால் அரசாங்கமும் அரசாங்கம் இல்லாத குழுக்களின் நடத்தைக்காக பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படலாம்.[150]

பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஒருவரின் குடும்ப உறுப்பினர்கள் குற்றவியல் நீதிச் செயல்முறை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அதில் பங்கெடுப்பதற்கான உரிமைகளைக் கொண்டுள்ளார்கள். ஒரு விசாரணை இடம்பெறும் வேளையில், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அரசுகள் தகவல்களை வெளியிட வேண்டும், அந்த விசாரணையின் முன்னேற்றம் பற்றி அவர்களுக்கு அறிவிக்க வேண்டும், அத்துடன் விசாரணைப் படிமுறைகள், சாட்சியம் வழங்கல் தொடர்பாக, ஆலோசனைகளை வழங்கி இந்த செயன்முறை முழுவதும் அவர்களது நலன் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களது நேர்த்தியான பங்கெடுப்பிற்கு வழிசெய்ய வேண்டும்.[151]

இறுதியாக, மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டினை வழங்குவது அரசுகளின் கடமையாகும். மேலே கூறப்பட்ட பரிகாரம் மற்றும் இழப்பீடுகளுக்குரிய உரிமை பற்றிய ஐ.நாவின் அடிப்படைக் கோட்பாடுகள் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட விதிமுறைகளின் மீறல்களைக் கொண்ட நடவடிக்கைகள் அல்லது தவறுகளுக்கான இழப்பீடுகள் போதுமானதாக, பயனுள்ளதாக உடனடியானதாக இருக்க வேண்டும், அத்துடன் மறுசீரமைப்பு, நட்டஈடு, மனநிறைவடைதல் மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்க வேண்டும்.[152] இது பகிரங்க மன்னிப்புகோரல், நினைவுச் சின்னங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் உண்மையினை முழுமையாக வெளியிடல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கலாம். மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கான உறுதிப்பாடுகள் என்ற தலையங்கத்தின் கீழ் நீதிச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகளான , உரிய செயல்முறை, நீதியான மற்றும் பக்கச் சார்பற்ற சர்வதேச தரநிலைகளுக்குட்பட்ட அனைத்து சிவில் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை உறுதிப்படுத்துதல் போன்றவற்றையும் உள்ளடக்க முடியும்.[153]

## 4.2. சர்வதேச சட்ட தரநிலைகளுடன் ஒப்பிடுகையில் நிமலராஜன் விசாரணை

2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் ஐ நா அலுவலகத்தால் (OHCHR) நடாத்தப்பட்ட இலங்கை பற்றிய விசாரணை (OISL) 'இலங்கையில் தண்டணையில் இருந்து விலக்களிப்பு என்பது இன்று வரை ஆழ வேரூன்றியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது'.[154] பெப்ரவரி 2002 இல் இருந்து நடந்தவற்றை உள்ளடக்குகையில் இந்த அறிக்கை நிமலராஜனின் வழக்குப் பற்றி விசேடமாகக் குறிப்பிடவில்லை. ஆனால், அதன் காலவரம்பு நிமலராஜன் கொலை பற்றிய தீவிர விசாரணையின் ஒரு பகுதியுடன் தற்செயலாக ஒன்றி வந்துள்ளது அத்துடன் இந்த அறிக்கை அதன் ஆணைக்காலப் பகுதிக்கு முன்பே குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட தவறியுள்ளார்கள் என விசேடமாக குறிப்பிட்டுள்ளது.[155]

இலங்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலே பட்டியலிடப்பட்டுள்ள சர்வதேச சட்ட தரநிலைகளுக்கு அமைவாக நிமலராஜன் கொலை பற்றிய விசாரணை சுயாதீனமாகவும், பாரபட்சமற்றமுறையில் உடனடியாகவும் அத்துடன் நேர்த்தியானதாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் மற்றும் வெளிப்படையானதாகவும் இருக்கக்கூடிய முறையிலும் நடாத்தப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் கட்டளைப் பீடத்தில் உயர்பதவியில் இருப்பவர்களின் பொறுப்புக் குறித்தும் ஆராய்ந்திருக்க வேண்டும். கொலைக்குப் பின்னர் ஒக்ரோபர் 2000 இல் வழக்கு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இறுதிச் சந்தேக நபர்கள் பிணையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நவம்பர் 2021 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற முழு விசாரணைக்குமான நீதிமன்றப் பதிவுகளை ஆராய்ந்து

[150] அரசு சாராத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களின் சட்டத்திற்குப் புறம்பான, எழுந்தமானமான அல்லது தன்னிச்சையான கொலைகள் பற்றிய விசேட அறிக்கையாளரின் அறிக்கை: வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாத்தல், ஐ.நா மனித உரிமைகள் சபை, ஆவணம் A/HRC/38/44, 7 டிசெம்பர் 2020, பத்தி 22.

[151] மின்னசோட்டா நெறிமுறை, பத்தி 35. குற்றம் மற்றும் அதிகார துஸ்பிரயோகத்தினால்ப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய ஐ.நாவின் பிரகடனத்தையும் பார்க்கவும், ஐ.நா பொதுச் சபையின் தீர்மானம் 40/34, 29 நவம்பர் 1985, குறிப்பாகப் பத்தி 6.

[152] இழப்பீடுகள் மீதான ஐ.நாவின் கொள்கைகள், பிரிவுகள் 15-23.

[153] இழப்பீடுகள் மீதான ஐநாவின் கொள்கைகள், பிரிவுகள் 22-23.

[154] இலங்கை பற்றிய OHCHR இன் விசாரணை பற்றிய அறிக்கை, A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2015,பத்தி 7.

[155] Ibid,பத்தி 1175.

பார்க்கையில் அது பல குறைபாடுகளை வெளிப்படுத்துவதுடன், எல்லாவற்றுக்கும் மேலாக இது போன்ற வழக்குகளில் நீதியை வழங்குவதற்கு இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பின் விருப்பம் மற்றும் அதன் திறன் குறித்தும் கடுமையான கேள்விகளை எழுப்புகின்றது. இறுதியில், நிமலராஜனைக் கொன்றவர்களை நீதிக்கு முன் நிறுத்துவதற்கான விசாரணை தோல்வியடைந்து விட்டது.

**'சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான'**

23 ஏப்ரல் 2001 இல் கொலைக்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர், விசாரணையை மேற்பார்வை செய்யும் நீதவானான நீதிபதி விக்னராஜா முன்னேற்றம் போதாமை குறித்து சலிப்படைந்ததுடன், 'பொலிஸ், இராணுவத்தினர் மற்றும் நீதிமன்றங்கள் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்யமுடியாவிட்டால் சட்டம் மற்றும் ஒழுங்கினைக் பேணுவதில் பொதுமக்களுக்குள்ள நம்பிக்கை அழிக்கப்படாதா?' எனப் பொலிஸ் பிரதிநிதிகளைக் கேட்டார்.[156] இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களில் ஒருவர் உட்பட பல அவதானிகளின் கருத்துப் படி பாதுகாப்பு படைகளுக்கும் ஈ.பி.டி.பி. இனருக்கும் இடையிலான இரகசிய கூட்டுறவினையும் மற்றும் அரச பாதுகாப்பு படைகளையும் அதன் முகவர்களையும் பாதுகாக்கும் அரசாங்கத்தின் விருப்பத்தையும் கருத்தில் கொள்ளும் போது நிமலராஜன் கொலை பற்றி ஒரு சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை இடம்பெறுவது ஒரு போதுமே சாத்தியமில்லை. அதேவேளையில், இந்த விசாரணையில் பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டவாளர்களில் ஒருவர் "எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒவ்வொரு அரசாங்கமும் பாதுகாப்பு படைகளை தான் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கின்றது .... அத்துடன் ஈ.பி.டி.பி. என்பது அரச படைகளுடன் இணைந்து பணியாற்றும் ஒரு துணை ஆயுதக்குழு" என்று கூறினார்.[157]

இலங்கைக்கான உண்மையைக் கண்டறியும் பயணத்தினைத் தொடர்ந்து, எல்லைகளற்ற ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச அமைப்பு 'ஒக்ரோபர் 2000 ஆம் ஆண்டில் இருந்து ஜனவரி 2002 வரை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளினால் பொலிசாரின் வேலை தடுக்கப்பட்டது' என்ற முடிவுக்கு வந்துள்ளது. எல்லைகளற்ற ஊடகவியலாளர்களுக்கான அமைப்பு அந்தக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்தேக நபர்கள் சுதந்திரமாக நடமாடித்திரிந்தார்கள் என அறிந்துள்ளது. அத்துடன் நிமலராஜன் ஒரு தமிழர் என்பதால் LTTE இனருடன் தொடர்புடையதாகக் கருதி பொலிசாரும் இராணுவத்தினரும் தமது எதிரிகளில் ஒருவரைக் கொன்றவர்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து நேரத்தினைச் செலவிடமாட்டார்கள் எனச் சொல்லப்பட்டது.[158] யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பல இலங்கை மற்றும் சர்வதேச ஊடகங்களுக்காக, நடைபெறும் சம்பவங்கள் பற்றி நிமலராஜன் சுயாதீனமாகச் செய்தி வெளியிட்டமையானது அவரது கொலைக்கான நோக்கமாக இருந்தது. அத்துடன் அந்த அறிக்கை அவருக்கு ஏற்பட்ட கொலை அச்சுறுத்தல்களை மேற்கோள்காட்டியிருந்ததுடன் அவை விசாரணையின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என அதே அறிக்கை தெரிவித்துள்ளது. 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தப் பின்னணியில் பொலிசாரின் விசாரணைகளை ஆராய்ந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கூடுதலான அரசியற் கொலைகளை அரசாங்கம் நேர்த்தியான முறையில் விசாரிக்கத் தவறிவிட்டது எனவும் 'அரசியற் கொலைகள் தொடர்பான தீவிர விசாரணைகளுக்கான கூடுதலான ஆர்வத்தினைப் பொலிசார் இழந்துவிட்டார்கள் எனவும் .... இந்த வழக்குகள் சாதாரணமாகவே கையாள்வதற்கு கடினமானவை' என்பதையும் ஏற்றுக் கொண்டார்.[159]

கிடைக்கக்கூடிய நீதிமன்றத் தரவுகளில் இருந்து, அரச அமைப்புக்களினதும் மற்றும் அரச ஆதரவு துணை ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி. ஒத்துழைப்பு வழங்கத் தவறியமை இந்த விசாரணையினைத் தடுக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்தது என்பது வெளிப்படையாகும். மேலே விசாரணையில் விபரிக்கப்பட்டது போல் ஈ.பி.டி.பி. தொடர்ச்சியாகத் தாமதப்படுத்தி வந்ததுடன் பொலிசாரது வேண்டுகோள்களுக்கும் நீதிமன்ற உத்தரவுகளுக்கும் கீழ்ப்படியாமல் நடந்து கொண்டது. யூன் 2002 இல் கொலை இடம்பெற்று ஒன்றரை வருடங்களுக்கு மேல் கடந்துவிட்ட பின்னர், யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகமானது தமது உறுப்பினர்களின் பதிவேட்டையும், துப்பாக்கிகள் உட்பட அங்கு தற்போது வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் முழு விபரங்களை ஒப்படைக்குமாறும் பொலிசார் விசாரிக்க வேண்டிய நபர்களை விசாரணை செய்ய அனுமதிக்குமாறும் கட்டளையிடப்பட்டது.[160] ஆயினும் ஆரம்பத்தில் ஈ.பி.டி.பி. இனர் ஆயுதங்களின் பட்டியலை வழங்க

[156] யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை 23 ஏப்ரல் 2001: MCJ2023 p88.

[157] வழக்கறிஞர் கே.எல் ரட்ணவேல் உடனான நேர்காணல், 14 பெப்ரவரி 2025.

[158] எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள், 'இலங்கைப் பிரதமருக்கான திறந்த மடல்', 19 ஒக்ரோபர் 2022,: https://rsf.org/en/open-letter-sri-lankan-prime-minister இல் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

[159] சட்டத்திற்குப் புறம்பான, எழுந்தமானமான அல்லது தன்னிச்சையான கொலைகள் பற்றிய விசேட அறிக்கையாளரின் அறிக்கை, E/CN.4/2006/53/Add.5, 27 மார்ச் 2006, பத்தி 34.

[160] நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 5 யூன் 2002: MCJ2023 pp108–109.

மறுத்ததுடன், நீதிமன்றம் விசாரணைகளுக்கு ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்ட பத்தொன்பது உறுப்பினர்களில் ஆறு பேரை மட்டுமே ஆஜர்படுத்தியதுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையான அவர்களது உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அனுமதியையும் வழங்கவில்லை.

இராணுவம் இன்னும் கூடியளவு ஒத்துழைப்பு வழங்கயிருக்க முடியும் என்பது வெளிப்படை. இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையிலே கொலை இடம்பெற்றது என்பது விசாரணைகளின் போது தெரிய வந்தது. ஆகக்குறைந்தது 30 இராணுவத்தினர் பட்டியலிடப்பட்டிருக்கிறார்கள் அல்லது நீதிமன்றப் பதிவுகளில் பெயர் குறிப்பிடப்படுள்ளார்கள். இவர்கள் எல்லா நகர்வுகளையும் கட்டுப்படுத்தியவாறு அந்த நேரத்தில் அருகிலுள்ள இடத்தில் கடமையில் இருந்துள்ளார்கள். அவ்வாறிருக்கும் போது அவர்களுக்குத் தெரியாமல் அந்தப் பிரதேசத்திற்கு ஊடாக கொலைகாரர்கள் கடந்து செல்லது மிகவும் சாத்தியமற்றதொன்றாவே தெரிந்தது. ஆயினும் அருகாமையில் இருந்த சோதனை நிலையங்களிலும், காவல் நிலைகளிலும் கடமையில் இருந்த இராணுவத்தினர் சிலரை பொலிசார் அடையாளங்கண்டு விசாரணை செய்வதற்கு இராணுவத் தளபதிக்கு நீதவான் உத்தரவு வழங்குவதற்கு பல மாதங்கள் எடுத்தது. கொலை இடம்பெற்ற இரவு வேளையில் இராணுவம் அதற்குப் பதில் செயலாற்றிய சூழலினை விசாரணையில் தெளிவுபடுத்த முடியாமல் இருந்தது. அவர்கள் குண்டு வெடிப்புச் சத்தத்தினைக் கேட்டதாகவும் அத்துடன் படைப்பிரிவு தலைமையகத்தினை தொடர்பு கொண்ட பின்னர் மாத்திரமே ஒரு பகுதி இராணுத்தினர் சம்பவ இடத்திற்குச் சென்றாக அருகில் இருந்த இரண்டு சோதனை நிலையங்களில் கடமையில் இருந்த இராணுவத்தினர் பின்னர் உறுதிப்படுத்தினார்கள்.[161] நிமலராஜனின் மனைவியின் சகோதரரான அன்ரன் ஜெகதாஸ் போல் சம்பவ இடத்தில் இருந்து மூன்றாவது சோதனை நிலையத்திற்கு அவசரமாக ஓடி வந்து தன்னுடன் வருமாறு இராணுவத்தினரை வற்புறுத்தினார் ஆனால் இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தினை சுற்றி வளைப்பதையோ அல்லது தேடுதல் நடாத்துவதையோ தவிர்த்து விட்டார்கள்.

இராணுவத்தினர் அவரது கொலைக்கு நாட்கள் மற்றும் மணித்தியாலங்களுக்கு முன்னர் நிமலராஜன் வீட்டுக்குச் சென்று அங்கு அவர்கள் அவரை LTTE இனருக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டினார்கள் (போலியாக அவர் எதிர்த்தார்). குறிப்பாக இந்தக் குற்றம் சாட்டியவர்கள் யார் என்பதையும் அல்லது தாக்குதலுக்கு தயாராகும் வகையில் அவரது வீட்டின் அமைப்பினை மதிப்பிடுவதற்கு அவர்களில் எவராவது வந்தார்களா என்பதனை அடையாளங் காண்பதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. இந்த தாக்குதல் சிறிது நேரத்திலேயே தாமதமின்றி படுவேகமாக மேற்கொள்ளப்பட்டது. அவருடைய தகப்பனார் சம்பவம் பற்றி கூறியதன் படி ஒரு துப்பாக்கிதாரி முன் கதவில் இருந்து நேராக நிமலராஜனின் படிப்பு அறைக்குள் 'விரைந்து' சென்றான். கொலை இடம்பெற்ற இரவு வழமைக்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட நீடிக்கப்பட்ட மின்வெட்டு தாக்குதலை நடாத்துவதற்கு வசதியாகப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையில், அரச படைகளின் அல்லது துணை ஆயுதக்குழுவின் மூத்த உறுப்பினர்கள் கொலைக்கான உத்தரவை வழங்கினார்களா அல்லது கொலைக்கு தூண்டினார்களா அல்லது அதனைத் தடுப்பதற்கு, விசாரிப்பதற்கு அல்லது பொறுப்பானவர்களை தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தவறியுள்ளார்களா என்பது பற்றி அவர்களது பொறுப்பினை ஆராய்வதற்கு அர்த்தமுள்ள எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்த அறிகுறிகளும் இல்லை. இது இவ்வாறிருப்பினும், பிரதான சந்தேக நபர்கள் அரசுடன் இணைந்துள்ள துணை ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி. இன் உறுப்பினர்கள் ஆவர். இந்த விசாரணையானது ஈ.பி.டி.பி. இன் குறிப்பிட்ட கீழ்மட்ட உறுப்பினர்கள் கொலையிலேயே சம்பந்தப்பட்டுள்ளார்களா அல்லது சாத்தியமான வகையில் கொலைக்கு உதவியும் ஊக்குவிப்பும் வழங்குவதில் (உதாரணமாக இதனை நடாத்துவதற்கான போக்குவரத்து அல்லது வேறு வழிமுறைகளை வழங்குதல்) தொடர்புபட்டுள்ளார்களா என்பதனை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. நீதிமன்றம் சந்தேக நபரான ஜெகன் என்பவரை ஆஜர்ப்படுத்துமாறு ஈ.பி.டி.பி. இன் செயலாளர் நாயகத்திற்கு மார்ச் 2002 இல் உத்தரவிட்டது.[162] ஆனால் அவரும் அல்லது கட்டளைப் பொறுப்பிலுள்ள ஏனையவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க ஏன் அழைக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஈ.பி.டி.பி., இராணுவம் மற்றும் பொலிசார் தமது பங்கிற்கு வேண்டுமென்றே தாமதப்படுத்தி வருவதற்கான போதிய ஆதாரங்கள் உள்ள அதேவேளையில், நிமலராஜன் கொலையானது உள்ளூர் ஊடகங்கள் மற்றும் வெளிநாட்டு அவதானிப்பாளர்களின் கவனத்தினை ஈர்த்த ஒரு உயர்நிலை வழக்காக உள்ளது. எனவே அதிகாரிகள் ஏதாவது ஒன்றினை

[161] கடமையில் இருந்த 10 இராணுவத்தினரிடமிருந்து எடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் பற்றிய CID இனரின் தொகுப்பு: MCJ2003 p282.

[162] மேலதிக நீதவான் இளங்கோவின் உத்தரவு, 15 மார்ச் 2002: MCJ2023 pp11, 107, 296.

செய்து கொண்டிருப்பது போல் காட்டவேண்டியுள்ளது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனவரி 2002 இலிருந்து விசாரணை கூடிய வினைத்திறனுள்ளதாக மாறியது என எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு உறுதிப்படுத்துகிறது. அத்துடன் மேலுள்ள விசாரணையின் கால ஒழுங்கு விபரங்கள் வெவ்வேறு காலங்களில் அதிகரித்திருந்தமையை சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், விசாரணை பற்றி கிடைக்ககூடிய நீதிமன்றப் பதிவினை வாசித்ததில் விசாரணை அடிக்கடி குறிப்பிட்ட ஆதாரங்களை பின்தொடர்ந்து விசாரணை செய்யாமல் தவிர்த்தமையை அறிந்து கொள்ளகூடியதாக உள்ளது. விசாரணையின் போது நீதிமன்றத்திற்குப் பொலிசார் ஒழுங்காக அறிக்கைகளை வழங்கிய போதும் அதில் குறிப்பிட்ட இடைவெளிகளும், முரண்பாடுகளும் காணப்பட்டதுடன் சிலவற்றுக்கான விளக்கங்களும் தவறவிடப்பட்டிருந்தன. இதுமட்டுமன்றி, சில துப்புகள் பின்தொடர்ந்து விசாரிக்கப்பட்டன. அதேவேளையில் மற்றையவை விசாரிக்கப்படவில்லை என்ற கேள்விகளையும் எழுப்புகின்றது. உதாரணமாக நெப்போலியன் என்பவர் ஈ.பி.டி.பி. இல் ஒரு மூத்த உறுப்பினர். அவர் 2001 இல் நீதிபதியால் இந்த கொலையுடன் தொடர்புபட்ட ஒரு சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டார். அத்துடன் பாதிக்கப்பட்டவரின் சட்டத்தரணியால் 'முக்கிய சாட்சி' எனவும் குறிப்பிடப்பட்டார்.[163] இன்னும் அவர் ஒரு சந்தேகநபராக இருப்பதற்கான காரணம் மற்றும் இந்தக் கொலையில் அவர் வகித்ததாக சந்தேகிக்கப்படும் பங்குபற்றி நீதிமன்றப் பதிவுகளில் எதுவுமே குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அதேவேளையில் ஏனைய சந்தேக நபர்கள் பற்றி ஆகக்குறைந்தது மறைமுகமாகவது குறிப்பிடப்பட்டுள்ளது. நெப்போலியன் தொடர்புபட்டிருக்கவில்லை என்ற உறுதியான நம்பிக்கைக்கோ அல்லது கைது செய்யப்படுவதில் இருந்து அவர் தப்பாமல் இருப்பதை உறுதிப்படுத்த தாங்கள் நடவடிக்கை எடுக்கத்த தவறியமைக்காக வெளிப்படையாக எந்தக் காரணங்களும் CID இனரால் வழங்கப்படவில்லை. மேலே விசாரணையின் விபரங்களில் குறிப்பிட்டது போல், நெப்போலியன் தனக்கு முன் ஆஜர்படுத்தப்பட்டு தானே அவர் குறித்து முடிவு எடுப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பது குறித்து அதிருப்தி அடைந்திருந்தார்.

இந்த விசாரணையில் பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வழக்கறிஞர்களில் ஒருவரின் கருத்துப்படி, இந்த வழக்கு மீதான அழுத்தம் காரணமாக அரசாங்கம் உண்மையான குற்றவாளிகளை விட்டு எங்கேயோ கவனத்தைக் கொண்டு செல்ல தீவிரமாக முயற்சி செய்கிறது: "இது போன்ற சம்பவம் இடம்பெறும்போது செயல்படும் முறை என்னவென்றால் பொலிசார் சுற்றுவட்டாரத்தில் அல்லது சம்பந்தப்படாத யாரையாவது அவர்கள் குற்றச் செயலுடன் தொடர்புபட்டிருக்காவிட்டாலும் தாங்கள் ஆட்களைக் கைது செய்துவிட்டோம் என்று சொல்வதற்காக கைது செய்வார்கள். நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பார்கள். பின்னர் பதற்றம் தணிந்ததும் அவர்களை விடுதலை செய்கிறார்கள்."[164]

சம்மந்தப்பட்ட அனைவருமே இந்த அரசியல் சூழலைப் பற்றி அறிந்திருந்தனர் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக, சந்தேகநபர்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வழக்கறிஞர் செப்டெம்பர் 2002 இல் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்கையில் இது போன்ற கொலைகள் இடம்பெறும் போதெல்லாம் இந்த 'சம்பவத்தினைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக' வெவ்வேறு அரசியற்கட்சிகள் தமது நலனுக்காக அவற்றைப் பயன்படுத்த முயன்றன எனக் குறிப்பிட்டார்.[165] கொலை பற்றிய விசாரணைகள் முடிவின்றி தொடரப்படமுடியாது என்பதை நினைவிற்கொண்டு மேலதிக வழக்கு விசாரணைகள் தண்டணைத் தீர்ப்புக்கு இட்டுச் செல்லாது என நீதிபதி திருப்தி அடையும் போது குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விடுதலை செய்வது நீதிபதியின் கடமை என்பதை நினைவுபடுத்தினார். நீதிமன்ற விசாரணைப் பதிவுகளில் இருந்து வெளிவரும் இன்னுமொரு அம்சம் என்னவெனில் சட்டமா அதிபர் வகித்த பங்கு ஆகும். இலங்கையின் சட்ட அமைப்பில் ஒரு குற்றவியல் குற்றத்திற்காக சட்டமா அதிபர் ஒரு நபரை குற்றஞ்சுமத்துவதா என்பதைத் தீர்மானிக்கும் தனித்துவமான உரிமையைக் கொண்டிருக்கிறார். இந்த அலுவலகம் உயர் பதவிகளில் உள்ளவர்களின் குறுக்கீடு இல்லாமல் சட்டத்தையும், புறநிலைப் பகுப்பாய்வின் உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு எந்தச் செல்வாக்குகளும் பாராபட்சமும் இல்லாமல் இந்த அதிகாரத்தினைப் பயன்படுத்த வேண்டும்.[166] சட்டமா அதிபர் பொலிஸ் விசாரணைகள் மீது மேற்பார்வைக் கட்டுப்பாட்டையும் பயன்படுத்துவதில்லை. ஆனால் சிக்கலான விசாரணைகளில் அவர்களது ஆலோசனையை CID இனர் நாடுவது பொதுவான

[163] நீதிமன்றக் கட்டளை, 27 நவம்பர் 2001: MCJ2003 p289; வழக்கறிஞர் றெமடியஸ் 11 நவம்பர் 2002 இல் வழக்கு விசாரணையின் போது நீதாவானுக்கான சமர்ப்பிப்பு: MCJ2003 p172.

[164] வழக்கறிஞர் கே எல் ரட்ணவேல் உடனான நேர்காணல், 14 பெப்ரவரி 2025

[165] சந்தேகநபர்களுக்கான வழக்கறிஞர் பொன் வெற்றிவேல் நீதிமன்றத்தில் 03 செப்ரெம்பர் 2002 மற்றும் 23 செப்ரெம்பர் 2003 இல் கதைக்கும் போது 1979ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டவிதியின் பிரிவுகள் 186 மற்றும் 456 இனை மேற்கோள்காட்டினார்.: MCJ2023 pp155-156 and 208.

[166] 'இலங்கைச் சட்டமா அதிபரின் பங்கு மற்றும் சட்ட ஆட்சி',முன்னாள் சட்டமா அதிபர் பாலித பெர்ணாண்டோ ஆற்றிய உரையின் திருத்தப்பட்ட வடிவம், சண்டே ரைம்ஸ், 13 நவம்பர் 2016, https://www.sundaytimes.lk/161113/sunday-times-2/the-role-of-the-attorney-general-of-sri-lanka-and-the-rule-of-law-216616.html இல் கிடைக்ககூடியது.

வழக்கம் ஆகும்.[167] நீதிபதி விக்னராஜா சட்டமா அதிபரை இந்த விசாரணையில் குறுக்கீடு செய்ய முயற்சிப்பதாகவே பார்ப்பது போல் தெரிகிறது, ஒரு சந்தர்ப்பத்தில் இந்த விசாரணை பற்றிய அறிக்கைகளை பொலிசார் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்காமல் சட்ட மாஅதிபருக்கு சமர்ப்பிப்பதை 'இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது' எனக் கூறினார்.[168] இறுதியாக, இந்த விசாரணையின் முடிவில் யாரையாவது குற்றஞ்சுமத்த முடியுமா என்பது பற்றிய சட்ட மாஅதிபரின் அறுவுறுத்தல்களுக்காக நீதிமன்றமும் பொலிசாரும் காத்துக் கொண்டிருந்தார்கள். — எதிர்மறையான பதில் வந்து சேர்வதற்கு 10 வருடங்களுக்கு மேலாக எடுத்ததுடன், இது சந்தேகநபர்கள் பிணையில் இருந்து விடுதலை செய்யப்படவும் வழிவகுத்தது. நிமலராஜனின் வழக்கில் சட்ட மாஅதிபர் மறைமுகமாக வகித்த பங்கு குறித்து நீதி மன்ற பதிவுகளில் தெளிவாக இல்லாத அதேவேளையில், அரசு சந்தேக நபராக சம்மந்தப்பட்ட வழக்குகளிலும், இந்த திணைக்களம் ஒரே நேரத்தில் அரசுக்கான பிரதான சட்டத்தரணியாகவும் அரசு சார்ந்த அமைப்புக்களின் அல்லது நபர்களின் வழக்கறிஞராகவும் செயற்படும் சந்தர்ப்பத்தில் அந்த வகிபாகத்தின் சுயாதீனத்தன்மை குறித்துப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.[169]

**'உடனடி'**

மயில்வாகனம் நிமலராஜனின் மரணம் பற்றிய உத்தியோகபூர்வ விசாரணை கொலைக்கு அடுத்தநாள், விசாரணையை மேற்பார்வை செய்யும் நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று வந்த நாளன்று 20 ஒக்ரோபர் 2000 இல் ஆரம்பித்தது. எவ்வாறாயினும் அந்தப் பிரதேசத்தில் கடமையில் இருந்த பாதுகாப்பு படையினரிடமிருந்து ஆதாரங்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஈ.பி.டி.பி. இனரிடமிருந்து அதன் ஆயுதங்கள் தொடர்பான ஆதாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் இந்த சம்பவம் இடம்பெற்று மாதங்கள், வருடங்கள் கடந்த நிலையிலும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கொலை இடம்பெற்று ஆறு மாதங்களுக்கு மேல் கடக்கும் வரை அயலவர்களில் சிலர், நண்பர்கள் மற்றும் சகபாடிகள் விசாரிக்கப்படவில்லை. சம்பவ இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டு பொலிசாரின் வசம் இருந்த தோட்டாவின் கோது மற்றும் இந்த தாக்குதலின் பயன்படுத்தப்பட்ட கைக்குண்டின் பகுதி உட்பட்ட பௌதீக ஆதாரங்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக ஆய்வுக்காக அனுமதிக்கப்படவில்லை. மேலே விபரிக்கப்பட்டது போல் ஆகஸ்ட் 2002 இல் பாதிக்கப்பட்டவரின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வழக்கறிஞர் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக விசாரணைகள் ஆரம்பத்தில் ஒரு தேக்கநிலைக்கு வந்திருந்ததாகவும், சர்வதேச அழுத்தத்தின் காரணமாகவே மீண்டு தற்போது ஆரம்பித்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

நீதிமன்றப் பதிவுகளிலிருந்து இந்த விசாரணைக்குப் பொறுப்பான நீதிபதி விக்னராஜா விசாரணை நடைபெறும் வேகம் குறித்து மிகவும் விரக்தியடைந்திருந்தார் என்பது தெளிவாகின்றது. கொலை இடம்பெற்று ஒரு வாரத்திற்குப் பின்னர், 01 நவம்பர் 2000 இல் வழங்கிய ஒரு தீர்ப்பில், நிமலராஜன் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், மேலதிக விசாரணைகளை நடாத்தி சந்தேகநபர்களைக் கைது செய்து அவர்களை நீதி மன்றத்திற்கு முன் கொண்டுவருமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டு அந்த தீர்பினை முடிவு செய்திருந்தார். அடுத்து வந்த மாதங்கள் மற்றும் வருடங்களிலும் இந்த அறிவுறுத்தலினை பல தடவைகள் திரும்பத் திருப்ப கூறியிருந்ததுடன் அடிக்கடி பொலிசாரின் செயலற்றதன்மை அல்லது தாமதம் பற்றி கண்டித்ததுடன் ஏன் குறிப்பிட்ட விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கேட்டுள்ளார். உண்மையில், அந்த அன்று இரவு அருகில் காவல்க் கடமையில் நின்ற அனைத்து இராணுவத்தினரையும் விசாரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டிருக்காவிட்டால் அது பகுதியாகக் கூட செய்து முடிக்கப்பட்டிருக்காது என்பது புலனாகிறது: மே 2001 இல், அவர் இது போன்ற விசாரணைகள் நடத்தப்பட்டதா என்று பொலிசாரைக் கேட்ட போது பொலிசார் அநேகமான இராணுத்தினர் வேறு இடங்களுக்கு கடமை நிமிர்த்தம் மாற்றப்பட்டுள்ளதாகப் பதிலளித்தனர். அப்போது நீதிபதிதான் இந்த இராணுவத்தினரை இராணுவத் தலைமையகம் ஊடாக அவர்கள் இருக்கும் இடத்தினைக் கண்டறிய முடியும் என பொலிசாருக்கு ஞாபகப்படுத்தினார்.[170]

[167] Ibid.

[168] நீதிபதி விக்னராஜாவின் கட்டளை 27 மார்ச் 2001: MCJ2023 p82.

[169] 2009 ஆம் ஆண்டு இன்னுமொரு முக்கிய பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் கொலை பற்றிய ஒரு விசாரணையில் மூன்று சந்தேகநபர்களான இரண்டு புலனாய்வு அதிகாரிகள் மற்றும் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரை விடுதலை செய்வதற்கான முடிவினை மாற்றுவதற்கு பெப்ரவரி 2025 இல் சட்டமா அதிபர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.: https://economynext.com/sri-lankas-attorney-general-makes-u-turn-in-row-over-emblematic-case-204916/ இலங்கையின் சட்டமா அதிபரின் பணி மற்றும் காலப் போக்கில் அது அரசியல் மயமாக்கப்பட்டது பற்றிய விரிவான வரலாற்று ரீதியிலான ஆய்வுக்கு, பொறுப்புக்கூறல் இல்லாத அதிகாரம்:இலங்கையில் தண்டனை இன்மையின் நெருக்கடி, நீதிபதிகளின் சர்வதேச ஆணையம், நவம்பர் 2012 அத்தியாயம் 3. இனைப் பார்க்கவும். http://www.humanrights.asia/wp-content/uploads/2018/07/The-Final-Report-of-the-IIGEP.pdf. குற்றஞ்சாட்டப்பட்ட மோசமான மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரணை செய்வதற்கான தேசிய விசாரணைக் குழுவின் பணியை அவதானிப்பதற்கு உருவாக்கப்பட்ட பெயர்போன நபர்களைக் கொண்ட சர்வதேச சுயாதீனக் குழுவின் இறுதி அறிக்கையையும் பார்க்கவும் , 14 ஏப்ரல் 2008 எனத் திகதியிடப்பட்ட இந்த அறிக்கையானது சட்டமா அதிபரின் பணியில் நல முரண்பாட்டினை அடையாளங்கண்டுள்ளது இந்த முடிவுக்கான ஒரு பிரதான காரணமாக உண்மைக்கான ஒரு தேடலுக்கு ஆதரவு வழங்குவதற்கான அரசியல் விருப்பம் இல்லாமல் இருப்பதே ஆகும்.: http://www.humanrights.asia/wp-content/uploads/2018/07/The-Final-Report-of-the-IIGEP.pdf.

[170] நீதிமன்றில் நீதிபதி விக்னராஜாவின் உத்தரவு, 30 மே 2001: MCJ2023 p92.

நீதிபதி விக்னராஜா அவரது நீதிமன்ற நிகழ்ச்சி அட்டவணையில் இருந்து அதனை நீக்கியபோது இந்த விசாரணை உண்மையில் ஓகஸ்ட் 2004 இல் முடிவுக்கு வந்த போதிலும் இந்த வழக்கு 2021 வரை உத்தியோகபூர்வமாக மூடப்படவில்லை.

விசாரணை நடவடிக்கைகளை எடுப்பதில் உள்ள தாமதங்கள் மற்றும் விசாரணைக்கு எடுத்த ஒட்டுமொத்த காலம் ஆகியன விசாரணையின் வினைத்திறனில் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தைச் செலுத்தியது என்பது வெளிப்படை. முக்கிய தடயவியல் ஆதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டன, பாதிக்கப்பட்டவர் வசித்த பிரதேசத்தில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மற்றும் பொலிசாரைத் தேடிக் கண்டுபிடிப்பது சிரமமானது, ஈ.பி.டி.பி. உறுப்பினர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை அத்துடன் சிலர் அரசியல்வாதிகளாகியிருந்தார்கள். 2000 ஆம் ஆண்டில் ஈ.பி.டி.பி. இனரின் வசம் இருந்ததாக நம்பப்படும் ஆயுதங்கள் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் குற்றவியல் நீதித்துறையில் இவ்வாறான தன்மையைக் கொண்ட வழக்குகள் கையாளப்படும்போது இது போன்ற தாமதங்கள் மற்றும் மழுப்பல்கள் வழக்கமானதாகவே இருந்துள்ளன. மனித உரிமை மீறல் வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக்கிடப்பதாகவும் வழக்கமாக ஒத்திவைக்கப்படுவதாகவும் அத்துடன் கொலைகள் தொடர்பான வழக்குகள் நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடங்கப்பட்டு ஆரம்பக்கட்டங்களுக்கு அப்பால் செல்வதே அரிது எனவும் அத்துடன் பொலிசாரின் விசாரணைகளும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்துள்ளன எனவும் 2015 இல் வெளியிடப்பட்ட ஐநா மனித உரிமைகள் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணை கண்டுபிடித்தது.[171]

### ‘முழுமையான, நேர்த்தியான மற்றும் நம்பகமான’

விசாரணை முழுவதிலும் பல்வேறு குறைபாடுகள் இருந்துள்ளன என்பது யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றப் பதிவுகளில் இருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. விசாரணைக்கு தலைமை தாங்கிய நீதிபதிக்கு வெளிப்படையாகவே விரக்தி ஏற்படுத்தும் வகையில், எந்தவொரு கொலை விசாரணைகளிலும் நியமமாக இருக்க வேண்டிய முக்கிய ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அத்துடன் கிடைக்கக்கூடியதாக இருந்த ஆதாரங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு வழக்கறிஞரின் கூற்றுப்படி, சாதாரண கொலைவழக்கில் பொலிசார் பின்பற்றியிருக்க வேண்டிய நடைமுறைகளைக்கூட இராணுவம் மற்றும் துணை ஆயுதக்குழுக்கள் தொடர்புபட்ட நிமலராஜன் கொலைவழக்குப் போன்ற முக்கிய வழக்குகளில் பின்பற்றப்படவில்லை. இந்த வகையான வழக்குகளில் பொலிசார் இரட்டை விசுவாசத்தினைக் கொண்டிருந்ததுடன் இந்தக் கொலையில் அரசியல் சூழ்நிலையால் அவர்கள் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டிருப்பார்கள். உண்மையில் இதில் சம்மந்தப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு மேலான அக்கறை இருக்கும். அத்துடன் சரியான விசாரணை மேற்கொள்ளப்படமாட்டாது.[172] கிடைக்கக்கூடிய நீதிமன்றப் பதிவுகளில் இருந்து விசாரணையின் முக்கியமான தவறுகளை கீழே சுருக்கமாக தருகின்றோம்.

### குற்றம் நடைபெற்ற இடத்தை பாதுகாத்தல், தேடுதல் மற்றும் பதிவு செய்தல்

அங்கு காணப்பட்ட எந்த ஆதாரத்தினதும் முழுமையையும் மூலத்தையும் பாதுகாப்பதற்காக உடனடியாக குற்றம் நடந்த இடத்தினைப் பாதுகாத்தல், அதைத் தொடர்ந்து முறையாகப் பதிவு செய்து ஆதாரங்களை மீட்டெடுப்பது ஆகியன சட்டத்தினை அமுல்படுத்தும் அடிப்படை விடயங்கள் ஆகும். அத்துடன் இவை விசாரணையின் வெற்றிகரமான முடிவுக்கு அவசியமானவை. நிமலராஜன் கொலை வழக்கில், குற்றம் நடைபெற்ற இடத்தினைப் பாதுகாப்பதற்கோ அல்லது எத்தனை பேர் வீட்டுக்குள் நுழைந்தார்கள், அவர்கள் எங்கு சென்றார்கள், எதனைத் தொட்டார்கள் அல்லது அவர்கள் பொதுவாக வேறு என்ன செய்தார்கள் என்பதை பதிவு செய்வதற்கோ எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. எப்போது சம்பவ இடம் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது அல்லது யாரால் என்பது பற்றி பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. உண்மையில் எப்போதாவது கடுமையான தேடுதல் நடைபெற்றமைக்கான அறிகுறிகள் எதுவுமில்லை. மேலும், அடுத்தடுத்த ஆய்வுக்காக உண்மையான குற்றம் நடைற்ற இடத்தின் எந்தப் படங்களும் பாதுகாக்கப்படவில்லை. முறையே ஆதாரங்களின் முழுமையை பாதுகாக்கவோ அல்லது அதன் மூலத்தை உறுதிப்படுத்தவோ சம்பவ இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் சரியான முறையில் மீட்கப்பட்டு பதிவு செய்யப்படவும் இல்லை. உண்மையில், பெரும்பாலும் முக்கிய ஆதாரங்கள் சேதமாக்கப்பட்ட அல்லது தொலைந்து போன பல சம்பவங்களை நீதிமன்றப் பதிவுகள் வழங்குகின்றன.[173]

[171] இலங்கை பற்றிய OHCHR இன் விசாரணை, A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2025, பத்திகள் 1226-1228.

[172] வழக்கறிஞர் கே ஏல் ரட்ணவேல் உடனான நேர்காணல, 14 பெப்ரவரி 2025.

[173] இது எந்த விதத்திலும் விதிவலக்கானதாகத் தெரியவில்லை. 2002 ஆம் ஆண்டில் பல்வேறு CID இனரின் விசாரணை அறிக்கைகளையும் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில் வேறு ஆவணங்களையும் மீளாய்வு செய்த பின்னர், பொலிசார் சரியான முறையில் குற்றம் நடந்த இடங்களை ஆவணப்படுத்தி சாட்சியத்தினைப் பதிவு

**குற்றம் இடம்பெற்ற இடத்தில் முழுமையான தடயவியல் ஆய்வு மேற்கொள்ளத் தவறியமை**

பொலிசார் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த அறிக்கைகளில் பாதிக்கப்பட்டவருடைய வீடு தடயவியல் சோதனைக்கு உட்படுதப்பட்டமை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. எங்கே, எவ்வாறு நிமலராஜன் விழுந்தார் என்பதை அடையாளங் காண்பதற்கும், துப்பாக்கி தோட்டாக்கள், தோட்டாச் சிதறல்கள் மற்றும் தோட்டாக்கள் அல்லது தோட்டா கோதின் சிதறல்கள் எங்கே கண்டெடுக்கப்பட்டது தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கும் இதனை நடாத்தியிருக்க வேண்டும்.

குற்றம் இடம்பெற்ற இடத்தில் பெருமளவில் இரத்தக்கறை படிந்திருந்ததாக சம்பவம் பற்றிய பல அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. தாக்குதல் நடாத்தியவர்களின் எண்ணிக்கையை அறிவதற்கு, சுடப்பட்ட நேரத்தில் பாதிக்கப்பட்டவரின் மற்றும் தாக்குதல் நடாத்தியவர் அல்லது நடாத்தியவர்களின் தொடர்பட்ட நிலையை உறுதிப்படுத்துவது உதவியிருக்கும். அத்துடன் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இரத்தத்தால் அல்லது பாதிக்கப்பட்டவரின் தலையினுடைய பெரிய வெடிப்பினைக் கருதுகையில் முக்கியமாக மூளையால் சிதறடிபட்டிருப்பதற்கான சாத்தியக்கூறினையும் குறிப்பிடுவதற்கு உதவியிக்கும். இது அன்றைய நாள் எந்த சந்தேக நபரினாலும் அணியப்பட்டிருந்த உடுப்பு மற்றும் சப்பாத்துக்களை அடையாளங்கண்டு கைப்பற்றுவதற்கான முயற்சிக்கு இட்டுச் சென்றிருக்கும்.

நீதிமன்றப் பதிவில் நவம்பர் 2000 இன் சம்பவ இடத்தில் கைரேகைகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டது குறித்த குறிப்பு சரியாக எங்கிருந்து இந்த ரேகை அடையாளங்கள் எடுக்கப்பட்டன என்பது பற்றிக் குறிப்பிடத் தவறுகிறது, அத்துடன் இதனையடுத்து எந்தக் கைரேகை அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருப்பது போல் தெரியவில்லை. (டி.என்.ஏ மாதிரிகள் சேகரிக்கப்பட்டது பற்றி நீதிமன்ற குறிப்புகளில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இந்த செயல்முறையானது அப்போது இலங்கையில் ஆரம்பக்கட்டத்தில் இருந்தமையால் இது ஆச்சரியம் தருவாக இல்லை என்பதுடன் இது மிக மிக செலவு கூடியதாக கருதப்பட்டது.[174]) இருப்பினும் இரத்தக்கறை படிந்திருந்த முன்கதவு மற்றும் நிமலராஜனின் படிப்பு அறையின் கதவினதும் தடயவியல் சோதனைகள் தாக்குதல் நடாத்தியவர்கள் எவராவது ஏதாவது கதவுகளில் தொட்டார்களா என்பதைத் தீர்மானிக்க உதவியிருக்கக்கூடும். இதே போலவே, இரத்திலோ அல்லது வேறு வழியிலோ வீட்டின் நிலத்தில் கைரேகை அடையாளங்களுக்காக அல்லது சப்பாத்தின் அடையாளங்களுக்காக ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுபோன்ற எந்தவொரு ஆய்வோ அல்லது பகுப்பாய்வோ இடம்பெறவில்லை.

பிரதான வரவேற்பறையினுள் வெடித்த கைக்குண்டு வீட்டுக்கு உள்ளேயிருந்து எறியப்பட்டதா அல்லது வெளியில் இருந்து எறியப்பட்டதா என்பதை எந்த விசாரணையும் உறுதி செய்யவில்லை. உள்ளேயிருந்து எறியப்பட்டிருந்தால், உள்ளே கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டு பாதுகாப்பு நெம்புடன் பெரும்பாலும் ஒத்துப்போயிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் கைக்குண்டினை எறிந்த தாக்குதல்தாரி சீலிங்கின் ஒரு பகுதி உடைந்து விழுந்ததினால் ஏற்பட்ட கட்டிடத் தூசியினால் மிகவும் அசுத்தம் அடைந்திருக்க கூடும்.

மீண்டும், குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தியவர்களை காயப்படுத்தியிருக்குமா அல்லது குண்டு வெடிப்பால் நொருங்கிய யன்னல்களின் சிதறிய கண்ணாடித் துண்டுகளால் தாக்குதல் நடாத்தியவர்கள் அல்லது அவர்களது உடுப்புகள் மாசுபடுத்தப்பட்டதா என்பதற்கான எந்த ஆதாரங்களும் கோரப்படவில்லை. அடுத்தநாள் கண்டுபிடிக்கப்பட்ட கைவிடப்பட்ட துவிச்சக்கர வண்டியின் இருக்கை, மிதி கட்டைகள் அல்லது கைப்பிடிகள் (கீழே பார்க்கவும்) போன்ற பகுதிகளில் கண்ணாடித்துகள், தூசு, இரத்தக்கறை மற்றும் துப்பாக்கியிலிருந்து வெளிவந்த நுண் துணிக்கைகள் போன்ற ஏதாவது உள்ளனவா என ஒரு போதுமே பரிசோதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

**சுற்றுப்புற பகுதியைப் பாதுகாத்து தேடுதல் நடாத்தி பகுப்பாய்வு செய்தல்**

கொலைக்குப் பின்னர் சம்பவ இடத்தினை சுற்றிவளைப்பதற்கோ அல்லது சுற்றுப்புறப் பகுதியினை தேடுதல் நடாத்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. வீட்டுக்கு வெளியேயான பகுதியை முறையாக பாதுகாக்கத் தவறியமை தாக்குதல் நடத்தியவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது காலணியினை அடையாளம் காண்பதற்கான முயற்சியை சாத்தியமற்றதாக்கியது; வீட்டுக்குள்ளே விரைந்து சென்ற இருவரை விட வேறு ஒரு தாக்குதல்தாரி அல்லது தாக்குதல்தாரிகள் வீட்டுக்கு வெளியில் இருந்தார்களா என்பது

செய்யத்தவறியமை குற்றவியல் விசாரணைகளைப் பலவீனமடையச் செய்திருந்ததாக 2015 ஆம் ஆண்டு இலங்கை பற்றிய ஐநா மனித உரிமைகள் அலுவலகத்தின் விசாரணை முடிவுசெய்தது. இந்த விசாரணையானது முக்கிய ஆதாரங்கள் தவறவிடப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட சம்பவங்களையும், முக்கிய ஆதாரங்களான தோட்டாக்கள் மற்றும் ரவைக் கோதுகள் சேகரிக்கப்படவில்லை மற்றும் தொலைபேசிப் பதிவுகள் எதுவும் கோரப்படவில்லை: இலங்கை மீதான OHCHR இன் விசாரணை பற்றிய அறிக்கையைப் பார்க்கவும், A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2025, பத்தி 1236.

174 https://www.sundaytimes.lk/990411/plusm.html. இனைப் பார்க்கவும்

ஒருபோதுமே உறுதி செய்யப்படவில்லை. இதற்கிடையில், தாக்குதல் இடம்பெற்ற வேளையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையும் அந்தப் பிரதேசத்தில் பலத்த இராணுவப் பிரசன்னம் இருந்ததையும் கருத்திச் கொண்டு சம்பவ இடத்தில் இருந்து பிடிபடாமல் தப்பிச் செல்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என பல சாட்சிகள் தெரிவித்துள்ளனர். கைக்குண்டு வெடிப்பினால் உசாரடைந்து, உடனடியாக தீவிர முயற்சி மேற்கொண்டு தாக்குதல் நடாத்தியவர்களைக் காவல்க் கடமையில் நின்ற படையினர் வெற்றிகரமாகப் பிடித்திருப்பார்கள் எனப் பலரும் நம்பினார்கள்.[175]

### மரண விசாரணையின் முடிவுகளின் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கத் தவறியமை.

கொலை இடம்பெற்று அடுத்த நாள் எழுதப்பட்ட மரண விசாரணை அறிக்கை பாதிக்கப்பட்டவரின் துப்பாக்கி தோட்டாக் காயங்களது அளவினையும், ஒன்று துப்பாக்கிச் சூட்டு எச்சங்களினால் சூழப்பட்டிருந்ததையும், தோட்டா உள்ளே துழைந்து, வெளியேறிய இடங்கள் மற்றும் இதன் விளைவாக அவற்றின் பயணப் பாதைகள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் உடலில் காணப்பட்ட பெருமளவு இரத்தம் ஆகியவற்றை விபரித்தது, வெவ்வேறான அளவில் துளைத்துச் சென்ற காயங்கள் மற்றும் இரண்டு துண்டாக உடைந்த தோட்டாவிற்கு என்ன நடந்தது, அதன் ஒரு பகுதி மட்டும்தான் வெளியேறியதா போன்றவற்றுக்கான விளக்கங்கள் கோரப்படவில்லை. ஆனால் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் அல்லது ஆயுதங்கள் பற்றி எதனை உறுதிப்படுத்தியிருக்க முடியும். அத்துடன் இது போன்ற ஆயுதங்களை யார் வைத்திருக்ககூடும் என்பது பற்றி கண்டுபிடிப்பதற்கான எந்த முயற்சிகளும் இருந்தமைக்கான பதிவுகள் எதுவும் இல்லை.

### துவிச்சக்கர வண்டி பற்றி முழுமையாக விசாரிக்கத் தவறியமை

கொலை இடம்பெற்று மறுநாள் நிமலராஜனின் வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள புகையிரதப் பாதைக்கு அருகில் இருந்த புதர்நிலப் பகுதியில் ஒரு கைவிடப்பட்ட துவிச்சக்கரவண்டி உள்ளூர் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனைப் பொலிசார் பின்னர் அங்கிருந்து அகற்றிய போதிலும் அது முதலில் ஐந்து மாதங்களுக்குப் பின்னரே நீதிமன்னறப் பதிவுகளில் காணப்பட்டது. ஆரம்பத்தில் பொலிசாரால் துவிச்சக்கர வண்டிக்கும் கொலைக்கும் இடையில் எந்தத் தொடர்பையும் கண்டுபிடிக்க முடியவில்லை என பொலிசார் தெரிவித்திருந்த அதேவேளையில்[176] விசாரணை தடைப்பட்ட போது அது முக்கியத்துவம் பெற்றது போல் தெரிகிறது. இரண்டு சந்தேக நபர்கள் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும், ஒருவர் கொலை இடம்பெற்ற நேரமளவில் துவிச்சக்கர வண்டிக்குப் பொறுப்பாக இருந்த சந்தேகத்தில் ஒருவருடமாக பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போதிலும் பொலிசார் இன்னமும் இந்த துவிச்சக்கரவண்டிக்கும் குற்றத்திற்கும் இடையிலான தொடர்பினை ஒரு போதுமே தெளிவாக உறுதிசெய்யவில்லை. குறிப்பிடப்பட்டது போல், குற்றம் நடந்த இடத்தில் இருந்த துவிச்சக்கரவண்டி மாசுபடுத்தப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு துவிச்சக்கர வண்டி பற்றி முழுமையான பகுப்பாய்வு விசாரணை எப்போதாவது இருந்ததாகவும் தெரியவில்லை. மேலும், இந்த இரு சந்தேகநபர்களது (அல்லது வேறு எந்த சந்தேகநபரது) கைரேகை அடையாளங்கள் துவிச்சக்கர வண்டியில் அவதானிக்கப்பட்ட வெளிப்படையான கைரேகை அடையாளத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான முயற்சிகள் பற்றியும் நீதிமன்றப் பதிவில் விபரிக்கப்படவில்லை. மேலும், கண்ணுக்குத் தெரியாத மேலதிக கைரேகை அடையாளங்களை மீட்டெடுக்க எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாக பதிவும் இல்லை. ஆனாலும், அந்த நேரத்தில் கைரேகை அடையாளங்களை தேதியிட முடியவில்லை என்பதால் ஒரு கைரேகையை வைத்து கொலை நடந்த இரவு யார் அந்த துவிச்சக்கர வண்டியை ஓடினார்கள் என்பதை நிரூபிக்க முடியாது, இந்த ஆதாரம் தனியே இந்தக் கொலைக்கும் துவிச்சக்கர வண்டியை ஓடியவருக்கும் இடையிலான தொடர்பினை உறுதிப்படுத்தாது.

### பௌதீகப் பகுப்பாய்வுச் சான்றுகளைப் பாதுகாத்து, போதியள ஆய்வு செய்து தொடர்ந்து செயல்பட தவறியமை

மொத்தத்தில், விசாரணையின் போது தடயவில் சான்றுகளைக் கொண்ட ஒன்பது பொருட்கள் (பி1–பி9) பட்டியலிடப்பட்டன. இருந்த போதிலும் மூன்றாவது பொருள் (பி3) பல பொருட்களைக் கொண்ட குழுவாக இருந்தது. அத்துடன் குழப்பமாகவும், முரண்பட்ட முறையிலும் நீதிமன்றத்திற்கான சமர்ப்பிப்புகளில் விபரிக்கப்படுகிறது (வெளிப்படையாக தோட்டாக்களின் மூன்று சிதைந்த பகுதிகள், அல்லது முழுமையான தோட்டாக்கள் மற்றும் துண்டு துண்டான தோட்டாவின் பகுதிகள்). மூன்று துப்பாக்கி வேட்டுக்கள்

---

[175] 31 ஒக்ரோபர் 2000 இல் நீதிமன்றத்தின் முன்பாக கிராமசேவகர் அல்லது கிராம அலுவலகர், வைரமுத்து சந்திரராஜா வழங்கிய சாட்சியத்தையும் அத்துடன் 26 ஏப்ரல் 2001 இல் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ஆரியவம்ச இனால் வழங்கப்பட்டதையும் பார்க்கவும்: MCJ2023 pp73 அத்துடன் 87.

[176] அதேவேளையில் விசாரணைக்குப் பொறுப்பான யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரி நீதவானுக்கு 23 ஏப்ரல் 2001 இல் அறிவித்தார்.

தீர்க்கப்பட்டதுடன் ஒரு துப்பாக்கி தோட்டா பிளவடைந்தது. சம்பவ இடத்தில் காணப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் குறித்தும்,[177] கொலைக்கு அடுத்த நாள் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு 9 மி.மீ தோட்டாக்கள் குறித்தும் நீதிமன்றப் பதிவுகளில் குறிப்புகள் உள்ளன.[178] நிமலராஜனின் படிப்பு அறையினுள் கண்டெடுக்கப்பட்ட ஒரு தோட்டாவின் கோது மற்றும் முழுமையான தோட்டா ஆகிய அவரது மருமக்களில் ஒருவரிடம் கையளிக்கப்பட்டதாக ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்ட ஒரு வாக்குமூலத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.[179] இந்த இரண்டு பொருட்களுக்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு இருந்தா என்பதும் அவ்வாறிருந்தால் எவ்வளவு அல்லது பி3 பற்றிய விபரம் பிழையானதாக இருந்ததா, நீதிமன்றப் பதிவில் சேர்த்துக் கொண்ட போதும் கூட எந்தச் சந்தர்ப்பத்தில் பொலிசார் இந்தப் பொருட்களை மீட்டெடுக்கத் தவறினார்கள் என்பது தெளிவில்லை.

எந்தக் காரணமும் தெரிவிக்காமல், குற்றம் இடம்பெற்ற இடத்தில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பௌதீகப் பகுப்பாய்வுச் சான்றுகள் இரண்டு பகுதிகளாக கிட்டத்தட்ட ஒரு வருட இடைவேளையில் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. கொலை இடம்பெற்ற இரவின் பின்னர் கண்டெடுக்கப்பட்டு இராணுவத்தினரால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட கைக்குண்டின் நெம்பு (பி1) மற்றும் ஒரு 9 மிமீ வெற்றுத் தோட்டா (பி2) ஆகிய இரண்டு பொருட்களையும் தவிர (பி3) கொண்டுள்ள பொருட்கள் சரியாக எப்பொழுது, யாரால் எங்கே கண்டெடுக்கப்பட்டன என்பது பற்றிய பதிவுகள் எதுவும் இல்லை. கண்டெடுக்கப்பட்டவுடன் இந்த பொருட்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதை விளக்குவதற்கு எழுத்து மூலமாக அல்லது படம் மூலமாக தொடர்ச்சியான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை, அவ்வாறு செய்யாவிடில் அது எந்தப் பௌதீகப் பகுப்பாய்வின் நம்பகத்தன்மையையும், ஆதார அடிப்படையிலான அதன் தரத்தினையும் கடுமையாகப் பாதிக்கும்

பட்டியலிடப்பட்ட அனைத்து தடயவியல் ஆதாரங்களும் இறுதியாக அடிப்படை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் இந்தப் பொருட்கள் கைரேகை அடையாள சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக (டி என் ஏ கூட இல்லை) தெரியவில்லை, தாக்குதல் நடாத்தியவரால் ஒவ்வொன்றும் கையாளப்படப்பட்டிருக்கும் என்பதால் இந்த கைரேகை அடையாளங்கள், குறிப்பிட்ட பொருட்கள் தனிப்பட்ட ஆயுதங்கள் அல்லது தனிப்பட்ட சந்தேகநபர்களுடன் தொடர்புபட்டிருக்கலாம். பௌதீகப் பகுப்பாய்வின்போது பெற்றுக் கொள்ளப்பட்ட கைக்குண்டு லிவர் எந்த நாட்டினைச் சேர்ந்தது போன்ற தகவல்கள் குறிப்பிட்ட பொருட்கள் முன்னர் இராணுவத்தின் அல்லது ஈ.பி.டி.பி. இன் அல்லது இன்னுமொரு குழுவின் உடைமையாக இருந்ததா என்பதனை மதிப்பிட எப்போதாவது பயன்படுத்தப்பட்டதா என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை.

தோட்டாக்களில் ஒன்று துண்டு துண்டாக உடைவதற்கு என்ன காரணம் என்பது குறித்தோ அல்லது இது துப்பாக்கியில் இருந்து வெளியேறுகையில் அல்லது தாக்கத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்பது குறித்து எந்த விளக்கமும் பதிவு செய்யப்படவில்லை அல்லது கோரப்படவில்லை, இது பாவிக்கப்பட்ட ஆயுதத்தினை அடையாளங்காணவும் இதனால் பெரும்பாலும் அதன் முன்னைய உரிமையாளரை அடையாளங்காணவும் உதவியிருக்கலாம். துப்பாக்கியை சுட்ட துப்பாக்கிதாரி மீது விடப்பட்ட துப்பாக்கி வெடிப்புப் சேர்மத்தின் அளவு மீது அது கொண்டிருக்ககூடிய தாக்கம் என்ன, இந்த தோட்டா வெளிப்படையாகவே இரண்டாவதாக சுடப்பட்ட சூடு என்பதால் சம்பவ இடத்தில் சிதறிய அல்லது சிதறாத தோட்டக்கள் இருக்கின்றனவோ இல்லையா இது குறைந்தது இரண்டு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கிறதா என்பன குறைபாடுள்ள தோட்டா எழுப்பும் ஏனைய கேள்விகளாக உள்ளன.

பின்னர் இந்த விசாரணையில், கொலை இடம்பெற்ற நேரத்தில் ஈ.பி.டி.பி. வசமிருந்த ஆயுதங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. நீதவான் வழங்கிய தேடுதல் உத்தரவைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 2002 இல் ஒரு 9மிமீ கைத்துப்பாக்கி (பி4) ஆறு உயிருள்ள தோட்டாக்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. இன் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது.[180] பின்னர், ஒரு தடவை ஈ.பி.டி.பி. வசம் இருந்து யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட 9 மிமீ கைத்துப்பாக்கிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவை பரிசோதிக்கப்பட்டு சம்பவ இடத்தில் ஒரு சுடப்பட்டு கண்டெடுக்கப்பட்ட தோட்டா (பி2) என நம்பப்படவில்லை. எவ்வாறாயினும், தடயவியல் பகுப்பாய்வில் சம்பவ இடத்தில்

[177] 22 செப்ரெம்பர் 2022 இல் நீதவானுக்கான இன்ஸ்பெக்டர் டி சில்வாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது அத்துடன் மீண்டும் 25 யூலை 2003 இல் : MCJ2023 pp158 மற்றும் 201.

[178] கொலை இடம்பெற்று அடுத்தநாள் பொலிசார் நீதவானுக்கு அறிவித்ததாக நீதிமன்றப் பதிவுகள் கூறுகின்றன: ‘பரிசோதனையின் பின்னர் மாத்திரமே; அவர் இரண்டு 9 மிமீ தோட்டாக்களை அவர் எடுத்திருந்ததாக அவர் எனக்கு காட்டியிருந்தார்’: MCJ2023 p54.

[179] கொலை இடம்பெற்று ஆறு மாதங்களின் பின்னர் அயலவர் ஒருவரால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தில் இது வெளிப்பட்டது.: MCJ2023 p268. (அவரது மருமகன் இந்த ஆதாரத்தினை ஒரு போதும் பெற்றுக் கொள்ளவில்லை என நிமலராஜன் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.)

[180] 1999 இல் யாழ்ப் பாதுகாப்பு படைகளின் தளபதியால் இவை வழங்கப்பட்டதாக ஒரு ஈபிடிபி அதிகாரி வாக்குமூலம் வழங்கினார். அத்துடன் எதிர்த்தரப்பு வழக்கறிஞர் அனைத்து மாகாணசபைத் தலைவர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்கப்பட்ட போது அந்த நேரத்தில் இதுவும் வழங்கப்பட்டதாக தெளிவுபடுத்தினார்: MCJ2023 p363.

கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கியால் சுடும் போது வெளிவருவனவற்றின் எச்சங்கள் எடுக்கப்பட்ட கைத்துப்பாக்கிகள் ( பி4–பி9) எவற்றில் இருந்தும் சுடப்பட்டிருக்கவில்லை என முடிவு செய்தது. அவை உண்மையில் ஒரு சிறிய ரக இயந்திரத் துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அது முடிவு செய்தது.[181] அத்துடன் சிறிய ரக இயந்திரத் துப்பாக்கியை கண்டு பிடிப்பதற்கான வெளிப்படையான எந்த முயற்சிகளையும் இன்னும் இந்த விசாரணை மேற்கொள்ளவில்லை, குற்றம் நடந்த இடம் மற்றும் பாதிக்கப்பட்டவரின் காயங்கள் தொடர்பில் இது போன்ற ஒரு ஆயுதத்தினை பாவிப்பதால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிக் கருத்தில் எடுத்திருப்பதாகவும் தெரியவில்லை.

### கொலைக்கு முன்னதாக விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல்கள் பற்றிய வாக்குமூலங்களை அல்லது தொடர்புபட்ட தொலைபேசி அழைப்புக்களை பின்தொடர தவறியமை

நிமலராஜனின் பல குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பலரும் அவரது கொலைக்கு முன்னர் ஈ.பி.டி.பி. இனரால் அவருக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல்கள் உட்பட மிரட்டல்களை பதிவுசெய்யும் வாக்குமூலங்களை வழங்கியிருந்தார்கள்.[182] இவை மிரட்டல் தொலைபேசி அழைப்புக்களையும் உள்ளடக்குகின்றன. இந்த இலக்கங்களை தேடிக்கண்டு பிடிப்பது சாத்தியமற்றது என இலங்கை ரெலிகொம் இன் முகாமையாளரால் நிமலராஜனுக்கு சொல்லப்பட்டது. எவ்வாறாயினும், அவரது நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளும் போது, தொலைபேசி அழைப்புக்கள் இடைமறித்துக் கேட்கப்பட கூடுதலான வாய்ப்பு உள்ளது. அத்துடன் இது சோதனை செய்து பார்க்கப்பட்டிருக்க வேண்டும். அவரே தனது அழைப்புக்களை எப்போதாவது பதிவு செய்தாரா என்பதனையும் இந்த மிரட்டல் அழைப்புக்களை மேற்கொண்டவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க கூடிய தகவல்கள் ஏதாவது இருந்தனவா என்பதைக் கண்டுபிடிக்க பொலிசார் முயற்சி செய்திருக்க வேண்டும். அவருக்கு எதிரான மிரட்டல்கள் ஈ.பி.டி.பி. இனரிடமிருந்து வந்ததாக சொல்லப்பட்டதால் ஈ.பி.டி.பி. இனரின் மூத்த உறுப்பிர்களை சந்தேகநபர்களாக விசாரித்திருக்க வேண்டும். ஆனால் ஆச்சரியம் தரும் வகையில், உயர் பதவியிலுள்ள உறுப்பினர்கள் ஒரு போதுமே விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

### கொலை இடம்பெற்ற நேரத்தில் பெறப்பட்ட ஒரு தொலைபேசி அழைப்பினை விசாரிக்கத் தவறியது

தாக்குதல்தாரிகள் அவரைக் கொலை செய்வதற்காக வீட்டிற்குள் நுழைந்த போது அவர் ஒரு தொலைபேசி அழைப்பில் இருந்தார் என நிமலராஜனின் குடும்பத்தினர் தெரிவித்தனர். இந்த அழைப்பின் நேரத்தினை வைத்துப் பார்க்கையில் அது தாக்குதலுடன் தொடர்புபட்டதாக இருக்க சாத்தியம் உள்ளது. அதாவது அவர் வீட்டிலுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி, அவரை ஒரே இடத்தில் வைத்திருந்து அல்லது அவரது கவனத்தை திசை திருப்பி அல்லது தாக்குதல் நடாத்தியவர்கள் அவசரமாக உள்ளே வந்த போது அவரை உடனடியாகக் காணக்கூடியவாறு அவரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருப்பதையும் நோக்காக கொண்டிருந்தது. அந்த அழைப்பினை கண்டுபிடிப்பதற்கு அல்லது அழைப்பினை மேற்கொண்டவரை அடையாளங்காண்பதற்கான முயற்சி மேற்கொண்டதற்கான பதிவுகள் எதுவும் இல்லை.

### அடையாளங்காணப்பட்ட சந்தேக நபர்களை முழுமையாக விசாரிக்கத் தவறியமை

விசாரணையின் போது பல்வேறு சந்தேகநபர்கள் முறையாக அடையாளங்காணப்பட்ட போதும் அதில் எவருமே இறுதியாக எந்தக் குற்றத்துடனும் குற்றஞ்சுமத்தப்படவில்லை. அவர்கள் இந்தக் கொலையில் என்ன பங்கினை வகித்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றார்கள் என்பது குறித்து நீதிமன்றப் பதிவுகளில் அடிக்கடி தெளிவானதாக காணப்படவில்லை, சில சமயங்களில் முற்றிலும் தெளிவற்றதாக காணப்படுகின்றன. உதாரணமாக இது நெப்போலியன் பற்றிய உண்மை, மேலே விபரிக்கப்பட்டது போல் நெப்போலியன் அடையாளங்காணப்பட்டு நீதிபதியினால் அழைப்பாணை விடுக்கப்பட்டது. ஆனால் ஒருபோதுமே தீவிரமான நடவடிக்கைகள் தொடரப்படவில்லை.[183] அடையாளங்காணப்பட்ட வேறு ஐந்து சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை செய்யப்படும் முன்னர், காவலில் எடுக்கப்பட்டு இரண்டு தொடக்கம் பன்னிரெண்டு மாதங்கள் வரைத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தாங்களாக வந்து

[181] அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அறிக்கை, 25 ஏப்ரல் 2003: MCJ2023 p326.

[182] கொலை இடம்பெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் ஒரு ஆயுத அமைப்பின் உறுப்பினர் என தன்னைத் தானே விபரித்த ஒருவரால் தான் அச்சுறுத்தப்பட்டதாகவும் அத்துடன் அத்துடன் தனக்கு வெள்ளை நிற ஆடையில் இருப்பதற்கான நேரம் வந்துவிட்டது எனவும் ஏனெனில் அவளது கணவர் அவரது அமைப்புக்கு எதிராக அறிக்கைகள் வழங்குவதாகவும் கூறியிருந்ததாக நிமலராஜனின் மனைவி பொலிசாருக்கு தெரிவித்தார். இலங்கையில் வெள்ளை நிற ஆடை என்பது இறுதிச் சடங்குடன் தொடர்புபட்டது.

[183] வழக்கு விசாரணை 26 நவம்பர் 2001: MCJ2023 p104.

நீதிமன்றத்திற்கு வாக்குமூலத்தினை வழங்க விரும்புவதாக இன்பெக்ஸ்டர் டி சில்வா தெரிவித்தார். எவ்வாறாயினும் சந்தேக நபர்கள் எவருமே கொலையில் தாம் தொடர்புபட்டிருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது நீதிமன்றப் பதிவுகளில் இருந்து உறுதியாகின்றது.

**தாம் அடிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாக சில சந்தேகநபர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் சாட்டுக்களை பின்தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும் அல்லது அவர்களது காயங்களை சாட்சியமாக மதிப்பீடு செய்யத் தவறியமை.**

2015 இல் மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் பெப்ரவரி 2002 இலிருந்தான காலப் பகுதியை உள்ளடக்கும் இந்த இலங்கை மீதான விசாரணை நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து வழக்கமாக பதிவுசெய்யப்படும் சம்பவங்களுடன் இலங்கையில் குற்றவியல் நீதி அமைப்பில் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்துதல் என்பன வழமையானவை என கண்டுபிடித்துள்ளது.[184] தடுத்து வைக்கப்பட்ட சந்தேகநபர்களில் குறைந்தது ஜெகன் [185] , முரளி[186] மற்றும் அற்புதன்[187] ஆகிய மூவரும் இரண்டு சந்தர்ப்பங்களில் பொலிசாரின் கைகளில் வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களில் விளைவாக தாம் போலியான ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பமிட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் பின்னர் அதனைப் பொலிசார் பின்வாங்கினார்கள் என்றும், இந்த இரண்டு வாக்குமூலங்களும் சிங்களத்தில் இருந்தன, அதனை தொடர்புபட்ட சந்தேகநபர்கள் விளங்கிக் கொள்ளவில்லை என முறையிட்டார்கள். எவ்வாறாயினும், இது விசாரணையின் போது எந்தளவிற்கு அல்லது கருத்தில் எடுக்கப்பட்டதா என்பது கூடத் தெளிவில்லை. சந்தேக நபர்கள் ஒரு சுயாதீன வைத்தியரால் மருத்துவ ரீதியாகப் பரிசோதிக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டார். அத்துடன் சிலர் அடிகாயங்களுக்கு ஒத்த காயங்களைக் கொண்டிருக்க காணப்பட்டனர். இது வெளிப்படையாகவே அவர்கள் ஒப்புக்கொண்டவற்றின் நம்பகத் தன்மை குறித்தும் இதனால் விசாரணையின் உண்மைத் தன்மை குறித்தும் கேள்விகளை எழுப்பியிருக்க வேண்டும். சாட்சியங்கள் இந்தக் கொலையுடன் தொடர்புபட்டிருப்பதாக அரசின் அங்கத்துவ அமைப்புகளை நோக்கி காட்டுவது குறித்து குறிப்பிட்ட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பினும், இந்த தாக்கங்கள் எவ்வாறு அல்லது கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதா என்பது மீண்டும் தெளிவில்லை. ஏப்ரல் 2002 இல் ஜெகன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது 6 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு எரிகாயத் தழும்பு உட்பட பழைய காயத்தழும்புகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. நிமலராஜன் கொலை இடம்பெற்ற நேரத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பிற்கு அருகில் இருந்தமையால் ஏற்பட்டிருக்ககூடிய காயத்துடன் ஒத்துப்போகக்கூடியவாறு இருந்திருக்கலாமா என்பதற்கான எந்தவித மதிப்பீடுகளும் செய்யப்படவில்லை.

[184] இலங்கை மீதான OHCHR இன் விசாரணை பற்றிய அறிக்கை, A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2015, பத்தி 533.

[185] 28 ஏப்ரல் 2001 இல் எடுக்கப்பட்ட வாக்குமூலம்: MCJ2023 p271.

[186] 2 ஓகஸ்ட் 2002 இல் முரளி என்று அறியப்பட்ட சந்தேகநபர் டேவிட் மைக்கல் கொலின் நீதிமன்றத்தில் கதைத்தல்: MCJ2023 pp139-144.

[187] யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்திற்கு சந்தேக நபரின் வழக்கறிஞரின் சமர்ப்பிப்பு,23 செப்ரெம்பர் 2003: MCJ2023 pp206-207, அத்துடன் நீதவானுக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம், 30 ஒக்ரோபர் 2003: MCJ2023 p221.

# 5. விசாரணை செய்ய தவறியமை: விளைவுகள்

### 5.1. சில சந்தேகநபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஏனைய குற்றங்கள்

நிமலராஜனின் விசாரணையில் பெயரிடப்பட்ட பல சந்தேகநபர்கள் அவரது கொலைக்கு முன்னரோ அல்லது பின்னரோ வேறு மோசமான குற்றங்களைப் புரிந்ததாக சந்தேகிக்கப்பட்டனர் அத்துடன் இரண்டு வழக்குகளில் இறுதியாகக் குற்றங்காணப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

**1998:** சந்தேகநபர்களான நெப்போலியன் மற்றும் முரளி ஆகியோர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் கடத்தல் மற்றும் சித்திரவதையில் சம்மந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு நிமலராஜன் கொல்லப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டனர்.[188] அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

**28 நவம்பர் 2001:** நாரந்தனைக் கொலைகளில் இரண்டு தமிழ் அரசியல் ஆர்வலர்கள் ஈ.பி.டி.பி. இனரால் கொல்லப்பட்டார்கள் அத்துடன் 4 தேர்தல் வேட்பாளர்கள் உட்பட வேறு 21 பேர் காயமடைந்தார்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் ஒருவர் சந்தேகநபர் நெப்போலியன் ஆகும். இன்னுமொரு ஈ.பி.டி.பி. உறுப்பினரான மதனராஜா உடன் அவருக்கு நாரந்தனைச் சம்பவத்தில் அவருடைய பங்கிற்காக ஆஜராகாத நிலையில் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டது, வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற போது கூட அவர்கள் தனது கட்சியின் உறுப்பினர்களாக இருந்ததாக ஈ.பி.டி.பி. இன் தலைவர் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.[189]

### ஜெகன், கிருபா என்றழைக்கப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் – பாலியல் வன்முறைகள்

**2004:** சந்தேகநபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஊர்காவற்துறையில் 12 வயதுப் பாடசாலை மாணவியை பாடசாலையில் இருந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் அவளை பற்றைக்காட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் வன்முறையில் ஈடுபட்டார் என மார்ச் 26 இல் ஊடக அறிக்கைகள் தெரிவித்தன.[190]

**2012:** 'கந்தசாமி ஜெகதீஸ்வரன் நெடுந்தீவில் ஒரு இளம் பெண்ணை அச்சுறுத்திப் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தும் ஒரு முயற்சியாக துப்பாக்கி முனையில் ("பிளாஸ்டிக் பிஸ்டல்") வைத்திருந்ததாக' கொலை இடம்பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் மார்ச்சில் (கீழே) ஊடக அறிக்கைகள் தெரிவித்தன.[191] 'சந்தேகநபர் லக்ஸ்சினி மீதான தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வேறு இரண்டு இளம்பெண்களைத் துஸ்பிரயோகம் செய்ய முயற்சித்திருந்ததாக கிராமத்தவர்கள் கூறுவதாக' செய்தி தெரிவிக்கின்றது. அவர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தினமும் கையொப்பமிடுமாறு கேட்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

**2012:** 03 மார்ச் 2012 இல் கந்தசாமி ஜெகதீஸ்வரன் காரைதீவில் லக்ஸ்சுமி ஜேசுராஜா என்ற 12 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்தார், இந்தச் சிறுமி மீன் வாங்குவதற்காக சந்தைக்குச் சென்றிருந்ததுடன் அவர் ஒரு போதும் வீட்டுக்குத் திரும்பவில்லை. அவளுடைய குடும்பத்தினரும் அவர்களுடைய நண்பர்களும் அவளைத் தேடியதுடன் பொலிஸ்நிலையத்தில் இருந்தார்கள் அப்போது ஒரு பெண் ஒரு கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு காட்டுக்குள் விறகுசேகரித்துக் கொண்டிருந்த போது சிறுமியின் உடலைப் பார்த்ததாக முறைப்பாடு செய்ய வந்தார். அவர்கள் சம்பவ இடத்திற்குச் சென்ற போது குடுபத்தினர் லக்ஸ்சினியின் துவிச்சக்கர வண்டியையும், பின்னர் அவளது தலையிலும் முகத்தின் ஒரு பக்கத்தில் இரத்தத்தோடு அவளது உடலையும் கண்டார்கள். அவளது உள்ளாடை அவளது உடலுக்கு அருகில் காணப்பட்டது அத்துடன் அவள் பெண்ணுறுப்பு ஊடாகவும் மலவாசலுக்கு ஊடாகவும் பாலியல் வன்புணர்வுக்கு

---

[188] https://www.tamilnet.com/art.html?catid=13&artid=2296. 12 டிசெம்பர் 2005, முரளி LTTE இனரால் கொல்லப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. பார்க்க: https://www.satp.org/other-data/srilanka-na-easternprovince/shot-dead_2005

[189] https://tamildiplomat.com/naranthanai-convicts-still-members-epdp-arrested-bring-challenges-douglas-devananda/

[190] https://www.tamilnet.com/art.html?catid=13&artid=11586
https://www.tamilnet.com/art.html?catid=13&artid=11629

[191] https://www.sundaytimes.lk/120401/News/nws_045.html: ஆயுதம் தாங்கிய போராளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுவது குறித்து கிராமத்தவர்கள் அச்சமடைந்தார்கள், 1 ஏப்ரல் 2012.

உட்பட்டதாகவும் அவளது கைகளில் கடித்த அடையாளங்கள் காணப்பட்டதாகவும் பிரேத பரிசோதனை பின்னர் உறுதிப்படுத்தியது.[192] நேரடி சாட்சிகள் இறந்த உடலுக்கு அருகில் இரத்தத்துடன் ஒரு கல்லையும் அத்துடன் ஒரு வெறும் மதுபானப் போத்தல், உள்ளூர் சிகரெட்டுகள் மற்றும் கொஞ்சப் பணம் ஆகியவற்றைக் கண்டார்கள்.[193] தமது பிரதேசத்தில் மது விற்பனை செய்வதற்கு எவருக்கும் அனுமதிப் பத்திரம் இல்லை என்பது உள்ளூர் மக்களுக்கு தெரியும் எனவே இது சமூகத்திலுள்ள ஒரு பெண்ணால் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டது அத்துடன் அந்தன்று மதுபானத்தை ஒரு ஈ.பி.டி.பி. உறுப்பினர் தன்னிடம் இருந்து வாங்கியிருந்ததை அவர் உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், குடும்பத்தினரும் அவர்களது நண்பர்களும் உடனடியாகச் செயற்பட்டு பொலிசாரை நம்பியிருக்காது தமது சொந்த விசாரணையை மேற்கொண்டார்கள். அவர்கள் சந்தையில் இருந்து காட்டுப் பகுதி வரை லக்ஸ்சுமி சென்றிருக்ககூடிய வழியைப் பின்தொடர்ந்து சென்று, வீட்டுக் கதவுகளைத் தட்டி ஆட்களை அவர்களை எதையும் பார்த்திருக்கிறார்களா என்று கேட்டார்கள். ஈ.பி.டி.பி. இல் இருப்பதாக அறியப்பட்ட நபர் ஒருவர் லக்ஸ்சினியைப் பின்தொடர்ந்து செல்வதைத் தான் பார்த்ததாகப் பெண் ஒருவர் கூறினார். அந்த நபர் எங்கு வசித்தார் என்று தெரிந்த உள்ளூர் மக்கள் அவனுடைய வீட்டுக்கு நேரடியாகச் சென்றதுடன் தனது மனைவிக்கு அருகில் இரத்தம் தோய்ந்த சறத்துடன் நிலத்தில் இருக்க கண்டனர். அவர் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கந்தசாமி ஜெகதீஸ்வரன் என அடையாளங்காணப்பட்டார். யாரோ சிலர் பொலிசாருக்கு தொலைபேசியில் அறிவித்தார்கள், பொலிசார் வந்து கந்தசாமி ஜெகதீஸ்வரனை தமது வாகனத்தில் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள். அதன் பின்னர் பொலிஸ்நிலையத்திற்கு ஆர்ப்பாட்டம் செய்யச் சென்ற உள்ளூர் மக்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம் செய்ததுடன் அடித்தார்கள். அடுத்து வந்த நாட்களில், பொலிஸ்நிலையத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்ததுடன் பின்னர் லக்ஸ்சினியின் உடல் வைக்கப்பட்டிருந்த வைத்தியசாலைக்கு நகர்ந்து சென்றது அதேவேளையில் கடைகள் மற்றும் பேருந்துகள் ஒற்றுமையாக இயங்குவதை நிறுத்திக் கொண்டன. மரிச டி சில்வா அந்த நேரத்தில் கிரவுண்ட்வியூஸ் (Groundviews) இல் எழுதுகையில் இந்தளவிற்கு சவாலினை அதிகாரிகளுக்கு காட்டுவது நெடுந்தீவு மக்களுக்கு எவ்வளவு வழமைக்குமாறானதாக இருந்தது எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

'வெளி அரசியல் சக்திகள் இருந்தாலேயொழிய, இந்த சம்பவம் இடம்பெற்று கிட்டத்தட்ட ஒரு மாதகாலத்தில் ஏன் பொலிசாரால் வெறும் நான்கு நேரடிச் சாட்சிகளின் வாக்குமூலத்தினைப் பெறமுடியவில்லை என்ற வெளிப்படையான கேள்வி எழுவதாக' நேரடிச் சாட்சிகளின் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்வதில் பொலிசாரால் ஏற்பட்ட தாமதம் பற்றிக் கருத்து தெரிவிக்கையில் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்: ' பாலியல் வன்முறைக்கு முயற்சி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் பெரிய தண்டனைகள் இல்லாமல் மீண்டும் சமூகத்துக்குள் அனுமதிக்கப்பட்டமை அரசியல் செல்வாக்கினை குற்றஞ்சாட்டப்பட்டவர் பயன்படுத்துவதையே தெரிவிக்கின்றது. அதற்குப் பதிலாக, அவர் சரியான செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் லக்ஸ்சினி இன்று உயிருடம் இருந்திருக்ககூடும்'[194]

கந்தசாமி ஜெகதீஸ்வரன் நிமலராஜன் கொலையில் தொடர்புபட்டுள்ளார் என்ற உண்மை இந்த ஊடக அறிக்கை பின்வருமாறு கூறுவதால் உள்ளூர் மக்களுக்கு நன்றாகத் தெரியும்:

***ஜெகதீஸ்வரன் ஈ.பி.டி.பி. இன் முன்னாள் பொறுப்பாளர் எனவும், யாழ்ப்பாணத்தில் தளமாகக் கொண்ட ஊடகவியலாளரான மயில்வாகனம் நிமலராஜனின் கொலையின் சந்தேகநபருமான நெப்போலியனின் வலது கையாள் என கிராமத்து மக்கள் தெரிவித்தார்கள். மேலே கூறப்பட்ட இரண்டு சம்பவங்களை விட, இந்தச் சம்பவத்திற்கு வெறும் இரண்டு நாட்களுக்கு முன்னர் வேறு இரண்டு சிறுமிகளைத் துஸ்பிரயோகம் செய்ய முயற்சித்திருந்ததாகவும் கிராமத்தவர்கள் கூறினார்கள். குற்றவாளிக்கு எதிராகப் பல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கூட பொலிசார் நடவடிக்கை எடுக்காததையிட்டு கிராமத்தவர்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள், அத்துடன் சில அரசியல் செல்வாக்கின் விளைவாகத்தான் அவர் பொலிசாரால் விடுவிக்கப்பட்டார் என்றும் இதனால் தான் இந்த கொடூர குற்றதினை இவ்வாறு செய்வதற்கு அவருக்கு உதவியாக இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.***[195]

[192] 12 வயது சிறுமியை பாலியல் வன்முறை செய்து கொலை செய்தமைக்காக முன்னாள் ஈபிடிபி உறுப்பினருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது., 10 ஏப்பிரல்2017, தமிழ் காடியன், https://www.tamilguardian.com/content/former-epdp-member-sentenced-death-rape-and-murder-12-year-old

[193] https://www.sundaytimes.lk/120401/News/nws_045.html

[194] 13 வயது சிறுமியின் பாலியல் வன்புணர்வு அத்துடன் யாழ்ப்பாணத்தில் துணை ஆயுதக்குழுக்களின் பிரசன்னம் , 4 பெப் 2012, மாசிசா டி சில்வா . https://groundviews.org/2012/04/02/the-rape-of-a-13-year-old-and-paramilitary-presence-in-jaffna/

[195] https://groundviews.org/2012/04/02/the-rape-of-a-13-year-old-and-paramilitary-presence-in-jaffna/

பாதிக்கப்பட்டவரின் உடலில் காணப்பட்ட விந்தணுவின் மரபணுச் சோதனைகளில் அது அவரின் மரபணுவுடன் உடன் பொருந்தியதன் அடிப்படையில் ஏப்பிரல் 2017 இல் கந்தசாமி ஜெகதீஸ்வரன் கொலை மற்றும் பாலியல் வன்முறையில் இறுதியாக குற்றவாளி என அறிவிக்கப்பட்டார்.

நீதிமன்ற நடவடிக்கை இடம்பெற்ற வேளையில், கட்சியின் முன்னாள் யாழ்ப்பாணப் பொறுப்பாளரான கந்தசாமி கமலேந்திரன் (அவரே பின்னர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்) உட்பட ஈ.பி.டி.பி. கட்சியின் அதிகாரிகள் மற்றும் பொலிசார் (CID) லக்ஸ்சினியின் குடும்பத்தினரிடம் திரும்பத் திரும்பச் சென்று அவர்களை வழக்கினைக் கைவிடுமாறு வற்புறுத்தினார்கள்.[196]

## 5.2. நிமலராஜன் வழக்கு: உலகளாவிய அதிகார வரம்பின் அடிப்படையில் இலங்கைக்கு வெளியே விசாரணைகள்

இலங்கையில் நிமலராஜனின் கொலை பற்றிய விசாரணையில் எவரும் அவரது கொலையுடன் குற்றஞ்சாட்டப்படாத போதிலும் சிவில் யுத்தத்தின் போது இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் குற்றவியல் வழக்குகளைத் தொடரவும், தடை விதிகளைப் பாவிக்கவும் வேறு இடங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2021 இல் மனித உரிமைகளுக்கான ஐநாவின் உயர் ஆணையாளர் கடந்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களை இலங்கை அரசானது நிவர்த்தி செய்ய தவறியமையானது மனித உரிமைகள் மீறல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதற்கான ஆபத்தினைக் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்திருந்ததாக எச்சரித்ததுடன் உலகளாவிய அதிகார எல்லைக் கோட்பாட்டின் கீழ் வழக்குகளைக் கொண்டுவருவது பற்றி கருத்தில்க் கொள்ளுமாறு அவர் மூன்றாம் அரசுகளுக்கு அழைப்பு விடுத்தார்.[197]

இந்தக் கோட்பாட்டுக்கு இணங்க, சர்வதேச சட்டத்தின் கீழ் மனித குலத்திற்கு எதிரான் குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனஅழிப்பு மற்றும் சித்திரவதை போன்ற குறிப்பிட்ட மோசமான குற்றங்களுடன் சந்தேகிக்கபட்ட நபர்களை அந்தக் குற்றம் எங்கு புரியப்பட்டது என்பதை அல்லது அந்தக் குற்றத்திற்கும் அவர்களுடைய நாட்டுக்கும் இடையிலான எந்தத் தொடர்பையும் பொருட்படுத்தாமல் ஒரு அரசு வழக்குத் தொடரலாம்.[198] உலகளாவிய அதிகார எல்லை பற்றிய கோட்பாடானது சில குற்றங்களை மிகவும் கொடுரமானவை எனவும் ஒவ்வொரு அரசும் நீதியை நிலைநாட்டுவதில் ஆர்வமாக உள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்கிறது:குற்றங்கள் எங்கு இடம்பெற்றதோ அந்த அரசிற்கு மட்டும் இது ஒரு பிரச்சினை இல்லை. [199]

உலகளாவிய அதிகார எல்லையை அடிப்படையாக்க கொண்ட குற்றவியல் முறைப்பாடுகள் கடந்த வருடங்களில் ITJP இனாலும் வேறு ஆட்களாலும் அவுஸ்ரேலியா, பிறேசில், சிலி, கொலம்கியா, ஐக்கிய அமரிக்கா, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் சிங்கப்பூர் உட்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான நாடுகளில் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மற்றும் பின்னர் வெளிநாடுகளில் காணப்பட்ட இலங்கையர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு இராணுவத்தளபதி அவரது முன்னைய பொறுப்பு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து ஒரு இராஜதந்திரி பதவியில் இருந்து திரும்பப் பெறப்பட்டார். [200]

எவ்வாறாயினும், பிரித்தானியாவில் மாத்திரம் தொடர்ச்சியான குற்றவியல் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது, இதன் போது இலங்கையில் அரசியல் கொலைகள் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.2017 இல், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும் பிரித்தானிய மெற்றோ பொலிற்ரன் (Metropolitan) பொலிசினுடைய பயங்கரவாத தடுப்பு பிரிவின் கீழ் உள்ள ஒரு விசேட பிரிவுக்கு ITJP மற்றும் றெட்றெஸ் (Redress) ஒரு பரிந்துரையை மேற்கொண்டது. பிரித்தானியாவில் குறிப்பாக நிமலராஜன் கொலை தொடர்பில் முதலாவது கைது மேற்கொள்ளப்பட்டது. 25 பெப்ரவரி 2022 இல் மெட்ரோபொலிட்டன் பொலிசாரின் போர்க்குற்ற பிரிவு அணி 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் சிவில் போருடன் தொடர்புபட்ட போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து 'முன்னேற்றமான விசாரணைகளை' மேற்கொண்ட பின்னர்

[196] ITJP இரகசிய வாக்குமூலம் W300.

[197] இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை, ஐ நா ஆவணம் A/HRC/46/20, 27 January 2021, பத்தி 61(c).

[198] தமது அதிகார வரம்பினைப் பயன்படுத்துவதற்கு முன்னர், பல அரசுகளுக்கு வதிவிடம் அல்லது சந்தேக நபர் தமது நிலப்பரபிற்குள் இருக்க வேண்டும் போன்ற சில தொடர்புகள் தேவைப்படுகின்றன.

[199] Redress, உலகளாவிய அதிகார வரம்பு: https://redress.org/universal-jurisdiction/. பார்க்கவும்

[200] இந்த முயற்சிகள் சிலவற்றின் தொகுப்பிற்கு , உலகளாவிய அதிகார வரம்பு இனைப் பார்க்கவும் – இலங்கைக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான மிகவும் கடினமான பாதை', Andreas Schuller, பாதுகாப்பு மாத்திரம் , 24 பெப்ரவரி 2021, https://www.justsecurity.org/74941/universal-jurisdiction-the-most-difficult-path-to-achieve-justice-for-sri-lanka/ இல்க் கிடைக்கும்

நிமலராஜனின் கொலைக்காக இங்கிலாந்து நோத்கம்டன்சியர் (Northamptonshire) இல் பெயர் குறிப்பிடப்படாத 48 வயது நபர் ஒருவரின் கைது பற்றி அறிவித்தது.[201] தமது விசாரணையைத் தொடர்வதாகவும் அத்துடன் விசாரணைக்கு உதவக்கூடிய வகையில் இந்தச் சம்பவம் பற்றி நேரடித் தகவல்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறி போர்க்குற்ற அணி ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தது.[202] தமது வழமையான நடைமுறைக்கிணங்க மெற்றோபொலிற்ரன் பொலிசார் சந்தேக நபரை பெயர் குறிப்பிட்டிருக்காத அதேவேளையில் இந்த நபர் இலங்கையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சந்தேகநபராக அடையாளங்காணப்பட்ட இவர் இலங்கையை விட்டு பிரித்தானியாவிற்கு சென்றவர் என இலங்கையின் உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த நபர் நெப்போலியன் என அறியப்பட்ட செபஸ்ரியான் றமேஸ் ஆவார், இவரை இந்த அறிக்கை மேலே விபரிப்பது போல் 2002 இல் நிமலராஜன் கொலை தொடர்பில் கைது செய்து நீதி மன்றத்தின் முன் நிறுத்துமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அதன்பின்னர், 21 நவம்பர் 2023 இல், மெற்றோபொலிற்ரன் பொலிசார் தெற்கு இலண்டனில் மீண்டும் பெயர் குறிப்பிடப்படாத வயது அறுபதிகளில் உள்ள இலங்கையர் ஒருவரைக் கைது செய்ததாக அறிவித்தார்கள்.[203] இந்த முறை, 2001 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இரண்டு பேர் கொல்லப்பட்டு ஏனையோர் படுகாயமடைந்த யாழ்ப்பாணம் நாரந்தனையில் ஒரு அரசியல் பேரணியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுடன் தொடர்புபட்டதாக இந்த கைது இருந்ததாகச் சொல்லப்பட்டது. இந்த தாக்குதல் இடம்பெற்று பதினைந்து வருடங்களுக்குப் பின்னர், நான்கு சந்தேகநபர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு இலங்கையில் வழக்கு விசாரணை நடைபெற்றது அத்துடன் டிசெம்பர் 2016 இல் யாழ்ப்பணம் உயர் நீதி மன்றம் அவர்களில் மூன்று பேரைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தது. தீர்ப்பு வழங்குகையில் நீதிபதி அந்த மூவருக்கும் மரணதண்டனை விதித்ததுடன் நீண்ட கால சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்தார்.[204] தண்டனை பெற்றவர்களில் ஒருவர் அதே நபரான நெப்போலியன் என அறியப்பட்ட செபஸ்ரியான் றமேஸ் ஆகும், இவர் நிமலராஜனின் விசாரணையில் ஒரு சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நாட்டைவிட்டு சென்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. நாரந்தனைச் சம்பவம் தொடர்பில் குற்றவியல் வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற வேளையில் நெப்போலியன் இலங்கையில் இருக்கவில்லை அத்துடன் அவரும் இன்னுமொரு சந்தேகநபரான, ஈ.பி.டி.பி. இன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா மதனராஜா ஆகியோர் நீதிமன்றத்தில் சமூகமளிகாத நிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது (இலங்கையில் நீதிமன்றத்தில் சமூகமளிக்காத நிலையிலும் வழக்குகள் இடம்பெற அனுமதிக்கப்படுகினறன).[205]இருவரும் வெளிநாட்டில் இருப்பதாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டமையால், தண்டனை வழங்கும் போது, நீதிபதி அவர்களுக்கு சர்வதேசப் பிடியாணையை வழங்கியதாக கூறப்படுகிறது.[206] குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு பேரில் யாராவது பிரித்தானியாவில் இருந்தால், மரண தண்டனையும், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாத நேரத்தில் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டமையும் அவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவதற்கு பாரிய தடங்கல்களை உருவாக்கலாம்: மரண தண்டனை நிறைவேற்றப்படாது என்ற எழுத்து மூலமான உறுதி வழங்கப்பட்டாலே ஒழிய பிரித்தானியா மரண தண்டனையை எதிர் நோக்கும் ஒருவரை நாடுகடத்தாது.[207]

இரண்டு இலங்கையர்களது கைதுகளும் 2001 பிரித்தானியாவின் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றச் சட்டத்தின் 51 ஆவது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாக பிரித்தானியா மெற்றோபொலிரன் பொலிசார் குறிப்பிட்டுக் கூறினார்கள். இந்தச் சட்டம் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்பு போன்றன உலகின் எங்கு நடந்தாலும் அவற்றுக்கு

201 ’22 வருடங்களுக்கு முன்னர் பிபிசி இன் ஊடகவியலாளரின் சந்தேகதிற்கிடமான கெலையாளி பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டதை மனித உரிமைக்குழுக்கள் வரவேற்கின்றன’, ஊடக அறிகைகை, 25 பெப்ரவரி 2022, https://redress.org/news/rights-groups-welcome-arrest-in-the-uk-of-suspected-killer-of-bbc-journalist-in-sri-lanka-22-years-ago/ இல்க் கிடைக்கம்

202 முதலாவது கைதினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் மீண்டும் இங்பே தரப்படுகின்றது: https://telo.org/man-arrested-by-mets-war-crimes-team-as-part-of-sri-lankan-murder-investigation/

https://news.met.police.uk/documents/ter008-2022-ctp-sri-lanka-war-crimes-appeal-tamil-translation-dot-pdf-441507

203 டிரையல் இன்டர்நேஸசல் (Trial International), உலகளாவிய அதிகார வரம்பு வருடாந்த அறிக்கை மீளாய்வு 2024 பக்கம் 117, https://trialinternational.org/wp-content/uploads/2024/04/UJAR-2024_digital.pdf இல் பார்க்கலாம் ; ‘பிரித்தானியாவினுடைய இலங்கைப் போர்க்குற்ற விசாரணை இரண்டாவது கைது’, அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழ்ர் சங்கம், https://sangam.org/second-arrest-inn-uks-sri-lanka-war-crimes-investigation/ இல் கிடைக்கும்.

204 ‘இரட்டை மரணதண்டனை வழங்கும் யாழ் உயர்நீதிமன்றம்.’ *Daily Mirror* (இலங்கை), 8 டிசெம்பர் 2016, https://www.pressreader.com/sri-lanka/daily-mirror-sri-lanka/20161208/282522953094096 இல் கிடைக்கும்

205 https://www.parliament.lk/members-of-parliament/directory-of-members/viewMember/344

206 ‘ஈபிடிபி இனைச் சேர்ந்த நெப்போலியன் மற்றும் மதனராஜாவிற்கு சர்வதேசப் பிடியாணையை நேற்று யாழ் உயர்நீதிமன்றம் வழங்கியது’ தமிழ் இராஜதந்திரி, 27 ஒக்ரோபர் 2024இ https://tamildiplomat.com/jaffna-high-court-yesterday-issue-interpol-arrest-warrant-napoleon-mathanarajah-epdp/. இல் கிடைக்கும்

207 அரச வழக்குத் தொடரல் சேவை சட்ட வழிகாட்டி, பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்துதல், https://www.cps.gov.uk/legal-guidance/extradition-from-uk இல் கிடைக்கும்

எதிராக வழக்குத் தொடர பிரித்தானியாவிற்கு அனுமதி வழங்குகின்றது.

இது போன்ற குற்றங்களைப் புரிந்தவர்கள் பிரித்தானியாவில் இருக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு மெட்றோ பொலிற்றன் பொலிஸ் பயங்கரவாத எதிர்ப்பு கட்டளையினுள் சிறப்புத் திறமைகளைக் கொண்ட விசேட போர்குற்ற அணியை பிரித்தானியா உருவாக்கியது.[208]

அவர்களது கைதின் பின்னர், இருவரும் மேலதிக விசாரணைகள் நிலுவையில் இருந்த நிலையில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள், அத்துடன் இருவரும் குற்றஞ்சுமத்தப்பட்டதாகவும் தெரியவில்லை இரண்டாவது கைதினைத் தொடர்ந்து விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களை வைத்திருப்பவர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறு பொலிசார் யூன் 2024 இல் மேற்கொண்ட புதிய வேண்டுகோளின் பின்னர், மேலதிக தகவல்கள் எதுவும் மெட்றோ பொலிற்றன் பொலிசாரால் வெளியிடப்படவில்லை.[209]அறிந்த வரையில் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன அத்துடன் இரண்டு சந்தேகநபர்களும் தொடர்தும் பொலிஸ் பிணையில் உள்ளனர். [210]

விசாரணையின் முன்னேற்றம் பற்றிய விபரங்களை சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் வெளியிடாத அதேவேளையில் இன்னொரு நாட்டில் நடந்ததாகக் கூறப்படும் குற்றங்களை விசாரிக்கும் போது பரஸ்பர சட்ட உதவியைக் கேட்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட வழிமுறைகள் மூலம் அந்த நாட்டிலுள்ள உரிய உள்நாட்டு அதிகாரிகளிடமிருந்து ஒத்துழைப்பினைக் கேட்பது ஒரு நியமமான நடைமுறையாகும். வெளிப்படைக் காரணங்களுக்காக, முக்கிய ஆதாரங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கலாம் அத்துடன் அந்த நாட்டில் விசாரணைகளின் விளைவாக சேகரிக்கப்பட்டிருக்கலாம்.

பரஸ்பர சட்ட உதவிக்கான உத்தியோகபூர்வமாக வேண்டுதல்கள் ஏதாவது அனுப்பப்பட்டுள்ளதா அல்லது பதில்கள் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பது பற்றி தெரியவில்லை, ஆனால் இலங்கை அதிகாரிகளுடன் தாம் தொடர்ந்தும் தொடர்பில் இருந்து வருவதாக பிரித்தானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.[211]

மேலும் ஒரு முன்னேற்றத்தினைக்காட்டுவதாக இலங்கையில் போரின் முடிவின் போது இடம்பெற்ற மீறல்களுக்கான பொறுப்புக்கூறலில் இன்னமும் தீவிரமாகஈகெ டுபட்டுள்ளார்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள் உட்பட இலங்கையின் சிவில் போரின் போது இடம்பெறய்ற மோசமான மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் ஏனைய மீறல்களுக்குப் பொறுப்பான நான்கு தனிநபர்கள் மீது தடைகளை விதிப்பதாக மார்ச் 2025 இல் பிரித்தானியா அரசாங்கம் அறிவித்தது.[212] இவை மூன்று இலங்கை இராணுவத்தளபதிகன் மற்றும் LTTR இன் ஒரு முன்னாள் இராணுவத்தளபதி, இவர் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பணியாற்றும் இன்னுமொரு துணை இராணுவக்குழுவினை இதனையடுத்து தலைமை தாங்கினார். பிரித்தானியாவிற்கான பயணத்தடை, சொத்துக்களை முடக்குதல் போன்றன இந்த தடையில் உள்ளடங்குகின்றன. ஒரு அறிக்கையில் வெளியுறவுச் செய்லாளர் தெரிவித்ததாவது: ‘இலங்கையில் சிவில் யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை நாடுதல் உட்பட தொடர்ச்சியாக இன்று சமூகங்கள் ஒரு தாக்கத்தினைச் செலுத்தும் இலங்கையின் மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா அர்ப்பணிப்புடன் உள்ளது.’[213]

---

[208] போர்க்குற்ற அணியின் செயற்பாடு பற்றிய விபரத்தினையும் அது பின்பற்றும் வழிகாட்டு நெறிகளையும் பார்க்கலாம்: https://www.cps.gov.uk/publication/war-crimescrimes-against-humanity-referral-guidelines

[209] இலங்கை போர்க் குற்றவிசாரணையில் இரண்டாவது கைதினைத் தொடர்ந்து தகவல் கோரும் பொலிசார், 4 யூன் 2024இ https://www.breaking.co.uk/uk-law-enforcement/4-june-2024-1740-police-appeal-for-information-following-second-arrest-in-sri-lanka-war-crimes-investigation-the-appeal-comes-after-a-second-uk-based-person-was-arrested-as-part-o-17642.html இல் கிடைக்கும்

[210] போர்க்குற்ற அணியைச் சேர்ந்த விசாரணையாளர் நிமலராஜன் கொலை பற்றிய விசாரணை இன்னமும் தொடர்வதாகவும் அந்த அணி மேலதிக சாட்சிகளை அடையாளங்காண்பதற்கு தொடர்ந்தும் சிவில் சமூகம் மற்றும் இலங்கைச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றும்’ என அவர் அவர்களுக்கு தெரிவித்ததாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு டிசெம்பர் 2024 இல் அறிவித்தது., https://cpj.org/data/people/mylvaganam-nimalarajan/ இல்க் கிடைக்கும்.

[211] Trial International with Redress மற்றும் ஏனையோர், உலகளாவிய சட்ட அதிகார வரம்பு வருடாந்த மீயாள்வு 2024, பக்கம் 117: https://redress.org/storage/2024/04/UJAR-2024_digital.pdf.

[212] ‘இலங்கை சிவில் யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கான யு கேயின் தடைகள்’, வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் ஊடக அறிக்கை, 24 மார்ச் 2025, https://www.gov.uk/government/news/uk-sanctions-for-human-rights-violations-and-abuses-during-the-sri-lankan-civil-war இல்க் கிடைக்கும்

[213] Ibid. அமெரிக்கா மற்றும் கனடா உட்பட ஏனைய நாடுகளும் பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக இலங்கை உயர் அதிகாரிகள் மீது தடைவிதித்துள்ளன.

# 6. ஏனைய பத்திரிகையாளர்களதும் ஊடகப்பணியாளர்களதும் கொலை

மே 2002 இல், இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி கூறும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பு ‘2000 ஆண்டில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனைக் கொலை செய்தவர்களுக்கான தண்டனை வழங்கப்படாமல் இருப்பது இந்த தொழிலுக்கு இன்னமும் ஆபத்தாகவே உள்ளது’ எனக் குறிப்பிட்டுள்ளது.[214] 2004 இல், மேலும் ஊடகவியலாளர்கள் தொடங்கியது (விளக்கப்படத்தினைப் பார்க்கவும்). 30 ஏப்பிரல் 2007 செய்தியில் உதயன் பணியாளரான செய்தியாளர் செல்வராஜா ராஜேஸ்வர்ணம் முதல்நாள் மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு கொலையாளியினால் ஒரு சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவித்தது, ’இலங்கையில் பத்திரிகையாளர்களைக் கொலை செய்தவர்கள் தமது முன்னைய கொலைகளின் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் புதிய கொலைகளைச் செய்யும் அளவிற்கு பாதுகாப்பாக உணர்கிறார்கள்’ என ஆர் எஸ் எப் குறிப்பிட்டுள்ளது.[215] இந்தக் கட்டுரையில், நிமலராஜனின் நண்பரும் தமிழ்நெற்றின் ஆசியருமான தர்மரட்ணம் சிவராம் என்று அறியப்படும் தராக்கி சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்பு, 29 ஏப்பிரல் 2005 இல் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் அதற்கு முன்னைய ஆண்டு 02 மே 2006 இல் உதயன் பத்திரிகை அலுவலகம் மீது 40 இற்கு மேற்பட்ட தோட்டாக்களை கொண்டு மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் *உதயன்* பத்திரிகையின் இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் படுகாயங்களுக்கு உள்ளாகியமை ஆகியவற்றுக்கான தொடர்புகளை எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு அடையாளங்கண்டுள்ளது. மீண்டும் உள்ளூர்ப் பத்திரிகையாளர்கள் ஈ.பி.டி.பி. இனைச் சந்தேகித்துள்ளார்கள்.[216]

நிமலராஜனுக்கு முன்னரும், தென்னிலங்கை உட்பட்ட பல ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டிருந்தாலும் 2014 இல் யாழ்ப்பாண பத்திரிகையாளர் சங்கம் நிமலராஜனின் கொலையினை ‘பத்திரிகையாளர்களைக் கொலை செய்யும் ஒரு போக்கின்’ ஆரம்பமாக அடையாளங்கண்டார்கள். மிரட்டல்களும் பரவலாகக் காணப்பட்டது. தற்போது, பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரில் தன்னிச்சையான கைது, கொலை மிரட்டல்கள் மற்றும் கொலை முயற்சிகள் என்பன பத்திரிகையாளர்கள் ‘அச்சத்தின் பிடியில் இருப்பதுடன்’ குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைக் குறிப்பதாக தற்போது யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் சங்கம் 2014 இல் தெரிவித்தது. அத்துடன் ‘இன்றுவரை’ ‘இலங்கை அரசாங்கமானது இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கமானது நீண்ட மௌனம் காத்து வருவதாக’ யாழ்ப்பாண பத்திரிகையாளர் சங்கத்தின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.[217] ஒரு வருடத்தின் பின்னர், நிமலராஜனின் கொலை ‘தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறைக்கான தொடக்கநிலையை உருவாக்கியதாக’ பார்க்கப்பட்டது என அது தனது கருத்தை மீண்டும் தெரிவித்தது அத்துடன் ‘வெவ்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்ததுடன் தாங்கள் விசாரணைகளை மேற்கொள்வது போல் தோன்றுவதற்கு ஆணைக்குழுக்களை உருவாக்கியுள்ளன’ ஆனால், ‘பதிலாக கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன சகபாடிகளின் வாக்குமூலங்கள் மற்றும் சாட்சியங்கள் அழிக்கப்பட்டதாக மேலும் தெரிவித்துள்ளது. இன்று வரை, அந்த ஆணைக்குழுக்களுக்கு அல்லது அவற்றின் அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பதை நாம் இன்னமும் அறியமுடியவில்லை. ‘யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் சங்கம், பத்திரிகையாளர் கொலைகள் மற்றும் கடத்தல்கள் தொடர்பாக இதே பாதுகாப்பு வழிமுறைகளுடன் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் எமக்கு ஒரு போதுமே நம்பிக்கை இல்லை’ என்ற எச்சரிக்கையுடன் ஒரு முறையான விசாரணைக்கு கோரிக்கை விடுத்துள்ளது. எனவே, பக்கச்சார்பற்ற சர்வதேச ஊடக அமைப்புக்களின் கண்காணிப்பின்

---

214 https://www.tamilnet.com/art.html?catid=13&artid=6889

215 எல்லைகளற்ற செய்தியாளர்கள். செய்தி. 30 ஏப்ரல் 2007: https://rsf.org/en/young-reporter-tamil-newspaper-murdered-jaffna

216 Ibid, and https://www.tamilguardian.com/index.php/content/another-tamil-journalist-killed-commemorate-earlier-killings

217 https://www.tamilguardian.com/index.php/content/journalists-protest-against-media-repression-north

கீழ் விசாரணகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கைகளை நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்'.[218]

மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் இலங்கை பற்றிய (OISL)2015 ஆம் ஆண்டு விசாரணை அறிக்கையானது 2002 ஆம் ஆண்டிலிருந்து புரியப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களுக்கு மத்தியில் பத்திரிகையாளர்கள் படுகொலைகளை தனித்துக் குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை உலகிலே கொல்லப்பட்டவர்களில் அதிகமாக உள்ளது அத்துடன் இது கருத்துச் சுதந்திரம் மீது கடுமையான தடைகளைப் போட்டுள்ளது என விசேட விசாரணை அணி குறிப்பிட்டுள்ளது. இலங்கை மீதான விசாரணை கண்டுபிடித்தது யாதேனில்:

***... இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குத்கள் பரவலானதாகவும், நீண்ட காலமாக இடம்பெற்று வருவதுடன் முஜஉடு இன் ஆணைக்காலம் முழுவதும் அதன் பின்னரும் தொடர்ந்துள்ளது, அத்துடன் அரசாங்கத்தின் கொள்கைகள் அல்லது நபர்கள் பற்றி விமர்சித்ததாக அறியப்பபட்ட குறிப்பிட்ட ஊடகங்கள் அவர்களால் திட்டமிட்டவகையில் மீண்டும் மீண்டும் இலக்கு வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. பல சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு எதிராக தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும் ஊடகப்பணியாளர்களுக்கான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்படவில்லை அத்துடன் அவர்களது கொலைகள் குறித்த விசாரணைகளில் சிறிய அளவு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது.[219]***

பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (CPJ) அண்மையில் நிமலராஜன் பற்றிய தனது அண்மைய பதிவினை வெளியிட்டுள்ளது. '2025 ஆரம்பத்தில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் நிமலராஜனுக்கான நீதியை வழங்குமா என்பது பற்றி கருத்துக் கேட்கும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு இன் குறுஞ்செய்திகளுக்கு இலங்கையின் ஊடக அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸ பதிலளிக்கவில்லை'.[220]

மேலே தரப்பட்ட கால ஒழுங்கானது இலங்கையில் பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவது தனித்த சம்பவங்கள் இல்லை ஆனால் இவை அரசாங்கத்தினது பாதுகாப்பினையும் தண்டை இன்மையையும் அனுபவவித்த மற்றும் தொடர்ந்தும் அதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி. போன்ற துணை ஆயதக்குழுக்களுடன் தொடர்புபட்டிருப்பதுடன் அரசியர் ரீதியாக உந்தப்பட்ட, இன ரீதியிலான இலக்கு வைக்கப்பட்ட வன்முறை வடிவத்தின் ஒரு பகுதியாக அமைவதை இது பலமானமுறையில் விபரிக்கின்றது.கொலைகாரர்கள் புதிய கொலைகளைச் செய்து 'ஆண்டு நிறைவுகளைக் கொண்டாடுவது' மேலும் வன்முறையை புரிவதற்கு துணிவை வழங்கும் ஆழ வேரூன்றியுள்ள தண்டணையிலிருந்து பாதுகாக்கும் ஒரு கலாச்சாரத்தின் ஒரு கடுமையான கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக உள்ளது என 2007 இல் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அவதானிப்பு தெரிவித்துள்ளது. யாழ்ப்பாண பத்திரிகையாளர் சங்கத்தின் அறிக்கைகள் மிகவும் முக்கியமானவை: அவை நீதியின்மையை மட்டும் அல்லாது வாக்குமூலங்கள் அழிக்கப்பட்டதன் மூலமும் போலிக் ஆணைக்குழுக்களின் மூலமும் உண்மை தீவிரமாக நசுக்கப்படுவதையும் கோடிட்டுக் காட்டுகின்றன. தண்டனை வழங்காமல் பாதுகாப்பு வழங்குவதன் ஒரு மோசமான அடையாளமான நிமலராஜனின் வழக்கினைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது மீண்டும் திறப்பதற்கான எந்த வொரு அர்த்தமுள்ள நடவடிக்கையும் 2025 இல் கூட புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு தனது அண்மைய தகவலில் சுட்டிக்காட்டுகின்றது.

[218] https://www.tamilguardian.com/index.php/content/jaffna-press-club-calls-inquiry-killings-and-disappearances-tamil-journalists

[219] இலங்கை மீதான OHCHR இன் விசாரணை பற்றிய அறிக்கை, A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2015, பத்திகள் 257 மற்றும் 260.

[220] https://cpj.org/data/people/mylvaganam-nimalarajan/

# 19 ஒக்டோபர் 2000 மயில்வாகனம் நிமலராஜன் கொலையின் பின்னர் இடம்பெற்ற 44 பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களின் கொலைகள்:

2004

2005



ஐயாத்துறை நடேசன்

அச்சு மற்றும் வானொலி பத்திரிகையளர்: 31.05.2004 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தர்மரட்ணம் சிவராம் ( தராக்கி)

அச்சுப் பத்திரிகையாளர், தமிழ்நெற்றின் மூத்த ஆசிரியர், கடத்தப்பட்டு மறுதினம் 29.04.2005 இல் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் உடல் கண்டு பிடிக்கப்பட்டது.




டேவிட் செல்வரட்ணம்

பத்திரிகை அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகாரி, 29.08.2005 இல் கைக்குண்டினால் கொல்லப்பட்டார்.



கந்தசாமி ஐயர் பாலநடராஜா

அச்சு ஊடகப் பத்திரிகையாளர் 16.08.2004 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



கண்ணாமுத்து அரசகுமார்

செய்தித்தாள் விநியோகப் பணியாளர், 29.06.2005 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



யோககுமார் கிருஸ்ணபிள்ளை

பத்திரிகை விநியோகிப்பவர், 30.09.2005 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



லங்கா ஜெயசுந்தரா

பணியின் போது கைக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார், 11.12.2004



றெலங்கி செல்வராஜா


தொலைக்காட்சி மற்றும் வானொலித் தொகுப்பாளர் மற்றும் வர்ணணையாளர், 12.08.2005 இல் சுட்டுக் கொல்லப்பட்டர். (பிற்குறிப்பு . ஒரு அரசியல் செயற்பாட்டாளரான கணவருடன் கொல்லப்பட்டார்)



L.M. பலீல்/நெட்பிட்டிமுனை பலீல்

எழுத்தாளர், 02.12.2005இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2005



K.நவரட்ணம்

பத்திரிகை விநியோகிப்பவர், 22.12.2005 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2006



சுப்பிமணியம் சுகிர்தராஜன்

அச்சுப் பத்திரிகையாளர், 24.01.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



ராஜரட்ணம் றஞ்சித்குமார்

பத்திரிகை விநியோக மேலாளர், 02.05.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



S.T. கணநாதன்

செய்தி மற்றும் தகவல் மையத்தின் உரிமையாளர், 01.02.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.




சம்பத் லக்மால் டி சில்வா

சுயாதீயினச் செய்தியாளர், 01.07.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



பஸ்தியான் ஜோர்ச் சகாயதாஸ்

பத்திரிகைச் விநியோக முகாமையாளர், 02.05.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



மரியதாசன் மனோஜன்ராஜ்


பத்திரிகை விநியோகஸ்தர், 0108.2006 இல் கிளைமோர் வெடிப்பில் கொல்லப்பட்டார்.

2007



சதாசிவம் பாஸ்கரன்

பத்திரிகை முகவர் மற்றும் சாரதி, 15.08.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



S.ரவீந்திரன்

பத்திரிகை அச்சிடும் இயந்திரத்தினை இயக்குபவர், 12.02.2007 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



செல்வராசா ரஜீவர்மன்

அச்சு பத்திரிகையாளர், 29.04.2007 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



சின்னத்தம்பி சிவமகாராஜா

பத்திரிகை முகாமைப் பணிப்பாளர், 20.08.2006 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



சுப்பிமணியம் இராமச்சந்திரன்

பத்திரிகை நிருபர், 15.02.2007 இல் காணாமல்போனார்.



சகாதேவன் நீலக்சன்

மாணவப் பத்திரிகையாளர், 01.08.2007 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



சந்திரபோஸ் சுதாகர்

வெளியிடுபவர், செய்தி ஆசிரியர், பத்திரிகையாளர் 16.04.2007 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்



அந்தோனிப்பிள்ளை செரின் சித்திரஞ்சன்

பத்திரிகை விநியோக முகவர், 05.11.2007 இல் காணாமற்போனார்.

2007

2008



வடிவேல் நிமலராஜ்

பத்திரிகை ஒப்புநோக்குனர். 17.11.2007 இல் காணாமற்போனார்.




இசைவிழி செம்பியன் (சுபாஜினி)

வானொலிச் செய்தியாளர், 27.11.2007 இல் வானொலி நிலையம் மீதான இலங்கை விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



பரணிறூபசிங்கம் தேவகுமார்

தொலைக்காட்சி செய்தியாளர், 28.05.2008 குத்திக் கொல்லப்பட்டார். பிற்குறிப்பு. அவரது மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த சகபாடியும் கொல்லப்பட்டார்



T. தர்மலிங்கம்

வானொலித் தொழிநுட்பவியலாளர், 27.11.2007 இல் வானொலி நிலையம் மீதான இலங்கை விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



W. குணசிங்க

பத்திரிகையாளர், 05.12.2007 இல் பயணிகள் பேரூந்து மீதான வீதியோரக் குண்டுத்தாக்குதல்.




முகமட் றஸ்மி மகறூவ்

தொலைக்காட்சி நிருபர் 06.10.2008 இல் ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். பிற்குறிப்பு. கொல்லப்பட்ட 27 பேரில் ஒருவர் மற்றும் குறைந்தது 80 பேர் காயமடைந்தார்கள்.



சுரேஸ் லிம்பியோ

வானொலித் தொழிநுட்பவியலாளர், 27.11.2007 இல் வானொலி நிலையம் மீதான இலங்கை விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



இராசையா ஜெய்ந்திரன்

பத்திரிகையாளர் மற்றும் முன்னாள் உதவி செய்தி ஆசிரியர், ஒக்டோபர் 2008 காலப் பகுதியில் தெளிவற்ற சூழ்நிலைகளில் கொல்லப்பட்டார்.



**லசந்த விக்கிரமதுங்க**

அச்சு ஆசிரியர் மற்றும் பத்திரிகையாளர், 08.01.2009 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



**நல்லையா மகேஸ்வரன்**

நிருபர் மற்றும் பத்திரிகை விநியோக இணைப்பாளர், 06.03.2009 இல் மோட்டார் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



**ஜெயராஜா சுசிதரா ( சுகந்தன்)**

பத்திரிகை அச்சிடும் இயந்திரத்தினை இயக்குபவர், 25.04.2009 இல் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



**புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி**

அச்சு, தொலைக்காட்சி மற்றும் வானொலி நிருபர், 12.02.2009 பணியில் இருந்த போது இலங்கையின் சரமாரியான எறிகணையில்க் கொல்லப்பட்டார். பிற்குறிப்பு அவரது காயங்களுக்கு போதிய மருத்துவ கவனிப்பு இல்லாமையே அவரது சாவுக்கு ஒரு காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது



**மரியநாயகம் அன்ரன் பெனடிக்ற்**

பத்திரிகை விநியோகஸ்தர், மார்ச் 2009 காலப் பகுதியில் மோட்டார் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



**மாரி அருளப்பன் அன்ரனிகுமார் (அன்ரனி குறூஸ்)**

நிருபர் மற்றும் பத்திரிகை விநியோகம் செய்பவர், 14.05.2009 இல் இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்.



**சசி மதன்**

பத்திரிகை விநியோகஸ்தர் 05.03.2009 இல் மோட்டார் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



**ராஜ்குமார் மேரி டென்சி**

செய்தித்தாள் வடிவமைப்பாளர், 09.04.2009 இல் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



**சங்கரசிவம் சிவதர்சன்**

செய்தித்தாள் வடிவமைப்பாளர், 14.05.2009 இல் இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்.

2009



குலசிங்கம் தவபாலன்
வானொலிச் செய்தியாளர் மற்றும் படப்பிடிப்பாளர், மே 2009 காலப் பகுதியில் இலங்கை இராணுவத்தால் கண்மூடித்தனமான முறையில் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.



இசைப்பிரியா (சோபா/ சோபனா தர்மராஜா)
பத்திரிகையாளர் மற்றும் செய்தி அறிவிப்பாளர் 18/19.05.2009 இல் சுட்டுக் கொல்லப்பட்டார் (பிற்குறிப்பு: போட்டோ ஆதாரங்களில் இருந்து அவர் பாலியல் ரீதியான தாக்குதலுக்கும் அவர் உட்பட்டார் எனப் பலர் நம்புகின்றனர்)

2010



பிறகீத் எக்னெலிகொட
கேலிச்சித்திரம் வரைபவர் மற்றும் கட்டுரை எழுதுபவர், 24.01.2010 இல் காணாமற்போனார்.

தகவல் மூலம்:

1. இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் (JDS) http://www.jdslanka.org/index.php/ killed-media-workers
2. சுரேன் கார்த்திகேசு, போரின் சாட்சியம், 2024

# 7. முடிவுகளும் சிபாரிசுகளும்

## முடிவு

இலங்கையின் சிவில் யுத்தத்தின் ஆரம்ப காலப் பகுதியில்க் கொல்லப்பட்ட ஒரு முக்கிய தமிழ் ஊடகவியலாளரான நிமலராஜன் மயில்வாகனத்தின் வழக்கானது நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பில் ஆழமாக வேரூன்றியுள்ள கட்டமைப்பு ரீதியில் தண்டனை இன்மையைக் காட்டுகிறது. குறிப்பாக அரசு சார்ந்த அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள் தொடர்புபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இந்தக் குற்றவியல் நீதி அமைப்பானது தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது.

அவரது படுகொலை தொடர்ச்சியாகத் நீதியைப் பெற்றுக் கொள்ளத் தவறியமையானது, அரசு தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் குற்றங்களை விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்கு இலங்கையின் குற்றவியல் நீதிமுறையானது பல சந்தர்ப்பங்களில் விரும்பாமல், நீதியை வழங்க முடியாமலிருக்கும் ஒரு பரந்த வடிவத்தினைக் காட்டுகிறது. பல தசாப்தங்களாக இதனை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கூர்ந்து அவதானித்த போதிலும், இது போன்ற வழக்குகளில் இலங்கை அதிகாரிகள் தொடர்ச்சியாக நீதியை வழங்கத் தவறிவிட்டார்கள். இந்தத் தோல்வியானது ஏதேச்சையானதல்ல – இது திட்டமிட்ட ரீதியிலானது. இந்த வடிவத்தினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகள், இலங்கையிலுள்ள அமைப்புக்களாலும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களாலும் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## வழக்குத் தொடர்பான சுதந்திரமும் சட்டமா அதிபரின் பங்கும்

இலங்கையின் சட்ட மாஅதிபர் அரசாங்கத்திற்கான பிரதான சட்ட ஆலோசகர் மற்றும் நாடளாவிய முறையில் குற்றச் செயல்களுக்கு வழக்குத் தொடர்வதற்கான முதன்மை அதிகாரி என இரண்டு பணிகளைக் கொண்டுள்ளார். இந்த இரட்டைச் செயற்பாடானது ஆயுதப்படை மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் உட்பட அரச சார் அமைப்புகள் அல்லது நபர்கள் தொடர்புபட்ட குறிப்பாக விசாரணைகள் மற்றும் வழக்குகள் தொடரப்படும் சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்ட அவதானிப்பாளர்களால் தொடர்ச்சியாக விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது அமைப்பு ரீதியாக அரசாங்கத்தின் சட்ட அமுலாக்கல் பிரிவினுள் அமைந்துள்ளது. அத்துடன் அரசாங்கத்தின் பல அமைப்புகளுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதாகவும் செயற்படுகிறது. இது போலவே, அது செயற்பாடு ரீதியாக சுதந்திரமானதல்ல அத்துடன் அது விசாரிக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ தேவையான அமைப்புக்களிடமிருந்து அமைப்பு ரீதியாக தனியானதும் இல்லை. இது உள்ளார்ந்த நல முரண்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. இது அடிப்படையில் சர்வதேசச் சட்டத்தின்கீழ் மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளின் நம்பகத்தன்மை மற்றும் பாரபட்சமின்மை ஆகியவற்றைப் பாதிக்கும்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் இலங்கை பற்றிய தனது 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் (A/HRC/46/20) குறிப்பிட்டதாவது:

> தற்போதைய கட்டமைப்பு முறையால் பொறுப்புக் கூறலை வழங்கமுடியாது. சட்ட மாஅதிபர் திணைக்களமானது மோசமான மனித உரிமைமீறல் சம்பவங்களுக்கு, முன்னைய ஆணைக்குழுக்கள் விசாரணைகள் மூலம் நம்பத் தகுந்த முடிவுகள் இருப்பினும் அடிக்கடி போதியளவு ஆதாரங்கள் இல்லை எனக்கூறி திறம்பட வழக்குத் தொடர மீண்டும் மீண்டும் தவறியுள்ளது. ஒரு சுயாதீனமான நிபுணத்துவம் பெற்ற வழக்குத் தொடர்பான அமைப்பு அவசியமாகும்.

இது போலவே, நீதிபதிகளுக்கான சர்வதேச ஆணையகம் (ICJ) விசேட வழக்கறிஞர் அலுவலகத்தினை உருவாக்குவது பற்றி

தொடர்ச்சியாக பரிந்துரை செய்து வருகிறது. இது பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேசக் குற்றங்களை விசாரணை செய்து, வழக்குத் தொடர்வதற்கு வழக்குத் தொடர்வது தொடர்பான அதிகாரங்களைக் கொண்ட சட்ட மாஅதிபரிடமிருந்தும் சுயாதீன தன்னாட்சி அமைப்பாகும்.

சட்டத்தினை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் அலுவலகத்துடனான சட்ட மாஅதிபரின் நிறுவன ரீதியிலான தொடர்பினைக் கருதுகையில், அரச முகவர்களினால் புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்களுக்கு வழக்குத் தொடர இந்த அலுவலகத்தில் தங்கியிருப்பது சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற சர்வதேச தராதரங்களை திருப்தி செய்யவில்லை. கடந்த காலங்களில் வழக்குத் தொடர்வதில் போதிய நடவடிக்கைகள் காணப்படாமை தண்டனை வழங்கப்படாத ஒரு நிலையை உருவாக்கிய முக்கிய வழக்குகள் தொடர்பில் இந்தக் கரிசனை குறிப்பாக முக்கியமானதாக உள்ளது.

குற்றச்சாட்டுகளுடன் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு சட்ட மாஅதிபர் ஒரு சட்டப்பிரதிநிதித்துவம் செய்யவேண்டிய கடமையைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தவிர்ப்புக் கொள்கை அல்லது அமைப்பு ரீதியிலான பிரிவு கடைப்பிடிக்கப்பட வேண்டும். இலங்கையின் சட்டக் கட்டமைப்பில் இதுபோன்ற பொறிமுறை காணப்படாமை தற்போதுள்ள வழக்குத் தொடர்பான கட்டமைப்பு நியாயமான மற்றும் சுதந்திரமான விசாரணைகளுக்கு தேவையானவற்றை நிவர்த்தி செய்வதைத் தடுக்கிறது. பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கு மட்டுமல்லாமல் சர்வதேச சட்டரீதியான கோட்பாடுகளுக்கு இலங்கை உட்பட்டு நடப்பதை உறுதிசெய்வதற்கும் சீர்திருத்தம் அவசியமாகும். வழக்குத் தொடர்வதற்கான சுயாதீன அதிகாரம் இல்லாத சூழலில் கடந்தகால துஸ்பிரயோகங்களின் வரலாற்றினை சீர்செய்வதற்கான எந்தவொரு முயற்சியும் சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் போதுமற்றதாகவே இருக்கும்.

இதனைவிட, பல வருடங்களாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் மீறல்களை விசாரிப்பதற்கு பல ஆணைக்குழுக்களை உருவாக்கியுள்ளன. அவை அரிதாகவே வழக்குகள் மற்றும் இழப்பீடுகளுக்கு இட்டுச் சென்றன. இந்த அமைப்புகளும் நீதிக்கான கருவிகள் என்பதைவிட, அடிக்கடி அரசியல்க் கவனத்தை திசைதிருப்பவதற்கான கருவிகளாக பயன்பட்டுள்ளன.

நிமலராஜனின் வழக்கு பொறுப்புக்கூறல் பற்றிய பரந்த நெருக்கடிகளுக்கான அடையாளமாகும். அரசியல் ரீதியான தூண்டப்பட்ட குற்றங்கள்பற்றி உடனடி, விரிவான மற்றும் நம்பத்தகுந்த விசாரணைகளை நடாத்துவதற்கு இலங்கையின் நீதிமுறை திறன், விருப்பம், சுயாதீனத்தன்மை மற்றும் பாரபட்சமற்றதன்மை ஆகியன போதியதாக இல்லை என்பதை அது காட்டுகின்றது.

## உலகளாவிய சட்ட அதிகாரவரம்பு

இந்த வழக்கு உலகளாவிய சட்ட அதிகாரவரம்பினை கோடிட்டுக்காட்டுகிறது: நீதிக்குப் புறம்பான கொலைகள் போன்ற பாரிய சர்வதேசக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக அவர்கள் எங்கிருந்தாலும் எங்கு குற்றங்கள் இடம்பெற்றிருந்தாலும் வழக்குத் தொடரப்படமுடியும். இலங்கை தொடர்பான சூழலில், அங்கு உள்நாட்டுப் பரிகாரங்கள் வெளிப்படையாகவே கிடைப்பதில்லை அல்லது பயனற்றதாக உள்ளன. உலகளாவிய சட்ட அதிகார வரம்பின் கீழ் சுயாதீனமான சர்வதேச விசாரணைகளுக்கு மற்றும் வழக்குகளுக்கு அனுசரணை வழங்குவதில் சர்வதேச சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமாகின்றது. செயலாற்றுவதற்கான கடமை அரசுகளுக்கு உண்டு. நீதி அரசியல் விருப்பினால் தாமதமாகவோ அல்லது எல்லைகளால் தடம்புரளக்கூடாது. நிமலராஜனின் வழக்கு தண்டனை வழங்காமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உலகத்தின் ஈடுபாட்டிற்கான ஒரு சோதனையாகும்.

ஐநா மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவிப்பிள்ளை கூறியது போல்:

> நீதிக்கு முடிவுத்திகதி கிடையாது.... மோசமான மனித உரிமைகள் மீறல்களைப் புரிந்தவர்களுக்கு உடனடியாக இல்லை என்றாற்கூட இறுதியாக மற்றும் எப்பொழுது என்றாலும் தாங்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவோம் என்பது தெரிய வேண்டும்.[221]

தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சுழற்சியை உடைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்காலத்தில் மீறல்கள் இடம்பெறுவதை தடுக்கவும் தொடர்ச்சியான சர்வதேச அழுத்தம் அவசியமாகும். இது போன்ற நடவடிக்கைகள் இல்லாமல் நிமலராஜன் மற்றும் பலரது கொலைகளைப் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாமல் தொடர்ந்தும் இருப்பார்கள். அத்துடன் அரசியல் வன்முறைக்கு வழிவகுக்கும் கட்டுமானங்கள் தொடர்ந்தும் பாதிப்படையாமல் இருக்கும்.

[221] நவிப்பிள்ளை, ஐநா மனித உரிமைகள் சபை, 24 பெப்ரவரி 2014.

## இலங்கை அரசாங்கத்திற்கான சிபாரிசுகள்

### 1. சர்வதேச பங்கேற்புடன் சுயாதீனப் விசாரணைப் பொறிமுறையினை உருவாக்குதல்

நிமலராஜன் மயில்வாகனம் கொலை உட்பட மோதலுடன் தொடர்புபட்ட மோசமான மீறல்களை விசாரணை செய்து வழக்குத் தொடர ஒரு சுயாதீனமான மற்றும் நடுநிலைமையான அமைப்பினை அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும். விசாரணைகளிலும் வழக்கின் முடிவுகளிலும் வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் உட்பட சர்வதேச அமைப்புக்களையும் இணைத்து உள்ளடக்கியதாக இந்தப் பொறிமுறை இருக்க வேண்டும்.[222] இது போன்ற பொறிமுறை ஒரு தெளிவான ஆணையையும், மற்றும் நம்பகத்தன்மையையும் செயல்திறனையும் உறுதிப்படுத்துவதற்கு முடிவுவெடுக்கும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கவேண்டும்.[223] இலங்கை பற்றிய 2015ஆம் ஆண்டு ஐநாவின் அறிக்கை உள்நாட்டுத் தீர்வு மட்டும் போதுமானதல்ல என கடந்த காலத்தில் கோடிட்டுக் காட்டியது.[224] இது போன்ற பொறிமுறையினை உருவாக்குவதில், அரசாங்கம் இந்தப் பொறிமுறையினை வடிவமைக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரைக் கலந்துரையாட வேண்டும் அத்துடன் குவாட்டமாலாவின் CICIG[225] போன்ற மாதிரிகளையும் அல்லது சிரியாவுக்கான IIIM போன்ற ஒரு முழுமையான நீதிமன்றம்[226] அல்லது இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட ஒரு கலப்பு நீதிமன்றம் அல்லது ECOWAS இன் ஆதரவுடன் அமைக்கப்பட்ட காம்பியா நாட்டின் நீதிமன்றம்[227] போன்றவற்றைக் கருத்தில் எடுக்க வேண்டும்.

### 2. விசேட ஆலோசரைக் கொண்ட ஒரு சுயாதீன அலுவலகத்தினை உருவாக்கல்

இலங்கை அரசாங்கம் :

- மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர தெளிவான ஆணையுடனான விசேட ஆலோசகரைக் கொண்ட சுயாதீன அலுவலகத்தினை அமைக்க வேண்டும்.
- சட்ட மாஅதிபர் அலுவலகத்தில் இருந்தும் ஏனைய நிறைவேற்று அதிகார அமைப்புகளிடமிருந்து செயற்பாட்டு ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் சுயாதீனமானதாக இந்த அலுவலகம் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- அதனுடைய சுயாதீனதன்மையையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்கு இந்த அலுவலகத்திற்கு போதிய சட்ட அதிகாரத்தையும், நிதிச் செலவுத்திட்ட வளங்களையும், பாதுகாப்பு பொறிமுறையினை வழங்க வேண்டும்.
- பொறுப்புக்கூறல் பற்றிய சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக இந்த அலுவலகத்தினை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதில் சிவில் சமூகம், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்களுடன் ஒரு கலந்தோலாசனை செயல்முறையில் ஈடுபட வேண்டும்.

நீதிக் கட்டமைப்பின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு மட்டுமல்லாமல் சர்வதேச சட்டக் கடப்பாடுகளையும் இலங்கை நிவர்த்தி செய்வதற்கும் இது போன்ற சீர்திருத்தம் அவசியமாகிறது. வழக்குத் தொடர்வதற்கன சுயாதீன அதிகார அமைப்பு இல்லாத சந்தர்ப்பத்தில், கடந்த கால துஸ்பிரயோக வரலாற்றினை நிவர்த்தி செய்வதற்கான எந்த முயற்சியும் சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் போதாதாகவே தொடர்ந்தும் இருக்கும்.

### 3. சர்வதேச சட்டச் செயல்முறை மற்றும் உலகளாவிய சட்ட அதிகாரவரம்பு விசாரணைகளுடனான ஒத்துழைப்பு

உலகளாவிய அதிகார சட்டவரம்பின் கீழ் அட்டுழியக் குற்றங்களை விசாரிக்கும் சர்வதேச அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் சர்வதேச சட்டத்தின் கீழுள்ள அதன் கடப்பாடுகளுக்கு இலங்கை முழுமையாக உட்பட்டு நடக்க வேண்டும். தற்போது இடம்பெற்றுவரும் நிமலராஜன் மற்றும் நாரந்தனை விசாரணைகளில் பிரித்தானிய அதிகாரிகளிடமிருந்தான கோரிக்கைகள் போன்ற நீதித்துறை கோரிக்கைகளுக்கு தாமதமின்றிப் பதிலளிப்பதையும் இதுபோன்ற செயல்முறையை தடுத்தல் அல்லது அரசியல் மயமாக்குதலைத் தவிர்த்தல் இது உள்ளடக்குகின்றது.

---

[222] Ibid, பத்தி 1214.

[223] இலங்கையிலிருந்து IIGEP பின்வாங்குவதை அவதானித்தல், https://frontline.thehindu.com/world-affairs/article30195299.ece

[224] இலங்கை பற்றிய OHCHR இன் விசாரணை பற்றிய அறிவு, ஐநா ஆவணம் A/HRC/30/CRP.2, 16 செப்ரெம்பர் 2015, பத்தி 1246.

[225] https://www.cicig.org/uploads/documents/mandato/cicig_acuerdo_en.pdf

[226] https://www.geneva-academy.ch/geneva-humanrights-platform/events/detail/82-accountability-in-syria-the-role-of-the-international-impartial-and-independent-mechanism

[227] https://www.icj.org/gambia-west-african-states-agree-on-court-for-jammeh-era-crimes/

4. **சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுடன் இணைந்து செயற்படல்**

பாரிய மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களுக்கான பொறுப்புக்கூறலினை மேற்கொள்வதற்கு உருவாக்கப்பட்ட ஐநாவின் இலங்கைப் பொறுப்புக்கூறல் செயற்திட்டம் (SLAP) மற்றும் ஏனைய பொறிமுறைகளுடன் முழுமையாக ஒத்துழைப்பதன் மூலம் அரசாங்கம் நீதி மீதான உண்மையான ஈடுபாட்டினைக் காட்ட வேண்டும். தகவலினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குதல், சாட்சியாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் சர்வதேச விசாரணைகளின் சுயாதீனத் தன்மையினைப் பாதுகாத்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

5. **2000 ஆம் ஆண்டிலிருந்து அனைத்துப் பத்திரிகையாளர்களினதும் கொலைகளுக்கும் பொறுப்புக்கூறல் உட்படுவதை உறுதிப்படுத்துதல்:**

- நிமலராஜனின் கொலை உட்பட 2000 ஆம் ஆண்டிலிருந்து பத்திரிகையாளர்களின் கொலைகள் இனரீதியாக இலக்கு வைக்கப்பட்ட வன்முறையினதும் தண்டனை வழங்கப்படாமையினதும் பரந்த வடிவத்தின் ஒரு பகுதி என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- எந்தவொரு சுயாதீனமான, சர்வதேச ரீதியாக மேற்பார்வை செய்யப்பட்ட விசாரணை, வெளிப்படையான ஆணையுடன், சாட்சிகளின் பாதுகாப்புடனும், பகிரங்க அறிக்கை வெளியிடுதலுடன் 2000 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாத அனைத்து செய்தியாளர்களின் கொலைகளை ஆராய்கின்றது என்பதனை உறுதி செய்தல்.
- கடந்தகால ஆணைக்குழு அறிக்கைகளை இரகசியத் தன்மையை நீக்கி வெளியிடுதல் – ஊடகவியலாளர்களின் கொலைகள் மற்றும் காணாமற்போதல்கள் தொடர்புபட்ட அழிக்கப்பட்ட ஆதாரங்கள் அல்லது மறைக்கப்பட்ட ஆதாரங்கள் உட்பட கடந்தகால ஆணைக்குழுக்களின் பதிவுகள் அனைத்தையும் இரகசியத் தன்மையை நீக்கி உடனடியாக வெளியிடுதல்.

## ஐ.நா. மனித உரிமைகள் சபை, உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச சமூகத்திற்கான சிபாரிசுகள்

1. **சர்வதேசத்தின் ஈடுபாட்டுடனான சுயாதீன விசாரணைப் பொறிமுறைக்கான தேவையை மீள உறுதிப்படுத்தல்**

2015ஆம் ஆண்டு இலங்கை மீதான OHCHR இன் கண்டுபிடிப்புக்களுடன் ஒத்துப்போகும் வகையில், உள்நாட்டுப் பொறிமுறை மட்டும் ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் புரியப்பட்ட மோசமான மீறல்களை கையாள்வதற்கு தேவையான போதிய சுதந்திரத்தையும், நம்பகத்தன்மையையும் பொதுமக்களின் நம்பிக்கையையும் கொண்டிருக்கவில்லை என மனித உரிமைகள் சபை மீண்டும் தனது நிலைப்பாட்டினை வலியுறுத்த வேண்டும். வெளிநாட்டு விசாரணையாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள் உட்பட்ட சர்வதேசத்தின் உண்மையான பங்களிப்புடனான ஒரு சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையினை உருவாக்குவதற்கு உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அழைப்புவிடுக்க வேண்டும். அல்லது தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள உண்மை ஆணைக்குழு, தேசிய உரித்துடமை, ஒருமித்த பங்கெடுப்பு மற்றும் அரசியல் விருப்பத்தினை வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் உட்பட்ட சர்வதேச நெறிமுறைகள் மற்றும் தரநிலைகள் உட்பட்டதாக இருப்பது அவசியம் என்பதைக் கருத்திற்கொண்டு ஐநா வின் அனுசரணையின் கீழ் ஒரு முழுமையான சர்வதேச நீதிமன்றத்தினை உருவாக்குவதற்கு ஆதரவு வழங்க உறுப்பு நாடுகள் அழைப்பு விடுக்க வேண்டும்.

2. **உலகளாவிய சட்ட அதிகார வரம்பு விசாரணைக்கான ஒத்துழைப்புக்கு வலியுறுத்தல்**

உறுப்பு நாடுகளை இலங்கையில் புரியப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் குறித்து உலகளாவிய அதிகார சட்ட அதிகாரவரம்பினை பிரயோகிக்குமாறு சபை ஊக்கிவிப்பதுடன் ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் கொலை மற்றும் நாரந்தனைக் கொலைகள் தொடர்பாக தற்போது ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றுவரும் விசாரணைகள் போன்ற தற்போது இடம்பெற்றுவரும் விசாரணைகளில் சரியான சமயத்தில் நீதித்துறை சார்ந்த உதவிகள் மற்றும் தகவல்களை வழங்கு உதவுதல் உட்பட இது போன்ற நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

### 3. இலங்கைப் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் (SLAP) ஆணையை வலுப்படுத்தலும் நிலைநிறுத்தலும்

எதிர்கால பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றுத் ஆய்வு செய்வதில் இலங்கைப் பொறுப்புக்கூறல் செயல்திட்டத்தின் முக்கிய பணியை ஏற்றுக் கொள்வதுடன், SLAP இன் வளங்களை அதிகரித்து மனித உரிமைகள் சபை தனது ஆணையைப் புதுப்பித்து மேம்படுத்த வேண்டும். இந்த செயற்திட்டம் சுயாதீனமாகவும் திறமையாகவும் செயற்படுவதற்கு உறுப்பு நாடுகள் அரசியல், நிதி மற்றும் செயல்பாட்டுக்குரிய ஆதரவினை உறுதி செய்ய வேண்டும்.

### 4. சபையின் தீர்மானங்கள் மற்றும் இணங்கி நடத்தல் கண்காணிப்பினை பின்தொடர்ந்து உறுதிப்படுத்தல்

பொறுப்புக்கூறல், நீதித்துறைச் சீர்திருத்தம் மற்றும் பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட நீதி ஆகியவற்றுடன் குறிப்பாக தொடர்புபட்ட கவுண்சிலின் கடந்தகால தீர்மானங்களை (உதாரணதாக HRC/46/1) இலங்கை நடைமுறைப்படுத்துவதை மதிப்பிடுவதற்கு மனித உரிமைகள் சபை அதனுடைய பின்தொடர்தல் பொறிமுறைகளை வலுப்படுத்த வேண்டும். இது தெளிவான இலக்குகளையும் கால எல்லைகளையும் அமைத்தல் மற்றும் உருப்படியான முன்னேற்றம் இல்லாத சந்தர்ப்பத்தில் மேலதிக நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. [228]

### 5. பாதிக்கப்பட்டவரின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர் பாதுகாப்பினை ஊக்குவித்தல்

எந்த ஒரு பொறுப்புக்கூறல் பொறிமுறையையும் உருவாக்குவது குறித்து இலங்கையினுள்ளும் புலம்பெயர் நாடுகளிலும் பாதுகாப்பான கலந்துரையாடல்கள் ஊடாக உட்பட எந்தவொரு நீதிச் செயல்முறைக்கும் பாதிக்கப்பட்டவர்களும் சிவில் சமூகமும் மையமாக உள்ளது என்பதை சபையும் உறுப்பு நாடுகளும் உறுதி செய்ய வேண்டும். சாட்சியாளர் பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் பழிவாங்கல்களில் இருந்து பாதுகாப்பு மற்றும் உயிர்தப்பியவர்களின் அமைப்புக்களுக்கான ஆதரவு அத்துடன் வெளிநாட்டில் இருந்தும் பாதுகாப்பான பங்கேற்பு ஆகியவற்றுடன் இது ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். மனித உரிமைகள் சபை இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தொந்தரவு மற்றும் கண்காணிப்பு பற்றி வெளிப்படையாக கண்டிக்க வேண்டும்.

## பிரித்தானிய அரசாங்கத்திற்கான சிபாரிசுகள்

பிரித்தானிய அதிகாரிகள் தமது விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆதாரங்கள் தற்போது பிரித்தானியாவிலுள்ள சந்தேகநபர்கள் கொலைகளுடன் தெடர்புபட்டதாக இருந்தால் பிரித்தானிய அதிகாரிகள் பிரித்தானிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகிறது. இது மத்திரமே பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான நீதிகிடைப்பதற்கான ஒரு சாத்தியமான வடிமாக இருக்கலாம்.

## ஊடக நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரக் குழுக்களுக்கான சிபாரிசுகள்.

### 1. ஆவணப்படுத்தல் மற்றும் சட்டரீதியான ஆதரவுவிற்கு ஆதரவு வழங்கல்

வழக்குகளை ஆவணப்படுத்தி வாக்குமூலங்களைப் பாதுகாத்து, சாத்தியமான போது மூலோபாய சட்ட நடவடிக்கையை தொடக்கி வைப்பதற்கு இலங்கை ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் பங்குதாராக இணைந்து கொள்வதுடன் நிதி உதவி வழங்குதல்.

### 2. பொது நினைவுகூரல்களை ஆதரித்தல்

அழிவடைவதைத் தடுக்கவும் தண்டனையின்மைக்கு சவால்விடுக்கவும் உலக பத்திரிகையாளர் சுதந்திர நிகழ்வுகள் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவற்றில் கடமையின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களை குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்ளை நினைவுகூரல் மற்றும் அங்கீகரித்தல்.

[228] 2016 இல் இருந்து சித்திரவதைக்கு எதிரான ஐநாவின் குழு இலங்கையைக் கருத்தில் எடுக்கவில்லை என்பதை உதாரணமாக கவனிக்கலாம்.

## பிபிசி இற்கான சிபாரிசுகள்:

முன்னணி உலக தொலைக்காட்சியும் நிமலராஜன் கொல்லப்பட்ட நேரத்தில் அவரது தொழில் வழங்குநரான பிபிசி ஆனது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் மற்றும் நீதிக்கான அழுத்தத்தினைக் கொடுக்கும் அடையாள மற்றும் நிறுவன ரீதியான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, நாங்கள் பிபிசி இற்கு சிபாரிசு செய்வதாவது:

### 1. நிமலராஜனின் வரலாற்றிற்கு வெளிப்படையாக மதிப்பளித்தலும் நீதி கோருதலும்

ஒரு ஊடகவியலாளராக நிமலராஜனின் துணிச்சலையும் நேர்மையையும் மீண்டும் உறுதிப்படுத்தும் உயர்மட்ட பகிரங்க அறிக்கை விடுதல், அவரது கொலைக்காக பொறுப்புக்கூறலுக்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்தல், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான விரிவான வன்முறை வடிவம் உட்பட இலங்கையில் தொடரும் தண்டணை இன்மையை சுட்டிக்காட்டுவதற்கு அதனுடைய தளத்தினைப் பாவித்தல்

### 2. பொறுப்புக்கூறலினை முனைப்பாக முன்னெடுத்தல்

இலங்கையின் நீதிமுறையின் தோல்வி பற்றி சர்வதேச ஆதரவு தேடல், மூலோபாய ரீதியாக சட்டநடவடிக்கை எடுத்தல் மற்றும் நிபுணர் விசாரணைகள் உட்பட நீதிக்கான சுயாதீன சட்ட வழிகளை ஆதரித்தல். வழக்கு தொடர்ந்தும் வெளிப்படையாக உள்ளது என்பதையும் நம்பத்தகுந்த வகையில் வழக்குகள் தொடரப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு மனித உரிமைக் குழுக்கள் மற்றும் ஐநாவின் பொறிமுறைகளுடன் இணைந்து பணியாற்றல்.

### 3. ஊடகவியலாளர் பாதுகாப்பு பொறிமுறையினைப் பலப்படுத்தல்

ஊடகவியலாளர்கள் உயர் ஆபத்தில் உள்ள சூழலில் மேம்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்பற்றுதல், இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- மோதல் வலயங்களுக்கு உருவாக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அபாய மதிப்பீட்டுக் கட்டமைப்பு.
- அவசர இடமாற்றம் மற்றும் வெளியேறும் முறைமைகள்
- பாதுகாப்பான தொடர்பாடல் மற்றும் சட்டப் பாதுகாப்பு ஆதரவு

பணியாளர்களுக்கு மட்டுமில்லாமல் உள்ளூர்ச் செய்தியாளர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சுயதொழில் பங்களிப்பாளர் களுக்கும் பாதுகாப்பு பயிற்சி மற்றும் பாதுகாப்பு வளங்கலகளை வழங்குதல்

### 4. உள்ளக கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் சீர்திருத்தம் செய்தல்

அவரது குடும்பத்தினருக்கும் சகபாடிகளுக்கும் என்ன ஆதரவு வழங்கப்பட்டது என்பது உட்பட நிமலராஜனின் கொலைக்கு எவ்வாறு பிபிசி பதிலளித்தது என்பது பற்றிய ஒரு பின்னோக்கிய உள்ளக மீளாய்வினை மேற்கொள்ளல். அச்சுறுத்தலின் கீழ் உள்ள ஊடகவியலாளர்களுக்கான ஆபத்தினை குறைப்பதற்கும், எதிர்காலத்தில் பதிலளிக்கும் திறனை மேம்படுத்தவும் கற்றுக் கொண்ட பாடங்களை நிறுவனமயப்படுத்துதல்.

### 5. குடும்பத்திற்கான ஆதரவு

குடும்பத்தினரது நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தேடலிற்கு ஆதரவு வழங்குதல் அத்துடன் குடும்பத்திற்கான நிதி உதவியினை உறுதிசெய்தல்.

நிமலராஜனுக்கும் ஏனைய கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் மதிப்பளிப்பதற்காக நினைவுகூரும் முயற்சிகளுக்கும் அத்துடன் உண்மை பற்றிய வரலாற்றுப் பதிவுகளை பாதுகாப்பதற்கும் ஆதரவு வழங்கல்.

உண்மையைக் கூறியதற்காக ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்படும் ஒரு உலகில் நிமலராஜன் படுகொலைக்கு பிபிசி இன் பதில் ஒரு முக்கிய முன்னுதாராணமாக அமையும். ஈடுபாடு தெளிவானதாகவும், தொடர்ச்சியானதாகவும் பலமானதாகவும் இருந்தால், தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதியாகாது.

ITJP என்பது இலங்கையில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் 2013லிருந்து பணியாற்றும் சர்வதேச சுயாதீன அமைப்பாகும்.

REDRESS என்பது ஒரு பன்னாட்டு மனித உரிமை அமைப்பாகும். இது சித்திரவதையிலிருந்து உயிர் பிழைத்தவர்களுக்கு நீதி மற்றும் இழப்பீட்டை வழங்குகிறது, குற்றவாளிகள் தண்டனை இன்றி தப்பிக்காமல் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கிறது, மேலும் சித்திரவாதத்தை ஒழிக்க சட்ட மற்றும் கொள்கை மாற்றங்களுக்காக வலியுறுத்துகிறது.

www.redress.org
www.itjpsl.com
www.jdslanka.org